917

Regd. M. 1803.

OFFICE OF THE ... 10 AUG 192

லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

Vol. 6. மலர் 6.	விபவஹு மார்கழிமீ டிசம்பர் 1928	No. 3. இதழ் 3.

பொருளடக்கம்.

1. பண்டைய பாரதப் பெருமை 85
2. சீனத்தில் கிறிஸ்து மதம் 86
3. காலஞ்சென்ற பனகால் ராஜா 91
4. காத்ரீன் டக்லஸ் 94
5. நட்டாஜி 97
6. தமிழ் முரசு 100
7. காசி 101
8. பத்திராசிரியர் குறிப்புகள் 105
9. மதிப்புரை 112
10. இந்திய மாதருலகம் 113
11. வெளிநாட்டு இந்தியர் 115
12. இந்தியப் பத்திரிகைகள்... 117
13. 'லக்ஷ்மி' வரவேற்பு 120
14. சுருட்டுக்குடியின் தீமை... 121
15. மணித்திரட்டு 123

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா அண்டு கோ., சென்னை.

வருட சந்தா, உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8.

அமெரிக்கன் சில்க் - - -

- - - அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கான பட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இரு பக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 6 மு நீளம். 40" அகலம்.

விலை ரூ. 6—8—0 தான்.

கிடைக்கவில்லையே ! என்று வருந்தவேண்டாம் ஏற்கனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்குக் குறைந்து வருவதால் முந்திக் கொள்ளுங்கள்.

முந்துங்கள் ! இதுவே தருணம் !!

ஓமுனியோஸா - -

- - - அங்கவஸ்திரம்

அழகான இமிடேஷன் சில்க். கலருக்த உத்திரவாதம். வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக் குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா **2-4.**

விலை ரூபாய் இரண்டேகால் தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6 மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப ஒரு டஜனுக்கு ஆர்டர் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, சென்னை.

லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஸ்தாபகர்—ஸ்ரீ. கே. எஸ். முத்தையா. ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

மலர் 6.	1928௵ டிஸம்பர்௴, விபவ௵ மார்கழி௴	இதழ் 3.

பண்டைய பாரதப் பெருமை.

(ஸ்ரீலஸ்ரீ. வேதாசல சுவாமிகள்.)

வளம் பழுத்த விளைநிலமே விழிதிரும்பும் வழியெல்லாம்
குளம் பெருக்கும் அருவிவருங் குன்றுகளே குலவுவன
இளம் பருவச் சோலைகளே கருங்காடே எங்குமாய்
வளம் பழுத்த மூதறிஞர் உயிராகும் உனக்கன்னாய்!

விரிந்த பெரும் ஞாலத்தில் வேறுபல தேயத்தில்
பிரிந்திருந்த மக்களெல்லாம் பேதையராய் இருந்த அந்நாள்
தெரிந்தபல கலைகளெல்லாம் தெளிவாக மிகவிளக்கி
வரிந்தனர் நின்மகார் எனில்உன் வளர்பெருமை சொலல் அரிதே !

அலையுலவும் வங்காளக் குடாக்கடலின் அடிக்கிடக்கும்
விலைவரம்பு காணாத முழுமுத்தும் மேலுயர்ந்த
மலையருவி கொழித்துவரும் மணிகளொடு பசும்பொன்னும்
தலையணிய பிறநாட்டார் தந்தனை இந்தியத் தாயே!

முன்னாளில் வாணிகத்தில் முதன்மைபெறு யவனர்களும்
தென்னாட்டில் உவரியெனும் துறைமுகத்தில் திரண்டுவந்து
வன்னமயில் நறுஞ்சாந்தும் மணியானை அணிமருப்பும்
இன்னபல அருஞ்சரக்கும் ஏந்துகவென் றீந்தனையே.

தொழில் நுட்பம் மிகச்சிறந்த துகளறுபட் டாடைகளும்
கொழும்பருத்தி யிலவம்பஞ் செலிமயிரில் கோவை செய்து
செழும்பாவின் நுரையெனவும் திகழ்பாம்பின் உரியெனவும்
ஒழுங்காகச் சமைத்தஉடை உலகமெலாம் நிலவியதே!

சீனத்தில் கிறிஸ்து மதம்*

சீனம் மிக்க புராதனப் பெருமை வாய்ந்த தேசம். கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூற்றுண்டுகளுக்கு முன்பே சீனர் பல துறைகளில் நாகரீகம் பெற்று வாழ்ந்தனர். எனினும் அவர்கள் இந்தியர்களைப் போல் மிகவும் சகிப்புத் தன்மை யுடையவர்கள். செருக்கும் பிடிவாதமும் இல்லாதவர்கள். "நாற்கடல் எல்லைக்குள் வாழும் மக்க ளெல்லாம் நம் சகோதரர்கள்" எனச் சீன மதம் 25 நூற்றுண்டுகளுக்கு முன்பே அவர்களுக்குப் போதனை செய்திருக்கிறது. இத்தகைய பரந்த போதனையைச் செவி மடுத்த ஒரு தேசத்தார் உலக மக்களையும் அவரது மதாசாரங்களையும் நேசியாதிருப்பரா? ஆகவே சீனர்களுக்கு எம்மதமும் சம்மதமா யிருக்கிறது. புத்தமதம், தாய்மதம், முகமதிய மதம், யூத மதம், ஆதிய மதங்க ளெல்லாம் வெகு காலமாகச் சீனாவில் நிலைபெற்றிருக்கின்றன. இம்மதாசிரியர்களைச் சீனர்கள் ஒரு பொழுதும் துன்புறுத்தியது மில்லை. சகிப்புத் தன்மை சீனர்களின்—ஏன்? ஆசியாக்காரர்களின்—பிறவிக் குணம் அன்றோ?

எனின், சீனர்கள் கிறிஸ்தவப் பாதிரிகளை மட்டும் இப்பொழுது வெறுக்கக் காரணமென்ன? இது ஒரு முக்கிய வினா. சுருவாக விடை யிறுக்க முடியாது. அமெரிக்கர் கூறுகிறபடி இது ஒரு சிக்கலான விஷயம்.

சுதந்தரம் நிறுவ, அமெரிக்கர் 1776-ல் ஒரே ஒரு புரட்சிதான் நடத்தினர். சீனாவிலோ பல புரட்சிகள் ஏக காலத்தில் தாண்டவமாடுகின்றன. அரசியற் புரட்சி, பொருளாதாரப் புரட்சி கைத்தொழிற் புரட்சி, கல்விப் புரட்சி, சமுதாயப்புரட்சி சமயப்புரட்சி என, அவை அறுவகையில் எழுந்திருக்கின்றன. சீனா சகல துறைகளிலும்இப்பொழுது உருமாற்றம் பெறுகின்றது. சென்ற சில வருஷங்களுள் சீன அரசாங்க அமைப்பில் மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேனாட்டுக் கல்வியின் பயனாய் பழைய சீன நாகரீகம் மாறி புதுச் சீனநாகரீகம் உருப்பெறுகின்றது. புராதன சமுதாய, சமய, ராஜீய அமைப்புகளை, சீன மேதாவிகள் தீவிரமாக ஆராய்ச்சி செய்கின்றனர். "பிழைபடாச் சமயம் உலகத்தில் உண்டா? மனித நிர்மிதமானஸ்தாபனங்கள் மாற்றக்கூடாதனவா?" என்னும் வினாக்கள் அன்னோர் மனதில் உதயமா யிருக்கின்றன. சீன அரசியல் சமூக சமயஸ்தாபனங்கள் ஆராய்ந்து பழுது பார்க்கப்படுகையில் பல திருத்தங்களும், மாற்றங்களும் ஏற்படுதல் கூடும். சீனத்தாரால் இயற்கைக்கு ஒப்பன வெல்லாம் கைக் கொள்ளப்படும். ஏனையுவை தாட்சண்ணிய மின்றி ஒழிக்கப்படும்.

II

சீனத்திலிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பி வரும் பாதிரிகள் சீனர்களின் புதிய மனோ நிலையை உய்த் துணராது, பழி தூற்றித் தம் வாழ்நாளை வீணாளாக்கு கின்றனர். அவர்களுள் சிறிது சாந்த குணமுடையோர் "கிழக்கு கிழக்கே; மேற்கு மேற்கே; இரண்டும் ஒரு நாளும் பொருந்தா" எனக் கூறி மன அமைதி பெறுகின்றனர்.

சூயஸ் கால்வாய்க்குக் கிழக்கே பத்துக் கற்பனைகள் கிடையா வென டாக்டர் ரூடியார்டு கிப்லின் கூறியது உண்மையே. ஆனால் பத்துக் கற்பனைகள் யாருக்கு இல்லை என்பது தான் கேள்வி. மேல் நாட்டாருக்கா? கீழ்நாட்டாருக்கா? கீழ்நாட்டாருக்கு வரும் மேல் நாட்டாருக்குத்தான் பத்துக் கற்பனைகள் இல்லை, அது மறுக்க முடியாத உண்மை.

சீனர்கள் ருஷியாவில் குடியேறுவதைப் பற்றி சான்பிரான்சிஸ்கோ நகரசபை அங்கத்தினர் ஒருவர் நகரசபையில் பேசியபொழுது "சீனர்களுக்கு ஆத்மாவே இல்லை" என பிரஸ்தாபித்தாராம். அதே புண்ணியவான் சீனக்குடியேற்ற ஆராய்ச்சிக் கமிட்டியார் முன் சாட்சியம் கூறுகையில் "சீனர்களுக்கு ஒருகால் ஆத்மா இருந்தாலும் அதை மீட்க முடியாது" என்று சொன்னாராம்!

மோட்சத்தைப்பற்றிக் கிறிஸ்தவப் பாதிரிகள் கூறுவன சீனர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே மோட்சமுண்டெனக் கிறிஸ்தவர்கள் சாதிக்கிறார்கள்.

---

*கல்கத்தா Modern Review மாசிகையில் ஸ்ரீ. சதீந்திர போஸ் வெளியிட்ட ஒரு கட்டுரையைத் தழுவி எழுதப் பட்டது.

"ஜிஹோவா ஒருவர்தான் கடவுள், கிறிஸ்து ஒருவரே அவதார புருஷர்; கத்தோலிக் அல்லது புராடஸ்டண்டு திருச்சபைகளே கடவுள் நெறி யுணர்த்தும் மார்க்கங்கள்" என்றும் அவர்கள் வாதிக்கின்றனர். ருஷிய, கிரேக்க அர்மீனிய வைதீக கிறிஸ்தவ திருச்சபைகளை யும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களில்லை. கிறிஸ்துவை நம்பாதவனுக்கு மோட்சமும் இல்லையாம். இத்தகைய பாதிரி மதத்தை நம்புமாறு சீனர்கள் அவ்வளவு அற்ப புத்திகளல்ல. மோட்ச வாயிலின் திறவுகோல் ஒரே ஒரு மதத்தாருக்கே சொந்தமானதென்று அவர்கள் நம்பவில்லை. ஆத்மீக வேட்கை தணிக்க அவர்கள் எல்லா மதங்களையும் ஆராய்ச்சிசெய்து பார்க்கிறார்கள். எவ்வெவருக்கு எந்த மதம் பிடிக்குமோ அதை ஒப்புக்கொள்கிறார்கள். அவர்கள் இயல்பாகவே மத வைராக்கிய முடையவர்களல்ல. கன்பூசியஸ் மதத்தில் வைராக்கிய பக்தியுடையவனும் தாய் ஆலயங்களிலும் பௌத்த ஆலயங்களிலும் தாராளமாகச் சென்று வணங்குகிறான். அதனால் அவனுக்கு மதப்ருஷ்டம் ஏற்படுவதுமில்லை.

சீனக் குடும்பங்களில் யாராவது இறந்தால் கன்பூசியஸ் வைதீகர்களும், தாய் மதாசிரியர்களும், பௌத்த குருமாரும் ஏக காலத்தில் சரமக் கிரியைகள் நடத்துகிறார்கள். மோட்சத்துக்குப் பல வழிகள் உண்டு; கன்பூசியஸ் மதப்படி அவ்வழி திறக்காவிட்டால் பிறமதங்கள் மூலமாவது அவ்வழி திறக்கப்படட்டும் எனக் கருதியே சீனர்கள் பல மதத்தினரைக் கொண்டு சரமக் கிரியைகள் நடத்துகிறார்கள்.

III

பதினெட்டாவது நூற்றாண்டில், பிரஞ்சுகாரர் இம்மண்ணுலகப் பொருளாதார நிலையை முக்கியமாகக் கருதினார்களேயன்றி மோட்ச உலகத்தின் பூகோள ஆராய்ச்சியில் இறங்கவில்லை யென்று ஒரு பெரியார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். என்னுடைய அனுபவத்தில் சீனர்களும் இந்த மண்ணுலக வாழ்க்கையில் அதிக கவலை செலுத்துகிறார்களேயன்றி, பொன்னுலக போகங்களைப்பற்றி வீண் கனவு காண்பதில்லை. சூட்சும உலக ஆராய்ச்சியில் தற்காலச் சீனர்களுக்குப் பற்றில்லை. அவர்கள் கருமமே கண்ணாக உழைக்கும் இயல்பினர்.

எனவே சீனத்தாரனைவரையும் கிறிஸ்தவராக்க முடியுமா? என்பது இது ஒரு பெரிய கேள்வி. எனக்கு ஜோசியம் கூற சக்தியில்லை. ஆகவே இவ்விஷயமாகச் சீனர்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் விளக்கி விடுகிறேன்.

ஒரு சீன மேதாவி கூறுவதாவது:—"முதன்முதலாக மாண்டி கார்வினோ என்னும் ரோமர் கத்தோலிக்கப் பாதிரி பீக்கிங் அத்தியாயட்சராக 1307-ல் சீனாவுக்கு வந்தார். அது முதல் கிறிஸ்துமதப் பிரசார வேலை வெகு மும்முரமாக நடந்து வருகிறது. அறு நூற்றாண்டு காலம் அவர்கள் தீவிரப் பிரசாரம் செய்தும் 1919-ல் 1,971, 918 கத்தோலிக்கர் இருப்பதாகவே தெரியவந்தது. வெகுகாலத்துக்குப் பின் வந்த புராடஸ்டண்டு பாதிரிகளுக்கு 1923 வரை 700,000 சீனர்களையே மதம் மாற்ற முடிந்தது. மதமாற்றப்போக்கு இவ்வாறாகவே மேலும் இருந்து வந்தால் 'நாஸ்திகரான" சீனர்களை யெல்லாம் கிறிஸ்தவராக்கப் பல யுகங்கள் வேண்டும். வாஸ்தவத்தில் கிறிஸ்தவர்களின் மதமாற்ற முயற்சி அவர்கள் விரும்பும் வண்ணம் பயனளிக்கப் போவதில்லை. இப்பொழுது மொத்த ஜனத் தொகையில் $133\frac{1}{2}$ பேருக்கு ஒருவர் விதமே கிறிஸ்து மதத்தில் சேர்ந்திருக்கின்றனர். கிறிஸ்தவர் அல்லாத சீனர்கள் தொகை கிறிஸ்தவச் சீனர் தொகையைவிட மிக விரைவாகவும் ஏறிவருகிறது.

அன்றியும் சீனத்திலிருக்கும் லட்சக் கணக்கான புராடஸ்டண்டு, கத்தோலிக்க கிறிஸ்தவர்க ளெல்லாம் உண்மைக் கிறிஸ்தவர்களுமல்ல. வயிற்றுச் சோற்றுக்காக கிறிஸ்தவர் ஆனவர் தொகையே மிகுதி. மிஷன் பள்ளிக் கூடங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் கிடைக்கும் விசேஷ சௌகரியங்களுக்காக, கிறிஸ்தவர் ஆனவர்கள் அனேகர். பைபில் போதனையில் பாவசாகி அவர்கள் கிறிஸ்து மார்க்கம் தழுவவில்லை. அத்தகையாரை அசல் கிறிஸ்தவர்கள் என்று சொல்ல முடியுமா?

IV

மதவிஷயத்தில் சீனர்கள் சமரஸ பாவனையுடையவர்கள் என்று ஏற்கனவே கூறியுள்ளோம். ஆதியில் வந்த கத்தோலிக்கப் பாதிரிகளை சீனர்கள் அன்புடன் வரவேற்றனர். சீன அரசர்களும் அவர்களுக்குப் பல வரி[illegible]

செய்தார்கள். தற்காலத்தில் கிறிஸ்தவர் மீது சீனர்களுக்கு வெறுப்புத் தோன்றக் காரணம் மத விஷயமல்ல; அரசியல் விஷயமேயாகும். ஆனால் அரசியல் காரணங்களால் அந்நியர்மீது பகைகொள்ளும் துர்க்குணம் மேனாட்டுச் சரக்கு என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். அது மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு உண்மை. அந்தத் துர்குணத்தை கீழ்நாட்டாரால் எளிதில் பரிகரிக்கவும் முடியாது.

சீனாவில் இப்பொழுது தேசியம் தாண்டவமாடுகின்றது. "சீனா சீனர்களுக்கே சொந்தம்" இதுதான் சீனர்களின் தற்காலத்திய மூல மந்திரம். தேசிய வுணர்ச்சி மேற் பரப்பானதல்ல. ஒவ்வொரு சீனன் இரத்தத்திலும் அது படிந்திருக்கிறது. அதற்கு தேசிய வெறியென்றும் பெயர் சூட்டலாம். தேசிய வெறியர் வெளிநாட்டாரை வெறுப்பது இயல்பே. தேவையுண்டாகும் போதெல்லாம், வேலை நிறுத்தம், பகிஷ்காரம், உதவி மறுத்தல் ஆகிய கருவிகளைத் துணைகொண்டு அவர்கள் வெளிநாட்டாரோடு ஒத்துழைப்பது மில்லை. கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு அளித்துவந்த ஆதரவையும் அவர்கள் நிறுத்தி விட்டனர். இந்த ஒத்துழையாமை விஷயத்தில் வடநாட்டாரும், தென்னாட்டாரும், அமிதவாதிகளும், மிதவாதிகளும், பிற்போக்குக்காரரும் கட்சிபேதமின்றி ஏக அபிப்பிராய முடையவரா யிருக்கின்றனர். கிறிஸ்துவின் பெயரால் வெள்ளையர் செய்யும் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் சீனர்களுக்குப் பொறுக்க முடியவில்லை. "கிறிஸ்தவர்கள் யோக்கியர்களும், உண்மை யுடையவர்களும், கருணையுள்ளவர்களுமானால் தம் நாட்டிலேயே அவர்கள் இருக்கட்டும். இங்கு வந்து ஏன் தொந்தரவு செய்யவேண்டும்?" என அவர்கள் வெளிப்படையாகக் கூறுகிறார்கள். ஒத்துழையாமையே சீனாவின் கதிமோட்சத்துக்கு வித்தென அவர்கள் மனப்பூர்வமாக நம்புகிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு இடங்கொடுத்து, ஏகாதிபத்தியச் சனியனை, சீனாவில் பிரதிஷ்டை செய்ய அவர்கள் விரும்பவில்லை. கிறிஸ்து மதம் ஏகாதிபத்தியத்தின் மேற்பூச்சு. எனவே ஏகாதிபத்திய மேற்பூச்சுடைய பாதிரிகளைத் தேசிய வெறிகொண்ட சீனர்கள் ஆதரிப்பார்களா?

"யானைவரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்றபடி முதன் முதலாக பாதிரிகள் ஒரு நாட்டில் கால் வைப்பர். அவர்களைத் தொடர்ந்து ஏகாதிபத்திய கொள்ளைக் காரர்களும் செல்வர். உண்மையில் பாதிரிகள் ஏகாதிபத்திய கொள்ளைக் கூட்டத்தாரின் ஏஜண்டுகளே.

"தேவனால் தேர்ந்தெடுக்கப் பட்ட பாதிரிகள் சீனதேச சட்டத்துக்கு விரோதமான அநியாய ஒப்பந்தங்களுக்கு ஏன் உரிமை பாராட்ட வேண்டும். தம் போக்கில், தனிமையாக, எவர் துணையும் எதிர் பாராமல் தெய்வத் தொண்டாற்ற வேண்டிய பாதிரிகள் ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்களின் மதிப்பையும் உதவியையும் ஏன் எதிர் பார்க்க வேண்டும்." என ரேவரண்டு எட்வேர்டு தாம்சன் என்பார் மிக ஆணித்தரமாகக் கேட்கின்றார். தெய்வத் திருத்தொண்டாற்றுவதற்கும் பீரங்கிகளும், விஷவாயுக்களும், வெடிக் குண்டுகளும் இன்றியமையாதனவா?

"தேவனால் தேர்ந்தெடுக்கப் பட்ட" இத்தகைய 7000 பாதிரித் துருப்புகள் சீனாவில் இருக்கின்றன. அவர்களனைவர் உள்ளத்தும் நிறத் திமிரும் ஏகாதிபத்தியச் செருக்கும் குடிகொண் டிருக்கின்றன. ஏல்—இன்—சைனா (Yale—in—China) தலைவரா யிருந்த ஸ்ரீ. எட்வேர்டு எச். ஹ்யூம், நியூயார்க்கு டைம்ஸ் பத்திரிகையில் எழுதி யிருப்பதாவது:—"பாதிரிகள் ஒப்பந்த எல்லைக்கு அப்பாலுள்ள இடங்களில் தாராளக் கையாட்சி செய்கிறார்கள். ஒப்பந்த ஸ்தலங்களி லிருப்பவர் வரி செலுத்துவதில்லை. வெளி நாடுகளி லிருந்து ஏற்றுமதி செய்யும் சாமான்களுக்குக் குறைந்த சுங்கக் கூலியே கொடுக்கிறார்கள்! இவைகள் பாதிரிகளும் ஏனைய வெள்ளையர்களும் அனுபவிக்கும் சுதந்தரங்கள். பாதிரிகளுக்கு மட்டும் வழங்கப் பட்டிருக்கும் விசேஷ சுதந்தரங்களும் பலவுண்டு. அத்தகைய சுதந்தரங்கள் பௌத்த முகமதிய மதாசிரியர்களுக்குக் கிடையா. அவைகளை ஸ்ரீ. ஹ்யூம் பின்வருமாறு விளக்கியிருக்கிறார். "உள் நாடுகளில் பாதிரிகள் யதேச்சையாக பிரயாணம் செய்கிறார்கள். சொத்துகளும் வாங்கிக் குடி யிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களான சீனர்களைப் பிறர் தொந்தரவு செய்யாமல் காப்பாற்ற அதிகாரமும் பெற்றிருக்கிறார்கள். ஆலயப் பாதுகாப்பு வரி அவர்கள் செலுத்துவதில்லை."

ஆகவே கிறிஸ்து மதம் அந்நிய நாட்டு அரசாங்கங்களால் காக்கப்படும் ஒரு மதமென

சீனத்தலைவர்கள் எண்ணுவது தவருகுமா? "சீனதேச சட்டப்படி சர்வஜனங்களும் அனுபவிக்கும் மனச் சாட்சி சுதந்தரம் மட்டும் அவர்களுக்குப்போதாதா?" என்று சீனர்கள் கேட்கிருர்கள். "ஆத்மீக வளர்ச்சிக்குரிய ஒரு இயக்கத்துக்கு ஆத்மீக அஸ்திவாரமே இருக்க வேண்டும். கடற் படையும் தரைப் படையும் அஸ்திவாரங்களாக இருத்தல் கூடாது" எனவும் வாதிக்கிருர்கள்.

V

சீனர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஒரே நோக்கத்துடன் பாதிரிகள் சீனத்துக்குச் செல்லுகிருர்கள் என்று சொல்லப் படுகிறது. இது வெறும் ஹம்பக். சீனுவில் 24 உயர்தரப் புராடஸ்டண்டு கல்லூரிகள் இருக்கின்றன. அக்கல்லூரிகளில் மொத்தம் 30,000 பேர்வரை கல்வி கற்று வருகிருர்கள். கத்தோலிக்க கலாசாலைகளும் சில இருக்கின்றன வாயினும் அவைகளைக் கிறிஸ்தவக் கலாசாலைகளெனப் புராடஸ்டண்டார் ஒப்புக்கொள்வதில்லை. இந்தப் பாதிரிக் கலாசாலைகளைப்பற்றி சீனத் தலைவர்கள் என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிருர்கள் என்று பார்ப்போம்.

"கிறிஸ்தவப்பள்ளிக் கூடங்கள் தேசிய உணர்ச்சியைக் கெடுக்கின்றன. மாணவர் மனதில் தேசபக்தி உதயமாவதில்லை. அடிமைப் புத்தி அவர்களுக்குள் விருத்தியாகிறது. சீனக் கலைகளிலும் இலக்கியங்களிலும் அவர்களுக்கு வெறுப்பு உண்டாகிறது. ஆங்கில இலக்கியத்திலும் கலைகளிலும் அமிதபக்தி ஏற்படுகிறது. சிறுவர் சிறுமிகளை மத மாற்றம் செய்வதே அக்கல்லூரித்திட்டங்களின் அந்தரங்க நோக்கம். தேசிய வுணர்ச்சியும் தேசபக்தியும் உண்டாவதற்குப் பாதிரிப் பள்ளிப் படிப்பு ஏற்றதல்ல. ஆகவே சுயமதிப்புள்ள சீனர்கள் தம் மக்களைப் பாதிரிப்பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புதல் கூடாது."

ஆகையால் வெளிநாட்டுப் பள்ளிக் கூடங்களை யெல்லாம் சர்க்கார் வசப்படுத்த கண்டிப்பான சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டங்களின்படி மிஷன் பள்ளிக் கூடங்களிலெல்லாம் சர்க்கார் ஏற்படுத்தும் திட்டப்படியே போதனை நடத்தவேண்டும். சர்க்கார் அதிகாரிகள் குறிப்பிட்ட காலங்களில் பள்ளிக்கூடங்களைப் பரிசோதனை செய்வார்கள். பள்ளிக்கூட நிருவாகம் ஒரு போர்டாரால் நடத்தப்பட வேண்டும். அந்தப் போர்டில் சீன மெம்பர்கள் பெரும்பான்மையாக இருக்க வேண்டும். தலைவரும் ஒரு சீனராகவே இருக்கவேண்டும். இந்தப் போர்டார் அனுமதியின்றி ஆசிரியர்களை நியமித்தல் கூடாது. பள்ளிக் கூடங்களிலும் கிறிஸ்தவக் கோயில்களிலும் கட்டாய மதபோதனை செய்யக்கூடாது.

இந்தச் சட்டங்களின் நகல் எல்லா மிஷன் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாக் கட்சியாரும் ஒப்புக்கொண்டும் இருக்கிருர்கள். ஒரு சில மிஷன் பள்ளிக்கூட அதிகாரிகள் இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வில்லை யெனினும், பெரும்பான்மையானவர்கள் கீழ்ப்படிந்துவிட்டனர். தற்காலம் லிங்னன் சர்வ கலா சங்கம் என அழைக்கப்படும் காண்டன் கிறிஸ்தவ கலாசாலையும் யூச்சாஸ் மத்திய சீன சர்வ கலா சங்கமும் நாங்கின் சர்வ கலா சங்கமும் எதிருரையாடாமல் சர்க்கார் சட்டங்களை ஒப்புக்கொண்டு விட்டன. இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய விருப்பமில்லாதவர்கள், சுயேச்சையான சர்வ கலாசாலையினுலேயே சீனத்துக்கு மிகுந்த நன்மை யுண்டாகுமென்று மழுப்புகிருர்கள். ஆனுல் சீனர்கள் இந்த மழுப்பு வார்த்தைகளால் மயங்கிவிட மாட்டார்கள்.

மேலே கூறிய வரலாறுகளை இந்தியர்கள் கவனிக்க வேண்டியது மிக முக்கியமாகும். இந்தியாவில் மிஷன் பள்ளிக்கூடங்கள் புற்றீசல்கள்போல் நிரம்பியிருக்கின்றன. மிஷன் பள்ளிக்கூடமில்லாத பிரதேசமே இந்தியாவில் இல்லையென்று சொல்லலாம். தேச மக்களுக்கு அப்பள்ளிக் கூடங்கள் மீது யாதொரு அதிகாரமுமில்லை. இந்தியக் குடிகளில் பெரும்பாலார் கிறிஸ்தவர் அல்லாதார். இந்தியக் குடிகள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து 30 லட்சம் ரூபா சர்க்காரால் அங்கிலிக்கன் மிஷன் இலாகாவுக்கு வருஷா வருஷம் அளிக்கப்படுகின்றது. கிறிஸ்தவர்களல்லாதார் பணத்தைக் கிறிஸ்தவர்களுக்கு அளிப்பது அநியாயமல்லவா? அந்த இலாகாவை மேல்பார்க்கும் அதிகாரம் இந்தியர்களுக்கு அளிக்கப்படாவிட்டாலும் இதன் நிருவாகத்தில் இந்தியர்களுக்கு ஒருசிறு பொறுப்பாவது இருக்கவேண்டாமா? மிஷன் பள்ளிக் கூடங்களை இந்திய மயமாக்கி தேசிய விருத்திக்கு உதவியான பாடத்திட்டங்களை ஏற்படுத்த வேண்டியது தேச முன்னேற்றத்துக்கு இன்றியமையாததாகும்.

VI

பாதிரிமார் கண்ணீர்ப் பிரவாகத்திலே அமெரிக்கா அழிந்துவிடும்போல் தோற்றுகிறது. கீழைத் தேசங்களில்—விசேஷமாக சீனத்தில் கிறிஸ்துமதம் அழியத் தொடங்குவதைப் பார்த்து அவர்கள் மிகச்சீற்றம் கொள்ளுகிறார்கள். சீனத்தைக் கிறிஸ்தவ மயமாக்கி விடலாமென்ற எண்ணம் விவேகிகளான பல அமெரிக்கர் மனதை விட்டு ஒழிந்து விட்டது. தம் சொந்த நாட்டில் கிறிஸ்து மதம் விருத்தியடையாதது கண்டு அவர்கள் மிக மனம் வருந்துகிறார்கள். அமெரிக்காவில் கிறிஸ்து மதத்தில் 186 வகுப்புகள் இருக்கின்றன. அவ் வகுப்புக் கிறிஸ்தவர்களில் 100-க்கு 30 பேர் கூட ஆலயங்களுக்குச் செல்வதில்லை. பாதிரிமார் பிரசங்கங்களைக் கேட்க ஆட்கள் கூடுவதுமில்லை. வருஷா வருஷம் ஆலய வணக்கம் செய்வோர் தொகை தேய்ந்து மாய்ந்து வருகிறது. சமீபத்தில் வெளி வந்த ஒரு கணக்கின்படி, கிறிஸ்தவ திருச்சபை அங்கத்தினர் தொகை வருஷா வருஷம் 50,000 வீதம் குறைந்து வருகிறது. கிறிஸ்து மதம் உயிர்த் திருப்பதே சந்தேகமாய்விட்டது. விஞ்ஞான ஆராய்ச்சி உண்மைகள் வெளியாகுந் தோறும் பாதிரிமார் செல்வாக்குக் குறைந்து போகிறது. எனவே சீனர்கள் கிறிஸ்து மதத்தை வெறுப்பதற்கு அமெரிக்கர் வருந்துவானேன் ?

ஹென்றி போர்டு.

அவர் மேன்மையடைந்ததற்குக் காரணமாயிருப்பவை அவரிடமுள்ள இரண்டு அரிய குணாதிசயங்களாகும். முதலாவதாக, ஹென்றி போர்டு வேலையை விளையாட்டென்றே கருதுகிறார். சிறுவர்கள் விளையாட்டில் எத்துணை மகிழ்ச்சியடைகிறார்களோ அத்துணை மகிழ்ச்சி அவர் தமது வேலையில் அடைகிறார். "வேலை" என்பதற்குச் சாதாரணமாய் ஜனங்கள் கொள்ளும் பொருள் அவருக்குத் தெரியவே தெரியாது. அவர் என்ன வேலை செய்தாலும் வாழ்க்கை இன்பத்தில் ஒரு பகுதியாக அதைக் கருதுகிறார்.

இரண்டாவதாக, அவர் எந்தவேலை தொடங்கினாலும் அதில் தம்மை முழுமையும் ஈடுபடுத்தி விடுகிறார். "மற்றவர்கள் எப்படிச் சொல்லுகிறார்கள்" என்பதை அவர் பொருட்படுத்துவதில்லை. ஒவ்வொன்றையும் தாமே ஆராய்ச்சி செய்து முடிவு காண்கிறார். நாகரிக உலகத்தை அதிசயிக்கச் செய்த ஒரு பெருந் தொழிலின் தலைவராயினும், அவர் இன்னும் மாணாக்கராகவே யிருக்கிறார். ஹென்றி போர்டின் மோட்டார் தொழில் ஹென்றி போர்டு மயமானதே யாகும். அதில் அவர் பிரதிபலிக்கிறார். அதில் ஒவ்வொரு பகுதியிலும் ஹென்றி போர்டைக் காணலாம்.

ஆனால், இவை யெல்லாம் மனிதனிடம் ஏராளமான சக்தி சேகரிக்கப்பட்டிருந்தாலன்றி முடியாத காரியங்கள். ஹென்றி போர்டினிடம் அத்தகைய சக்தி, உழைப்புத்திறமை ஏராளமாக இருக்கிறது. அவரை மனித வடிவில் உள்ள வெடி மருந்துத் தொழிற்சாலை என்று கூறலாம். அவர் சில சமயம் அதிவேகமாகக் கிளம்பி ஆகாயத்தில் பாயும் சீறுவாணத்தைப் போன்றவரா யிருக்கிறார். அவருடைய சக்தி அவ்வளவு அபாரமானது.

ஹென்றி போர்டின் அசாதாரணமான திறமை வேறொரு சாதாரண மனிதனிடம் இருந்தால், அவன் மேற்படி சீறுவாணத்தைப் போலவே 50 வயதுக்குள் முழுதும் எரிந்து விழுந்து விடுவான். 40 வயதுக்கு மேலேயே அவனுடைய திறமை குறையத் தொடங்கிவிடும். 50 வயதுக்கு மேல் உயிர் வாழ்ந்தாலும் வெறும் நடைப் பிணமாகவே இருப்பான். ஆனால் ஹென்றி போர்டோ இன்றைய தினமும் நல்ல இளமைப் பிராயத்தினரைப் போல் வேலை செய்து வருகிறார். எனவே அவருடைய நீடித்த திறமைக்கு—குறையாத அபார சக்திக்கு ஏதோ இரகசிய காரணம் இருக்க வேண்டுமல்லவா? அவை எவை ? (1) ஹென்றி போர்டு தேகப்பயிற்சியில் கவனம் செலுத்துபவர்; அதுதான் இரகசியம். (2) ஹென்றி போர்டு காலை உணவு அருந்துவதில்லை (3) அளவுக்கு மீறி உணவருந்தி அவர் மூளையில் தடிப்பேறவில்லை. (4) அவர் மதுபானம் செய்வதில்லை. (5) அவர் புகையிலையை எந்த வடிவிலும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. (6) இந்தக் கெட்ட வழக்கங்களினால் அவர் மனம் மயக்க முறவில்லை. (7) இருபத்தைந்து வயதில் எவ்வளவு உற்சாகமுள்ள இளைஞரா யிருந்தாரோ அப்படியே இன்று மிருக்கிறார். வாழ்க்கையில் அவருடைய மகிழ்ச்சியும், உற்சாகமும் சிறிதும் குன்றவில்லை.

அவர் சேர்த்துள்ள குபேர சம்பத்துங்கூட அவரைச் சிறிதளவும் மாற்றவில்லை. அவர் இளம் வேட்டை நாய் ஒன்றின் தேக முடையவரா யிருக்கிறார். அவசியம் நேர்ந்தால் தாவிக் குதிக்கவும், ஓடவும் அவரால் முடியும். அவர் வேலை செய்வதை நிறுத்தி ஓய்வாகக் காலங் கழிக்க வேண்டு மென்று யாராவது சொன்னால் அவர் சிரிக்கிறார். "வேலையில் அவருக்குள்ள பிரியமே அவரை அறுபதாம் வயதில் இளைஞராக வைத்திருக்கிறது."

—" பிஸிகல் கல்சர் "

காலஞ் சென்ற

பனகால் ராஜா.

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

துன்பம் தொடர்ந்தே வரு மென்பார்கள். நமது இந்தியத்தாய் விஷயத்தில் இப்பழமொழி மிகவும் பொருத்தமாக இருக்கிறது. லஜபதி மரணத்தால் நேர்ந்த நடுக்கம் நீங்கா முன்னம் அந்தோ! பனகால் ராஜாவும் போய்விட்டாரே! இவ்வாறு ஒரு பேரிடி விழுமென்று யார்தான் எண்ணி யிருந்தார்கள். முதுமையில் இளமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விருந்த நமது ராஜா ஸாஹிப், ஐந்து நாள் நோயினால் ஆருயிர் துறந்தது தென்னாட்டின் துரதிர்ஷ்டமே யாகும்.

சமத்துவம் சகோதரத்துவம், சுதந்தரம் ஆதிய மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்கெனத் தோன்றிய ஜஸ்டிஸ் கட்சியை, நமது ராஜா ஸாஹிப் வெகு திறமையாக நடத்தி வந்ததினால், அக்கட்சியைத் தோற்றுவித்த டாக்டர் நாயர், ஸர் தியாகராயர் முதலியோர் மரணத்தால் நேர்ந்த விபத்தைத் தென்னாட்டார், அவ்வளவாக உணரவில்லை. இப்பொழுது ஒப்புயர் வில்லா உத்தமத் தலைவர் மறைந்துவிட்டதினால் தென்னாட்டாரெல்லாம் திகைப்புற்றிருக்கின்றனர். ராஜா ஸாஹிபின் அரசியல் எதிரிகளா யிருந்த இதரகட்சித் தலைவர்களும் அவரது அரிய குணங்களை ஒப்புக்கொண்டு, அவரது மரணம் தென்னாட்டுக்குப் பரிகரிக்க முடியாத ஒரு பெரு நஷ்ட மென்று ஒரு முகமாக அபிப்பிராயப் படுவதினாலேயே தென்னாட்டாரெல்லாம் திகைப்புற் றிருக்கின்றனர் என்று பொதுப்படையாகக் கூறினோம். அவரது தலைமை ஸ்தானத்தில் இடம் பெறு தற்குரிய, ஒரு உத்தமர் தென்னாட்டில் இல்லை யென்றே சொல்லலாம்.

நமது ராஜா ஸாஹிப் பழைய திருக்காளத்தி அரசர் மரபில், 1866-வது வருஷத்தில் பிறந்தார். அவரது குடும்பத்தார் மிகவும் தெய்வ பக்தி யுடையவர்கள். அந்த அருங் குணம் நமது ராஜா அவர்களிடத்தும் மிகுதியாக விளங்கியது. அவர் ஒரு அதிதீவிர சீர்திருத்தக்காரர் ஆயினும் எம்மதத்தையும் இழித்துக் கூறியதில்லை.

மாறாக, ஹிந்து மதத்திலும் இந்தியக் கலைகளிலும் அவர் மிகவும் பற்றுடையவராகவிருந்தார்.

அக்கால வழக்கப்படி, இளமையில், தாய் மொழியான தெலுங்கையும், கலை மொழியான சம்ஸ்கிருதத்தையும் அவர் ஐயந் திரிபறக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். சம்ஸ்கிருதத்தில் பேசும் சொல்லாற்றலும் அவருக்குண்டு.

அவரது புத்தி தீட்சண்யத்தை யுணர்ந்த அவரது பெற்றோரின் உறவினர்கள் அவருக்கு ஆங்கிலக் கல்வி புகட்டுமாறு வற்புறுத்தினர். ஆங்கிலக் கல்வி கற்றோர் சிலரை நமது ராஜாவும் சந்திக்கவே ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கும் உண்டாயிற்று. எனவே 1882-ல், தமது 16-வது வயதில், அக்காலத்தில் ஆங்கலோ வர்னகுலர் ஸ்கூல் என வழங்கிய, தற்காலத்திய திருவல்லிக்கேணி ஹைஸ்கூலில் சேர்ந்தார். சேர்ந்த நான்காவது வருஷத்தில் பழைய மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி, உயர்தரக் கல்வி கற்கும் பொருட்டு சென்னை ராஜதானிக் கல்லூரியிற் பிரவேசித்தார். இரசாயன சாஸ்திரத்தை இஷ்ட பாட

மாகக் கொண்டு, 1893-ல் பி. ஏ. பட்டம் பெற்றார். அத்துடன் அவர் திருப்தி பட்டு நின்றுவிடவில்லை, மீண்டும் கற்கத் தொடங்கி, 1899-ல் தத்துவ சாஸ்திரத்திலும் திராவிட பாஷைகளிலும் எம். ஏ. பட்டம் பெற்றார். அவர் அரசியல் வாழ்வில் ஈடுபடாமல் அக்காலத்திலேயே, கல்வித் துறையில் புகுந்திருந்தாலும், உலகம் போற்றும் ஒரு உத்தம பண்டித சிகாமணியாய் விளங்கி யிருப்பார் என்பது உறுதி.

ஆனால் சுதந்தரப் பிரியரான அவர் சேவா விர்த்தியில் ஈடுபட வில்லை. இள வயதிலேயே வட ஆற்காடு ஜில்லா போர்டில் அங்கத்தினராகி, பொது ஜன சேவை செய்யத் தொடங்கினார். 1912-ல் தென்னாட்டு ஜெமீன்தார்கள் பிரதிநிதியாக, அக்காலத்திய சாம்ராஜ்ய சட்ட சபையில் அவர் ஸ்தானம் பெற்றது முதல், அவரது பேராற்றல் வெளியாகத் தொடங்கிற்று. அப்பொழுது இராஜப் பிரதிநிதியாக இருந்த லார்டு ஹார்டிஞ்சு, நமது ராஜா ஸாஹிபின் குணதிசயங்களைப் பற்றி மிகவும் வியந்து பேசியுள்ளார். 1915-ல் மூன்றாவது ஆந்திர மகா நாட்டின் தலைவராய்த் தேர்ந் தெடுக்கப்பட்டார். அப்பொழுது அவர் நிகழ்த்திய தலைமைப் பிரசங்கமானது அவரது ஆழ்ந்த தேச பக்தியையும், பாண்டித்தியத்தையும், நுட்ப புத்தியையும் நன்கு விளக்கிக் காட்டிற்று. கோவையில் கூடிய முதல் பிராமண ரல்லாதார் மகா நாட்டில் அவர் அக்கிராசனம் வகித்துப் பேசிய வீரச் சொற்கள் இன்றும் நம் காதில் தொனிக்கின்றன. டாக்டர் நாயரும், சர். தியாகராயரும், பிராமணரல்லாதார் இயக்கம் ஸ்தாபனம் செய்த பொழுது, நமது ராஜாவும் அவர்களுடன் சேர்ந்து, அவ்வியக்கம் வெற்றியடைவதற்காக, அரும்பாடு பட்டார். மாண்ட்-போர்டு சீர் திருத்தம் வெளிவருவதற்கு முன் நடைபெற்ற பார்லமெண்டு விசாரணைக்கமிட்டி முன் சாட்சியம் கூறுவதற்காக, தென்னாட்டு ஜெமீன்தார் பிரதிநிதியாக அவர் இங்கிலாந்து சென்றார்.

அப்பால் மேற்படி சீர்திருத்தம் அமுலுக்கு வந்த காலத்தில், புதிய சென்னைச் சட்ட சபையில் அங்கத்தினராகி, முதன் மந்திரி பதவி பெற்று, 6 வருஷம் தொடர்ச்சியாக உத்தியோகம் நடத்தினார். பெயர் பெற்ற இந்தியத் தலைவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற இந்திய தேசிய காங்கிரசுக்கு, எதிரிடையாக ஸ்தாபனம் பெற்ற ஒரு கட்சியின் தலைவரான நமது ராஜா ஸாஹிபை, அவர் மந்திரியா யிருந்த காலத்தில் தேசியப் பத்திரிகைகளும், காங்கிரஸ் வாதிகளும் தூற்றியதில் அதிசயம் ஒன்றுமில்லை. முன்னோர் வழிக்கு முரணான வழிகளில் செல்வோர்க் கெல்லாம் அத்தகைய வரிசைகள் கிடைப்பது இயல்புதான். எவ்வளவு உத்தம குணங்கள் உடையவர்களும் சில சந்தர்ப்பங்களிலே கோபதாபங்களுக்கு ஆளாவது உலக வழக்கு. மாமூலோடு போராடி, பழையன கழியப் புகுந்த சீர்திருத்தக்காரர் யார்தான் உலகப் பழிப்புக்குப் பாத்திரராக வில்லை? உலக சரித்திரத்திலே அதற்குப் பல சான்றுகளும் மலிந்து கிடக்கின்றன. அந்த போர்ச்சந்தடிகள் ஒழிந்து கோபதாபங்க ளெல்லாம் நீங்கி, மக்கள் மனம் அமைதி யடையும் போது உண்மை நிலை தானாகவே தோன்றா நிற்கும். நமது ராஜா ஸாஹிபும் தாம் நடத்திய அரசியல் சமூகப் போர்களி லிருந்து விடுதலை பெற்று, ஈராண்டு ஓய்வெடுத்து, இறுதியில் இறைவனடி சேர்ந்த பிறகு, அவரது உண்மைக் குணங்க ளெல்லாம் வெளிப்பட்டு விட்டன. தேசத்துரோகி, சமயத் துரோகி, பிராமணத் துரோகி, சர்க்கார் தாசன் எனத் தூற்றப்பட்ட தெல்லாம் அபாண்டப் பழியென இப்பொழுது வெட்ட வெளிச்சமாகி விட்டது. அதற்கு அவரது அரசியல் எதிரிகள் கூறுவனவே அத்தாட்சி. அவர்கள் கூறுவனவற்றைக் கவனிப்போம்.

திரு. சத்தியமூர்த்தி.

"பனகால் ராஜா திடீரென மரண மடைந்ததை யறிந்து நான் மிக வருந்துகிறேன். ஒரு நாளாவது நான் ராஜா அவர்களோடு ஒத்துப் போனது கிடையாது. எனினும் அவரது பாண்டித்தியத்தையும், மேதகைக் குணங்களையும், நுட்பமான விவேக புத்தியையும் நான் மிகவும் பாராட்டுகிறேன். எனக்குத் தெரிந்த இந்தியர்களில் அவரே ஒரு சிறந்த ராஜ தந்திரி. அவர் ஒரு வகுப்பு வாதியா யிருந்தது தேசத்தின் துரதிர்ஷ்டமே யாயினும், வைத்திய இலாகாவை இந்திய மயமாக்கும் பொருட்டு அவர் சர்க்காரோடு அதி தீவிரமாகப் போர் தொடுத்தார். தன் மனச் சாட்சிப்படி, தன் தாய் நாட்டுக்குத் தொண்டாற்றிய அந்த இந்தியப் பெரியாரை, நான் மிகவும் பாராட்டிப் போற்றுகிறேன்."

திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார்.

"எங்களுள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்ட பிறகும் நாங்கள் நண்பர்களாகவே இரு

துவந்தோம் அவர் மிகத் திறமையாகத் தன் கட்சியை நடத்தினர். அவரது மரணத்தால் அக்கட்சிக்கு மீட்க முடியாத நஷ்டமேற்பட்டு விட்டது. அவர் மிகுந்த திறமையும், ராஜீய விவேகமும் வாய்ந்தவர். ஒரு தலைவருக்கு வேண்டிய குணங்களும், சமர்த்தும், மிகுந்த ராஜ தந்திரமும் பொருந்தியவராக விளங்கினர். அவர் தமது கட்சியை மிகுந்த வெற்றியுடன் நடத்தி வந்தது மன்றி, இன்னும் அதிக சாமர்த்தியத்துடனும், தீரத்துடனும் அதிகார வர்க்கத்தினருடன் போராடினர். அவர் வகுப்புவாத முறையை மேற்கொண்டிருந்தும், எவரும் எதிர் பார்க்கக் கூடியதற்கு அதிகமாக அதிகார வர்க்கத்தினருடன் போராடி வெற்றி பெற்றிருக்கிறார். அவர் இறந்தது சென்னைப் பொது ஜன வாழ்வுக்கு ஒரு பெரிய நஷ்டமாகும். அவர் மௌனமாக அதற்கு (பொது ஜன வாழ்வுக்கு) பக்க பலமாக இருந்தார். அவர் என்னை அநீத வழியில் தாக்கிப் பேசியதில்லை. நானும் அவரை அநீத வழியில் தாக்கிப் பேசவில்லை."

திரு. என். ஸ்ரீநிவாஸாச்சாரியார்.

"பனகால் ராஜா மரணத்தினல் பிராமணரல்லாதார் கட்சியார் மட்டுமென்றி, தென்னிந்தியர் அனைவருமே ஒரு விவேகமுள்ள தேசபக்தரையும், ஹிந்துமத சம்பிரதாயங்களை நன்குணர்ந்த ஒரு கனவானையும் இழந்து விட்டனர். கொஞ்ச காலத்துக்கு முன், நல்லெண்ண முடைய ஒரு நண்பர் கூறியது போல், தென்னிந்தியாவில் மூளைவலியுள்ள அரசியல் வாதி அவர் ஒருவரே யாவர். சந்தர்ப்ப தோஷத்தால் அவர் வகுப்புக் கட்சியில் ஈடுபட நேர்ந்த தெனினும் தன் உத்தியோக காலம் முழுதும் அவர் வெகு நிதானமாகவே நடந்து வந்தார். அறநிலையப் பாதுகாப்பு மசோதாவில் அவர் எதிர்பாராத சில இடர்ப்பாடுகள் உண்டாயின வெனினும், சந்தர்ப்பம் அளிக்கப்பட் டிருந்தால், அவர் யாவற்றையும் சரிப்படுத்தி யிருப்பார் .மந்திரியான இரண்டாவது வருஷத்தில் சென்னையில் கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில், பிராமணர்கள் நமது மூத்த சகோதரர்கள் என்றும், வீணே அவர்களைத் திட்ட வேண்டா மென்றும் அவர் பிராமண ரல்லாதாரிடம் விண்ணப்பம் செய்ததை அநேகர் அறிந்திருக்கலாம். வைத்திய இலாகாவில் இருந்த இந்தியர்களுக்காக (அவர்களில் பெரும்பாலார் பிராமணரா யிருந்தும்) அவர் சர்க்காரோடு மிகத் தைரியமாக போராடினர். காலத்துக் கேற்ற கோலம் கொள்ளும் அற்ப குணம் அவரிடம் கிடையாது. சமஸ்கிருதத்தில் அவர் பெற்றிருந்த பாண்டித்தியத்தினல், மதாச்சாரியர்களிடத்தும், ஹிந்துக் கலைகளிடத்தும் அவருக்கு மிகுந்த அபிமானம் இருந்து வந்தது. அகில இந்திய பிராமணர் சங்கத்தின் உபதலைவர் ஹோதாவிலும், 1927ல் சென்னையில் கூடிய அகில இந்திய வர்ணாச்சிரம தர்ம மகா நாட்டுத் தலைவர் ஹோதாவிலும், பனகால் அரசர் மரணத்தால் நானடைந்த ஆற்றொணுத் துயரை வெளியிடுகிறேன். தென்னிந்தியாவிலுள்ள பிராமணர்களும், ஸநாதந தர்மிகளும் என்னைப் போலவே துயருறுவார்கள் என்றும் நம்புகிறேன்."

திரு. சிங்காரவேலு செட்டியார்.

"பனகால் அரசர் இறந்தது தென்னாட்டுக்குப் பெரும் நஷ்டமே. சென்னையில் நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தக் கலவர காலத்தில் தலைவர்களான ஸ்ரீமான்கள், திரு. வி. கலியாண சுந்தர முதலியார், சர்க்கரை செட்டியார், இ. எல். அய்யர் முதலியவர்களை நாடு கடத்த வேண்டு மென்று சென்னை சர்க்கார் தீர்மானம் செய்ய, அவ்வாறு செய்தால், தான் ராஜிநாமா செய்து விடுவதாக பனகால் ராஜா பயமுறுத்தினர். எனவே சர்க்காரும் தமது யோசனையை விட்டு விட்டனர். இவ்விஷயங்களை ராஜா ஸாஹிப் ஒரு பொழுதும் பகிரங்கப் படுத்த வில்லை. அவர் ஒரு உத்தம தொழிலாளர் நண்பர்."

சர்வகட்சித் தலைவர்களும் பனகால் ராஜாவின் மரணத்தைப் பற்றி ஒருவழிப்பட்ட அபிப்பிராயமே வெளியிட்டிருக்கிறார்கள். மாதிரிக்காக மட்டும் நான்கு முக்கியஸ்தர்கள் அபிப்பிராயங்களை மேலே எடுத்துக் காட்டினேம். பனகால் ராஜா மீது சுமத்தப்பட்ட சகல பழிகளும் வீண்பழிகள் என்பதை அவைகள் விளக்க வில்லையா?

பனகால் ராஜாவிடம் சிறந்து விளங்கிய குணங்கள் நிதானபுத்தியும் மனவுறுதியுமாகும். அறநிலையப் பாதுகாப்பு மசோதாவைப் பற்றி சென்னைச் சட்ட சபையில் நடைபெற்ற வாதம் பாரதப் போருக்கு ஒப்பாகவே இருந்த தென்பதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். சென்னை சட்ட சபை பார்த்தரான திரு. சத்திய மூர்த்தி பனகால் ராஜா மீது பொழிந்த சொல்லம்பு மாரிக்குத்தான் கணக்கு சங்கை

யுண்டா? எனினும் எதிர் கட்சியார் சொல்லம்புகளுக்குப் பனகால் தளர்ந்தனரா? நிதானமிழந்தனரா? சீற்றங் கொண்டனரா? வம்புரையாடினரா? இல்லவே இல்லை! கருமமே கண்ணாயிருந்து தன் கடனாற்றினர். எதிர் கட்சியார் செய்த சூழ்ச்சிகளுக்கு, வேறொருவர் அம்மசோதாவின் கர்த்தரா யிருந்திருந்தால், அது பஞ்சாய்ப் பறந்திருக்கும். தீரனான பனகாலின் திறமையினாலேயே அது சட்டமாக நிறைவேறியது. நெருக்கடியான சமயங்களில் சட்டசபை மெம்பர்கள் நிதான மிழந்து வப்புரை யாடுவதும் பின்னர் மன்னிப்புக் கேட்பதும் சர்வ சாதாரண வழக்கமாகி விட்டது. பனகால் அரசர் ஒருவர் மட்டுமே அக்குறைபாட்டுக்கு ஆளாகாதவர். தன் எண்ணங்களை அடக்கி வைத்துக் கொள்வதிலும் அவர் வெகு சமர்த்தர். கடலாழங் கண்டாலும் அவரது மனதாழங் காண முடியாது.

அவச் சொல்லுக்கும் அவருக்கும் வெகு தூரம். "யாகாவா ராயினும் நா காக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்னும் நாயனாரைக்கு அவரே ஒரு உத்தம திருஷ்டாந்த புருஷர். நவசக்தி கூறுகிற படி "அவர் பேச்சில் ஆரவாரமும் ஆவேசமும் நிலவுத வில்லை. வெற்றுரைகள் அவர் பேச்சில் மலிதல் அரிது. "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" என்பது அவர் பிறப்புடன் தோன்றிய தொன்று. நயம்பட வுரை என்னும் முதுமொழிக்குப் பனகால் ஒரு இலக்கியம் என்று கூறல் மிகையாகாது."

ராஜ தந்திரத்தில் அவர் சாணக்கியருக்கு ஒப்பானவர் என்று டாக்டர் வரதராஜுலு அவர்கள் கூறியதும் பொன் மொழியாகும். அவரை விஞ்சிய ராஜ தந்திரி தென்னாட்டில் மட்டுமல்ல—இந்தியா முழுதுமே கிடையாது. மகாத்மா காந்தி தியாக வாழ்க்கையினாலும், சித்த ரஞ்சனர், திலகர், லஜபதி முதலியோர் வீர வாழ்க்கையாலும் ஒப்புயர்வற்றவர்கள் எனப் பெயர் படைத்தார்கள். நமது பனகாலோ இணையற்ற ராஜ தந்திரத்தால் ஒப்புயர்வற்றவர் எனப் பெயர் பெற்றார். ஒரு மாகாணக் கவர்னர் பதவி மட்டு மல்ல—வைஸ்ராய் பதவி வகிக்கும் ஆற்றலும் அவரிடம் இருந்து வந்தது.

அவர் ஒத்துழைப்பாளரா யிருந்தன ராயினும் மானங்கெட்ட ஒத்துழைப்பாளராயிருக்க வில்லை. அகற்கு அவரது அரசியல் எதிரிகளின் மொழிகளே சான்று. இரட்டை யாட்சியை வெற்றியுடன் நடத்தியவர் இந்தியாவில் அவர் ஒருவரே. பூரண கட்சி பல மிருந்த காலத்தில், சக்தியற்ற இரட்டை யாட்சியில், ஒரு மந்திரிக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவு நன்மைகளையும் அவர் நாட்டுக்குச் செய்தார்.

இவ்வண்ண மெல்லாம் அருங்குணங்கள் வாய்ந்த ஒரு ஆண்டகையை இழக்க யார் தான் பொறுப்பார்கள்! இந்தியத் தாய் ஒரு அரும் புதல்வனை யிழந்தாள். தென்னாட்டரசி தன் மணி முடி யிழந்தாள். பிராமண ரல்லாதார் தம் காவற் கடவுளை இழந்தனர். உலகப் பெரியார் தொகையில் ஒன்று குறைந்தது.

பனகால் அரசர் ஆத்மா சாந்தி யடைவதாக!

காத்ரீன் டக்லஸ்.

(அரசனைக் காக்க வந்த உத்தமி.)

ஸ்ரீ. C. S. ஜகதீச சுந்தரம் பிள்ளை எழுதியது.

ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்தை நான்காம் ஹென்ரி என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் காலத்தில் ஸ்காட்லந்தை மூன்றும் ராபர்ட்ஸ் என்பவன் ஆண்டு வரும்போது ஸ்காட்லந்து பிரபுக்கள் அரசனுக்கு அடங்காது தம் மனம் போலக் கொடுமைகள் செய்து வந்தனர். அவர்களை அடக்க மூன்றும் ராபர்ட்ஸ் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தான். என்ன செய்தும் அவர்கள் அடங்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் அவன் குமாரர் இருவரில் மூத்தவனையே கொன்று விட்டனர்.

அதைக் கண்டு மூன்றும் ராபர்ட்ஸ், "இது என்ன அநியாயம்! நமது இரு குழந்தைகளில்

மூத்தவனைக் கொலை செய்தார்களே! இப்படிப் பட்டவர்கள் நமது இளைய மகனையும் கொலை செய்வார்கள். அவனைக் கொன்றால் நமது சந்ததியே அற்றுப்போகும். ஆதலால் நாம் அவனை மறைத்து வைக்க வேண்டும்'' என்று தீர்மானித்து வெகுகாலம்வரையில் அவனை ஒரு தனி மாளிகையில் வைத்துக் காத்து வந்தான். பிறகு அவனுக்கு கல்வி கற்பிக்க எண்ணி, அவனை ஒரு கப்பலி லேற்றி பிரான்ஸ் தேசத்திற்கு அனுப்பினான். கப்பல் கடலில் ஓடிக் கொண்டிருக்கும் போது, நான்காம் ஹென்ரியின் கப்பலோட்டிகள் அதனைத் தொடர்ந்துசென்று பிடித்து அதிலிருந்த ராபர்ட்ஸின் இளைய மகனைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து, தம்மரசன் முன்னிலையில் விட்டனர். அரசன் அவனை ஓழுகிய மாளிகையில் சிறைப்படுத்தும்படி உத்தர விட்டான். அப்படியே சேவகர் சிறையில் வைத்தனர்.

சில மாதங்கட்குள் மூன்றாம் ராபர்ட்ஸ் இறந்து விட்டனன். அவனுக்குப் பிறகு ஸ்காட்லந்து சிம்மாசனத்தில் ஏறவேண்டியவன் சிறையி லிருப்பவனான முதலாம் ஜேம்ஸ் என்பதை நான்காம் ஹென்ரி அறிந்ததும், அவனை வெகு எச்சரிக்கையுடன் காத்து வர உத்தரவு செய்தான்.

முதலாம் ஜேம்ஸ் நான்காம் ஹென்ரியின் ஆஞ்ஞைப்படி, சிறைச்சாலை யென விடப்பட்டிருந்த ஒரு பெரிய மாளிகையில் இருந்து வரும்போது அதைச் சூழ்ந்திருக்கும் தோட்டத்தில் ஒரு பெண்மணி உலாவுவதைக் கண்டான். கண்டதும் அவள்மீது அவன் மனஞ் சென்றது. செல்லவும் அவன், தன் விருப்பத்தை யறிவிக்கும் செய்யு ளொன்றினை அவள் மீது பாடினான். அதைக் கேட்டு அவள், அவன் விருப்பத்திற்கு இணங்கினாள். இணங்கவும் அவன், தனக்கு விடுதலை கிடைத்ததும் அவளை மணப்பதாக உப்பரிக்கையின் மீதிருந்தபடியே தோட்டத்திலிருக்கும் ஜோன் பியோவே (Joan Buaufort) என்னும் அப்பெண்மணிக்கு வாக்களித்தான்.

இதற்குப் பிறகு சில வருஷங்கள் கழிந்தன. எல்லாஞ் சேர்ந்து பத்தொன்பது வருஷம் வரையில் அவன் நான்காம் ஹென்ரியா விடப்பட்ட சிறையி லிருந்தான். பத்தொன்பது வருஷங்களுக்குப் பிறகு அவன் விடுதலை பெற்றான்.

இந்தப் பத்தொன்பது வருஷமும் அவன் அன்பாகவே நடத்தப பெற்றான். அவனுக்கு வேண்டியவைக ளெல்லாம் கொடுக்கப் பட்டன. அவன் அரசனாக இருந்து அனுபவிக்க வேண்டிய சுகத்தை யெல்லாம் குறைவில்லாமல் அனுபவித்தான்; அறிய வேண்டியவைகளை யெல்லாம் அறிந்தான்.

விடுதலை பெற்ற பிறகு ஜோன் பியோவோ என்பவளை, பழைய வாக்குத் தத்தத்தின்படி மணஞ் செய்து கொண்டுபோய் முதலாம் ஜேம்ஸ் என்னும் பெயருடன் ஸ்காட்லந்து சிம்மாசனத்தில் ஏறினான்.

அவன் சிம்மாசனம் ஏறிய காலத்தில் அவ்வூர் சீர்குலைந் திருந்தது. பிரபுக்கள் கொடுமை அதிகமாக இருந்தது. ஏழைகளின் அழுகை ஓயாதிருந்தது; அவர்கள் கண்களில் நீர் மாறாதிருந்தது. ஒருவன் வீட்டை மற்றொருவன் அபகரிப்பதும் ஒருவன் உடைமையை மற்றொருவன் பறிப்பதுமே வேலையாக நடந்து வந்தன.

இவைகளைக் கண்ட முதலாம் ஜேம்ஸ், "இந்தச் சீர்கேட்டினைக் குலைக்க வேண்டும்; பிரபுக்களின் அகங்காரத்தை அடக்க வேண்டும்; ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கவேண்டும். உடைமைக்கு உடையவன் உடைமைக்கு உடையவனாகவே இருக்கப் பார்க்க வேண்டும். இப்படி யெல்லாம் செய்யாமற் போவோமாயின் நமது அரசாட்சி, அரசாட்சி யெனப்படாது. இங்கிலாந்து பிரபுக்கள் சற்றேறக்குறைய அவ்வூர் மன்னனுக்கு அடங்கி நடந்து வரும்போது இவர்கள் மாத்திரம் தம் மனம் போன போக்கெல்லாம் போகவேண்டிய காரணம் என்ன?'' என்று தனக்குள் யோசித்துக் கொண்டு, சில பிரபுக்களைச் சிறையி லிட்டும், சிலரைத் தண்டித்தும், சிலரை அவமானப் படுத்தியும், சிலரை ஊரினின்றும் துரத்தியும் ஏழைகளுக்கு உதவி புரிந்து வந்தான். அவனுக்கு ஏழைகளின் துன்பந் துடைப்பதே பெரு வேலையாக இருந்து வந்தது.

இது பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லை. குளத்திலுள்ள தவளைகளின் மீது கல்லெறிவது சிறுவர்களுக்கு எப்படி வேடிக்கையாக இருக்கிறதோ, அப்படி ஏழைகளை வதைப்பதும் அவர்கள் வீடு வாசல்களைப் பிடுங்குவதும் ஸ்காட்லந்து பிரபுக்களுக்கு வேடிக்கையான காரியங்களாகவே இருந்து வந்தன. இந்தக் காரியங்களில் அரசன் தலையிட்டது அவர்களுக்குப்

பிடிக்க வில்லை; பிடிக்காமல் கோபம் பொங்கி யெழ ஆரம்பித்தது. அதனால் அவர்கள் எப்படி யாவது அரசனைக் கொன்று விடுவதே சரி யெனத் தீர்மானித்தார்கள்.

அவர்கள் இந்தத் தீர்மானத்துடன் இருந்து வரும் நாட்களிலே, ஒரு நாள், அரசன் தன் னுடைய பாராளும் மன்றிற்குச் (Parliament) சென்றான். அங்கிருந்த பிரபுக்களில் ஸர். ராபர்ட் கிரேஹாம் என்னும் பிரபு எழுந்துவந்து அரசனுடைய ஊட்டியைப் பிடித்துக்கொண்டு "நீ நன்றி கெட்டவன். உன்னை அரசனாகக் கொண்ட நன்றியை மறந்தொழிந்து, பிரபுக்களின் நிலையைக் குலைத்து, அவர்கள் சுதந்தரத்தினைக் கெடுத்து அதிகாரத்தை அழித்து அவர்களைப் பாழ்படுத்தினாய். இப்படிப்பட்ட உன்னை, சமயம் வாய்க்கும் போது கொல்வதே தகுதி" என்று சொன்னான்.

இந்த வார்த்தையைக் கேட்டு முதலாம் ஜேம்ஸ், "தருக்கள்மாரின் பிரதி நிதிகளும், ஏழைகளின் பிரதி நிதிகளும் உன்னை யொழிந்த மற்றப் பிரபுக்களும் என்மீது குறை கூற வில்லை. என்மீது குறை யிருந்தால் அவர்கள் இப்படி வாயை மூடிக் கொண்டு இருக்க மாட்டார்கள். நீ ஒருவன் கூறுவதால், உன்னால் கூறப்படுவது குறை யெனப் படாது. குறையெனப் படாததை இவ்விடத்தில் சொன்னதோடு என் கழுத்தினும் கை வைத்தபடியினால் உன்னை அப்புறப் படுத்துகிறேன்" என்று சொல்லி, அங்கிருந்தவர்களைக் கொண்டு ஸர். ராபர்ட் கிரேஹாமை அப்புறப் படுத்தினான்.

அவன் வெளியே செல்லும்போது, "உன்னை எப்படியும் என்கையால் முடிக்கிறேன்" என்று சபதஞ் செய்தான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டு முதலாம் ஜேம்ஸ், ஸர். ராபர்ட் கிரேஹாமை ஊருக்கு வெளியில் அனுப்பி விட்டான்.

கிரேஹாம் வெளியே சென்ற சில மாதங்களுக் கெல்லாம் கிறிஸ்து பிறந்த தினக் கொண்டாட்டமாகிய கிறிஸ்த்மஸ் (Christmas) பண்டிகை வந்தது. அப்பண்டிகையில் கிறிஸ்தவர்க ளெல்லோரும் கோயிலுக்குச் சென்று எங்களை யெல்லாம் இரட்சிக்க இரட்சகரைத் தந்தீரே என்று கடவுளை நோக்கிப் பிரார்த்திப்பது வழக்கம். அவ்வழக்கப்படி அரசனும் அங்கு செல்வதுண்டு. அவ்வாறு செல்வதற்காக, தான் செல்ல உத்தேசித்திருக்கும் கோயிலுக்கருகிலிருந்த மாளிகையில் தங்கியிருந்தான். அவன் அங்கு தங்கியிருந்த பொழுது, ஆட்டமும் பாட்டும் கூத்தும் களிப்பும் மிகுதியாக நடந்தேறின. இவைகளை யெல்லாம் பார்த்து ஆனந்தித்துக் கொண்டிருந்துவிட்டு, அரசன் தன் மனைவியுடனும், அவள் தாதிமாருடனும் வார்த்தையாடிக் கொண்டிருந்தான்.

அச் சமயத்தில் இவன் கொண்டாட்டத்தைத் திண்டாட்டமாக்க இவன் மாளிகை வெளிப்புறத்தி லிருந்து பேரிரைச்சல் வந்தது. அந்த இரைச்சலைக் கேட்டு முதலாம் ஜேம்ஸ், தாதியரை யனுப்பி, யாதென அறிந்து வரச் சொன்னான்.

அவள் வெளியே போய்ப் பார்த்து வந்து "ஸர். ராபர்ட் கிரேஹாம் பெருங் கூட்டத்தாருடன் மாளிகையை நோக்கி வருகிறான்" என்று சொன்னாள்.

உடனே அங்கிருந்தவர்கள் "கதவை மூடுங்கள்; கதவை மூடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே கதவை மூட ஓடினார்கள். அப்படி ஓடினவர்கள் அதிசயிக்கும்படி கதவின் தாழ்ப்பாளெல்லாம் பிடுங்கப் பட்டிருந்தன.

கதவின் சங்கதி இவ்வாறாகவும், அரசியானவள், தன் பொருட்டு அம் மாளிகையிலிருந்த நிலவறைக்குட் சென்று வெளியேறும்படி அரசனை வேண்டிக் கொண்டாள். அரசன் அப்படியே நிலவறைக்குட் சென்றான்.

அவன் அப்படிச் சென்று கொண்டிருக்கையில் அங்கிருந்தவர் காதில், கொலை பாதகர் காலடிச் சத்தங் கேட்டது. உடனே ஜோன் பியோவின் உயிர்த் தோழியான சாத்ரீன் டக்லஸ் என்பவள் அரசன் உயிரைக் காக்கும் பொருட்டு, கதவின் தாழ்ப்பாள் துளைகளில் இடவேண்டிய தாழ்க்கோலுக்குப் பதிலாக, கம்பீரத்துடன் தன்கையை இட்டு, கொலைஞர் உள்ளே வர வொட்டாதபடி கதவை மூடி வைத்திருந்தாள்.

இவள் இப்படி இரண்டொரு நிமிஷம் தடுத்துக் கொண்டிருப்பதற்குள், அரசன் நிலவறைக்குட் சென்று கதவை மூடிக் கொண்டான்.

வெளியிலிருந்த கொலைஞர், 'நாம் தாழ்ப்பாளை யெல்லாம் பெயர்த் தெறிந்திருக்கும் போது, கதவு எப்படி மூடப் பட்டிருக்கிறது?"

என்று மிகுந்த கோபத்துடன் கதவை மோதித் தள்ளினார்கள். அவர்கள் அப்படி முரட்டுத் தனமாகத் தள்ளவும் தொளையுள் அகப்பட்டிருந்த கை முறிந்து விட்டது. அப்பெருமாட்டி அடியற்ற மரம் போலக் கையற்றுக் கீழே விழுந்தாள்.

பிறகு அவர்கள் உள்ளே நுழைந்து அரசனைத் தேடினார்கள். எங்கும் அவன் அகப்படவில்லை. அதனால் அவர்கள் அரசியை இம்ஸித்து உண்மையை அறியப் பார்த்தார்கள். அவள் வாயைத்திறக்கவேயில்லை. அதற்குள், அங்கிருந்தவர்களில் ஒருவன் நிலவறைக்குள் சென்றிருக்கலாமென்று சொன்னான். உடனே நிலவறையைத்திறந்து அதனுள் ஒருவன் இறங்கினான். வாயைத் திறவாது ஊமை போலிருந்த அரசி, கொலைஞன் நிலவறைக்குள் இறங்கியதும் வெளியே யோடி ஆராய்ச்சி மணியை அடித்து நாடாளும் மன்னனுக்கு அபாயம் விளைந்திருப்பதாகக் குடிகளுக்கு அறிவித்தாள்.

நிலவறைக்குள் சென்ற முதலாம் ஜேம்ஸ், மாளிகைக்கு வெளியே செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த சுரங்கவழி அடைபட்டிருந்தபடியால் வெளியே செல்லாது, அவ்வறையிலேயே நின்று கொண்டிருந்தான். அவன் தன்னைக் கொல்ல நிலவறைக்குள் முதலிற் குதித்த கொலைஞனுடைய கழுத்தைப் பிடித்துச் சுழற்றி மூர்ச்சையாக்கினான். அதற்குப் பிறகு இன்னொருவன் குதித்தான்; அவனையும் அப்படியே செய்தான். இதைக்கண்ட மூன்றாவது கொலைஞனை கிரேஹாம் கத்தியுடன் உள்ளே இறங்கி, அவனைக் குத்திக் கொன்று போட்டான். அதற்குப் பிறகு, ஆராய்ச்சி மணியினோசையைக் கேட்ட ஊரார் வந்தார்கள். வந்தும் பலன் இல்லாமற் போயிற்று. பிறகு அவன் மனைவி, கௌரவர் நூற்றுவரையுங் கொன்ற பிறகு தன் கூந்தலைத் திரௌபதி முடித்தது போல, தன் கணவனைக் கொன்றதற்குக் காரண கர்த்தராயிருந்தவர்களையெல்லாம் கொன்ற பிறகு, தன் புருஷன் பிரேதத்தினை அடக்கஞ் செய்தாள்.

அரசனுக்குக் கை கொடுக்கக் கதவில் கை கொடுத்து, கையிழந்து கீழேவிழுந்த நம் கதா நாயகியாகிய காத்ரீன் டக்லஸ், விழுந்த சில நிமிஷத்திற்கெல்லாம் கையிழந்தது போலவே, தன்னுயிரையும் இழந்தாள். அது முதல் இவளை காத்ரீன் டக்லஸ் எனாது கேட் லாஸ்—அதாவது கையைத் தாழ்க்கோலாக்கிய கேட் என்னும் பெண்மணி என்று அழைக்கலானார்கள்.

அரசனைக் காக்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடு, இரும்புக்கோலை இட வேண்டிய இடத்தில், என்பினாலும் சதையினாலும் ஆக்கப்பட்ட கையை விடுவது வியர்த்தம் என்பதை யறிந்தும், வேறு வழியின்மையால் உவப்புடன் அதனையிட்டு தன்னுயிரையுங் கொடுத்த உத்தமியைப் பெண்கள் ரத்தினம் என்னாது நாம் வேறு என்ன சொல்வது?

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்.

ஸ்ரீ. மயிலை. சீனி. வேங்கிடசாமியவர்கள் எழுதியது.

18-ம் பக்கத் தொடர்ச்சி.

16-ம் அத்தியாயம்.

லோககாட் மலைக்கோட்டை.

தாதாஜியையும் காசிபாயையும் சிறை மீட்டுக் கொண்டு சிவாஜி லோககாட் கோட்டைக்குச் சென்றார். காசிபாய் பல்லக்கில் கொண்டு போகப் பட்டாள். தாதாஜி, சிவாஜி, நட்டாஜி மூவரும் குதிரை ஏறிச் சென்றனர். அநுமந்த வாசல் என்னும் கோட்டை வாசல் வழியாக லோககாட் போய் சேர்ந்தார்கள். கோட்டை சென்றவுடன் சிவாஜி, தாதாஜிக்கும் காசிபாய்க்கும் தனியாக ஒரு விடுதியை ஏற்பாடு செய்து கொடுத்தார்.

அன்றுமாலை சிவாஜியும் நட்டாஜியும் சந்தித்து தேசிய விஷயமாக நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். சிவாஜி பண முட்டுப் பாட்டைச் சொல்லி அதிகமாக விசனப் பட்டார். "நாற்பதினாயிரம் மராட்டியர் தேச விடுதலைக்காகக் கத்தி எடுத்துச் சண்டை செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள். எச்சமயம் அழைத்தாலும் வரத்தயாரா யிருக்கிறார்கள். ஆனால், நான் அவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது? அவர்கள் கையில் ஈட்டியும் வாளும் துப்பாக்கியும் கொடுத்தாலல்லவா சண்டை செய்வார்கள்? கள்ளர்கள், கொள்ளைக்காரர்களைப் போல கல்லையும் கட்டையையும் வைத்துக் கொண்டா சண்டை செய்வார்கள்? ஆயுதங்களை வாங்குவதற்கும் அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதற்கும் பணம் வேண்டும். ஆனால், பணத்தைத்தான் காணோம். தக்ஷிணத்திலும் கொங்கணத்திலும் உள்ள பீஜப்பூர் அரசன் கோட்டைகளைக் கடவுளருளால் நான் பிடித்துக் கொண்டது உண்மை தான். ஆனால், அக்கோட்டைகளைச் செப்பனிடுவதற் கில்லாமல் சுவர்கள் இடிந்து விழுந்து நாசமாய்ப் போகின்றன. அவற்றைப் பழுது பார்த்துச் செப்பனிடவுங் கூடப் பணம் இல்லை. தாதாஜியைப் போன்ற பணக்கார நண்பர்கள் தேசிய விடுதலைக்காகத் தங்களால் இயன்ற பொருளுதவி செய்த போதிலும் இப்பெருங் காரியத்திற்கு அப்பணம் போதாமலிருக்கிறது" என்று சிவாஜி நட்டாஜிக்குச் சொன்னார். பிறகு திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு, நட்டாஜியைப் பார்த்து,

"நான் ஏன் இவ்விதம் வருத்தப்பட வேண்டும்? பவானி தேவி உன்னை என்னுடன் அழைத்துக் கொண்டு தோர்ணு கோட்டைக்குப் போகக் கட்டளை யிட்டிருக்கிறாள். நாம் அங்கே போக வேண்டும். அக்கோட்டையின் மதிற் சுவர்களை இப்பொழுது கொல்லர்கள் பழுதுபார்த்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு வேளை அங்கே சென்றால் பணத்துக்கு வழி ஏற்பட்டாலும் ஏற்படும். இல்லையானால், நட்டாஜீ! இப்பெரிய தேசிய வேலையை உன்னிடம் விட்டு விட்டு, நான் சந்நியாசி வேஷத்தோடு தேசாந்தரம் போய் விடுவேன். இது நிச்சயம்" என்று சிவாஜி நட்டாஜியிடம் சொன்னார்.

தற்கால அரசியல் விஷயத்தில் சுய நலக் கருத்துடன் ஒவ்வொரு மனிதனும் தலைவனாக வரவேண்டும் என்று ஆத்திரப் படுவது போல, நட்டாஜி தலைவன் பதவிக்கு ஆசைப்படுகிறவன் அல்ல. ஆகவே அவன் சிவாஜியைப் பார்த்து, "இல்லை, இல்லை! அது ஒருபோதும் முடியாது. நீரே தலைவராக விருந்து தேசிய வேலையைச் செய்ய வேண்டும். நான் எப்பொழுதும் உம்முடைய ஊழியன். கட்டளையிட வேண்டியது உம்முடைய வேலை. கட்டளைப்படி நடக்க வேண்டியது என்னுடைய கடமை" என்று வணக்கத்துடன் சொன்னான்.

அதன் பிறகு நட்டாஜி, தனது குருவாகிய யோகானந்தர் மேதார மலையில் சொல்லிய யோகக் காட்சியை சிவாஜிக்குச் சொல்லி, தனது வாழ்நாளை தேசிய விடுதலைக்காகத் தத்தம் செய்து விட்டதாகத் தெரிவித்தான்.

இதைக் கேட்ட சிவாஜி, நட்டாஜியைப் பார்த்து, "எனது உண்மையான நண்பனே! நான் உனக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்?" என்றார்.

"எனக்கு வெகுமதி யொன்றும் வேண்டியதில்லை, உம்முடைய அபிமானமும் தேசியத் தொண்டுமே எனக்குப் போதுமானது" என்று சொன்னான் நட்டாஜி. பிறகு, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு "இரு. ஒரு வெகுமதியைக் கேட்கிறேன். அந்த வெகுமதி எனது தேசிய ஊழியத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. எங்கள் சின்னஞ் சிறுவயதில், தாதாஜியின் மகள் காசிபாயும் நானும் தௌளரி ஆற்றங் கரையில் விளையாடுவது வழக்கம். அச்சிறு வயதிலேயே, முகம்மதியரை மராட்டியதேசத்திலிருந்து துரத்திவிட வேண்டும் என்று நான் கனவு காண்பதுண்டு. காசிபாயும் இந்த எண்ணத்தையே கொண்டிருந்தாள். நான் முகம்மதியரைத் துரத்தியடித்தால் என்னைக் கலியாணம் செய்து கொள்வதாக அவள் சொல்லுவாள். இத்தகைய தேசியப் பற்றுள்ள காசிபாயை என் மனைவியாக அடைவேனானால் என் பலம் இரண்டு மடங்கு அதிகமாய்விடும். அந்தப் பாக்கியத்தை நான் பெறுவேனா? தலைவரே! அந்தப் பாக்கியம் நான் பெறவில்லையானாலும், தேசிய ஊழியத்தில் எனக்கு ஊக்கம் குன்றி விடும் என்று நினைக்காதீர்! எந்தச் சமயத்திலும் என் உயிரை என் தேசத்திற்குக் கொடுக்க ஆயத்தமா யிருக்கிறேன்" என்று சொன்னான் நட்டாஜி.

தாதாஜியிடம் கலியாண விஷயத்தைப் பற்றிப் பேசுவதாக சிவாஜி, நட்டாஜிக்

குச் சொன்னர். பிறகு, இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். படுக்கைக்குப் போகும் நேரமானதும் தத்தம் இடத்திற்குச் சென்றார்கள்.

அடுத்த நாள், சிவாஜி தாதாஜியைக் கண்டு காசிபாயை நட்டாஜிக்கு மணம் செய்வதைப் பற்றிப் பேசினர். முதலில், தாதாஜி இதற்கு இடந்தரவில்லை. ஏனென்றால், நட்டாஜி குலத்திலும் குணத்திலும் உயர்ந்தவனாயிருந்தும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். தாதாஜியோ மிகுந்த செல்வவான்; இதனல், அவர் ஏழையான நட்டாஜியோடு சம்பந்தம் செய்து கொள்ள உடன்படவில்லை. ஆனல், தீர யோசித்த பிறகு கலியாணத்திற்கு உடன் பட்டார். தமது உயிர்த் தோழராகிய சிவாஜியே இதில் தலையிட்டுக் கொண்டபடியாலும், நட்டாஜி தன்னையும் தன் மகளையும் சிறை மீட்கும் பொருட்டு அதிக கஷ்டமெடுத்துக் கொண்டபடியாலும், அவன் ஒரு வகையில் தனக்கு உறவினன் ஆகையாலும், இவற்றைவிட முக்கியமாக காசிபாய் நட்டாஜியை மணஞ் செய்து கொள்ள ஆவலாயிருப்பதாலும் தாதாஜி இதற்குச் சம்மதித்தார். நட்டாஜியும் காசிபாயும் இச்செய்தியைக் கேட்டபோது சொல்லொணு ஆனந்த மடைந்தார்கள்; அவர்களடைந்த ஆநந்தத்தை ஒருவராலும் அளவிடமுடியாது.

ஆகவே, நல்ல நாளில் நல்ல ஓரையில் நட்டாஜிக்கும் காசிபாய்க்கும் லோககாட் கோட்டையில் திருமண விழா மிகச் சிறப்பாக நடை பெற்றது. தேசியத் தலைவராகிய சிவாஜியே முன்னின்று நடத்தினரென்றால், இத் திருமணச் சிறப்பை விவரித்துச் சொல்லவும் வேண்டுமோ? இத்திருமணத்தின் மூலமாக அன்று முதல் காதலனும் காதலியும் ஒன்று சேர்க்கப் பட்டனர் என்று சுருக்கிச் சொல்வதே சாலும்.

ஒன்று சேர்க்கப்பட்ட நட்டாஜியும் காசிபாயும், கோட்டையின் உன்னதமான கொத்தளத்தின்மேல் குளிர்ந்த மாலைவேளையில் உலாவுவது வழக்கம். கோட்டையின் உன்னதமான கொத்தளத்தின் மேல் மாலை வேளையில் வீசும் மெல்லிய காற்று இன்பமாயிருக்கும். இவ்விடத்தில் காதலரிருவரும் உலாவும் போது பற்பல விஷயங்களை மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டார்கள். காதலரின் அன்பொழுகும் பேச்சுகளுக்குக் கணக்குண்டோ? அப்பொழுது அவர்களைக் காணும் போது, அவர்கள் ஒருவரை யொருவர் எவ்வளவு கனிவாக நேசிக்கிறார்களென்பதும் தெள்ளிதில் புலப்பட்டது. உன்னதமான மலைக் கோட்டையினுச்சியிலுலாவும் அவர்களுக்கு, அந்தி மாலையின் இனிய காட்சி எவ்வளவோ மகிழ்ச்சியை யளித்தது. வடக்கே இந்திராயணி யாறு வளைந்து வளைந்து தவழ்ந்தோடுவதும், கிழக்கே விசாப்பூர் மலைகள் உன்னதமான சிகரங்களோடு கம்பீரமாகக் காணப்படும் காட்சியும், தெற்கே தூரத்தில் காணப்படும் தோங்கி கோட்டையின் சிகரங்களும் திக்கோனமலையின் தோற்றமும், மேற்கே தொடர்ச்சியாயுள்ள மலைகளில் சூரியன் மறையும்போது காணப்படும் செவ்வானத்தின் பல நிறக்காட்சியும் நட்டாஜிக்கும் காசிபாய்க்கும் மனமகிழ்ச்சி யளித்தன. ஆனல், இக்கதையைப் படிக்கும் நேயர்களே! உலகத்தில் துன்பங் கலவாத இன்பமுண்டோ? நட்டாஜியும் காசிபாயும் எவ்வளவுதான் சந்தோஷமாயிருந்த போதிலும், ஒரு விஷயம் மாத்திரம் அவர்களுக்கு அடிக்கடி மன வேதனையை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. தங்கள் சிறுவயதில் உடனிருந்து விளையாடிய அன்புள்ள கங்காபாய் முகம்மதியர்களால் எவ்விடங் கொண்டு போகப் பட்டாளோ, என்னவானளோ என்று நினைக்கும்போதெல்லாம் அவர்கள் மனம் துன்பத்தில் அழுந்தித் துடித்தது.

நேசமில் வதுவை நாச காரணமே.

தமிழ் முரசு.

பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை.

தனதன தனதன தனந் தன
தனதன தனதன தனந் தன
தனதன தன்தன தனந் தன
தனதன தனதன தனந் தன.

(1) தமிழ்முர சதிர்க! அதிர் கவே!
தமிழ்முர சதிர்க! அதிர் கவே!
தமிழ்முர சதிர்க! அதிர் கவே!
தமிழ்முர சதிர்க! அதிர் கவே!

(2) திருமிகு தமிழ்மொழி சிறந் திட
திசைதொறும் தமிழ் புகழ் பரந் திட
உருமிகு தமிழகம் உயர்ந் திட
ஒளிதரு தமிழ்கலை வளர்ந் திட
(தமிழ்முர சதிர்க! அதிர் கவே!)

(3) சாதிச மயவெறி தொலைந் திட
சமரச மனநிலை வளர்ந் திட
ஆதி புகழ்பாரதம் அணிந் திட
அடிமைத் தனம்விரைவில் ஒழிந் திட
(தமிழ்முர சதிர்க! அதிர் கவே!)

(4) தமிழர்ஆ ரியர்பகை தணிந் திட
சர்வம்ஒன் றெனஜனம் துணிந் திட
அமிழ்ந்து தவிப்போர்கரை அடைந் திட
அவனிவிட் டுத்தீண்டாமை பறந் திட
(தமிழ்முர சதிர்க! அதிர் கவே!)

(5) இந்து முசிலிம்பகை எரிந் திட
இந்திய ரெனுமுணர்ச்சி எழுந் திட
சுந்தரப் பெண்கள்கவலை தொலைந் திட
சுதந்தர ஜோதியொளி சொரிந் திட
(தமிழ்முர சதிர்க! அதிர் கவே!)

காசி.

(ஆசிரியர் காசியிலிருந்து எழுதியது.)

காசிமா நகரம்.

காசி! காசி!! காசி!!! தெய்வத்தன்மை வாய்ந்த காசி என்னும் நாமத்தை உச்சரிக்கும் போதே ஒரு உற்சாகம் பிறக்கின்றது. எத்தகைய பிரளயங்களுக்கும் அழியாத நித்திய நகரங்கள் உள்ளனவாக உலக மக்கள் நம்புவதுண்டு. உரோமாபுரி அவற்றுள் ஒன்று. கல்வி கேள்விகளிலும் நாகரீகத்திலும் சிறந்த உரோமர்கள் உரோமாபுரியை அழியாப்புகழ் பெற்ற ஒளிசால் நகரமெனப் போற்றி வந்தனர். அத்தகைய புராதனப் புகழ் வாய்ந்த பொன் நகரம் கி. மு. 753 வருஷங்களுக்கு முன் தான் தோற்றிற்று. நமது புண்ணிய பூமியாம் கண்ணிய காசியோ சரித்திர காலத்துக்கு முன்னமேயே பெரும் புகழும் பெற்று விளங்கி யிருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 5000 வருஷங்களுக்கு முன் நடந்ததாக நம்பப்படும், மகா பாரத யுத்த காலத்திலும் காசி சிறப்புற்று விளங்கியிருக்கிறது. மிகப்பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் இருக்கு வேதத்திலும் காசியைப்பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. கி. மு. ஐந்தாவது நூற்றூண்டில் ஸ்ரீ கௌதமபுத்தர் தாம் கண்ட அரிய உண்மைகளை இந்தக் காசியம்பதியிலேயே வெளியிட்டார். ஆகவே, காசியின் தொன்மையைப்பற்றி ஒருவரும் சந்தேக முறார். காசியைப்போல் புராதனத்தன்மை வாய்ந்த நகரம் உலகத்திலேயே இல்லையென்று சொல்லலாம். உலகத்திலே சீரும் சிறப்பும் பெற்று விளங்கியிருந்த நகரங்களெல்லாம் அழிந்தொழிந்து போயிருக்க, நமது காசியம்பதி மட்டும் அன்று தொட்டு இன்று காறும் அழியாப் புகழொடு ஜொலியா நின்றது.

காசியம்பதியின் அத்தகைய அழிவில் புகழுக்குக் காரணம் என்ன? காசியின் சிறப்பைக் காவல் செய்வது யாது? வானமுகட்டை முட்டும் பென்னம்பெரிய கோட்டை கொத்தளங்களா? பாதாளத்தை யெட்டி நோக்கும் அகழிகளா? நிமிஷத்துக்கு நூறு குண்டு வெடிக்கும் பீரங்கிகளா? காற்றெனப் பறக்கும் ஆகாய விமானங்களா? முன் வைத்த காலைப் பின் வாங்காது போர் புரியும் யுத்தவீரர்களா? எண்டிசையும் அடக்கியாளும் மன்னர் செங்கோலா?



விச்வேச்வரர் கோயில் தங்க ஸ்தூபி.

இவை எதுவுமில்லை! காசியில் பண்டு முடி மன்னர்கள் இருந்தது உண்மையெனினும், அம்முடி மன்னர் படைவலிக்கும் காசியின் பெருமைக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. பின்னர் காசியின் பெருமைக்குக் காரணந்தான் யாது? அது தான் பிரம்ம ரகசியம்! ஏதோ ஒரு திவ்யசக்திதான் அதற்குக் காரணமென்பது எம்போல்வார் துணிபு. புயவலிமிக்க படைமன்னர் ஆண்ட புகழ் நகரங்களெல்லாம் பொடிப்பொடியாய்ப் போகவும், பல்லாயிர வருஷ காலமாக ஒரு நகரம் மட்டும் மங்காப் புகழோடு மாண்புற்று விளங்கவேண்டுமெனின், ஏதோ ஒரு திவ்யசக்தி—தெய்வீக சக்தி—அந்நகரில் அடங்கியிருக்க வேண்டுமென்று நம்புவது மிகையாகுமா?

காசி ஒரு மதத்தாருக்கோ, வகுப்பாருக்கோ மட்டும் சொந்தமானதன்று. எம் மதத்தாரும் அதைத் தம்மதென்றே போற்றுகின்றனர். கர்மிகள், ஞானிகள், யோகிகள், பக்தர்கள், சைவர்கள், வைஷ்ணவர்கள், ஆகிய ஹிந்துக்களெல்லாம் காசியை முக்தி நகரமென்றே மதிக்கின்றனர். பௌத்தர், ஜெயினர்களும் அவ்வாறே போற்றுகின்றனர். ஔரங்கசீபின் பெயர்பெற்ற மசூதியினால் முகமதியர்களுக்கும் காசி திவ்ய ஸ்தலமாகவே விளங்குகிறது. இந்தியக் கிறிஸ்தவப் பாதிரி சங்கத்தின் தலைமைக் காரியஸ்தலம் காசியில் ஸ்தாபனம் பெற்றிருப்பதால் கிறிஸ்தவர்களுக்கும் காசி புனிதத் தன்மை வாய்ந்ததாகவே நிலவுகிறது. பெயர் பெற்ற மதாசிரியர்களெல்லாம் காசியில் வைத்தே தம் மதத்தை பிரக்கியாபனம் செய்திருக்கின்றனர். புத்தர், சங்கரர், கபீர், சைதன்யர், வல்லபர், துளசிதாஸ் முதலிய புண்ணிய புருஷர்களும்



சாரநாத்.



விச்வ சர்வ கலாசாலையின் ஒரு பகுதி.

காசியம்பதியோடு நெருங்கிய சம்பந்தமுடையவர்களாயிருக்கின்றனர். வேதமதம்—ஹிந்து மதம்—எத்தனையோ மாற்றங்களை யடைந்தும் காசியின் பெருமைக்கு மட்டும் எட்டுணை மாற்றமும் ஏற்படவில்லை. உலகத்திலே ஒப்புயர்வில்லாத் தனிப்பெரு நகரமாய் நிமிர்ந்து நிற்கும் பெருமை காசிமா நகருக்கு மட்டுமே சொந்தம்.

ஆதிகாலந் தொட்டே காசிமா நகரம் சர்வ கலைகளுக்கும் இருப்பிடமாக இருந்து வருகிறது. ஆங்கிலம் தலைதூக்கி யிருக்கும் இக்காலத்திலும், காசியின் பண்டையப் பெருமை குன்றாதிருக்குமாறு, பண்டித மதன மோகன மாளவியா அவர்களால் ஸ்தாபனம் செய்யப் பெற்றிருக்கும் ஹிந்து சர்வகலா சங்கம் ஸ்ரீகாசிக்கு மங்காப் புகழ் அளிக்கும் என்பது உறுதி.

காசி ஹிந்து சர்வகலா சங்கத்தைப்போன்ற ஒரு உயரிய சர்வகலா சங்கம் உலகத்திலேயே இல்லை யென்று உறுதியாகக் கூறலாம். எல்லாக் கலைகளும் எல்லா சாஸ்திரங்களும் அங்கே பயிற்றுவிக்கப் படுகின்றன. பொதுக் கல்விக்குத் தேவையான கல்லூரிகளைத் தவிர, இஞ்சினீயரிங் கல்லூரி, வைத்தியக் கல்லூரி, சட்டகலா சாலை, இரசாயனம், இயற்கைத் தத்துவம் ஆதிய விஞ்ஞான சாஸ்திரக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, மெக்கானிக்கல், எலக்டிரிக் இஞ்சினீயரிங் கல்லூரி, மாதர் கலாசாலை முதலிய ஸ்தாபனங்களும் அந்த சர்வ கலா சங்கத்தில் அமைந்திருக்கின்றன. சர்வகலா சங்கவாசிகளின் சிகிச்சைக்காக ஒரு ஆஸ்பத்திரியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சர்வ கலா சங்கம் இடம் பெற்றிருக்கும் இடம் 7 சதுர மைல் விஸ்தீரண முடையது. சர்வ கலாசங்கக் கட்டிடங்களுக்கு 60 லட்ச ரூபா வரை செலவாயிருக்கிறது. காசி மகாராஜா 4-5 கிராமங்கள் அதற்கு மானியமாக விட்டிருக்கிறார். புராதன நளாந்தா, தக்ஷசீல சர்வ கலா சங்கங்களைவிட இந்த சர்வகலாசங்கம் எவ்வளவோ உயர்வானதென்று, அதனைக் கண்ணுற்ற பெரியாரெல்லாம் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.



பண்டித, மதன மோகன மாளவியா.

வர்ணு அசி என்னும் இரண்டு புண்ணிய நதிகள் சங்கமமாகு மிடத்தில் காசி ஸ்தாபனம் பெற்றிருக்கிறது. ஐதீகப்படி கங்கையில் அசி கங்கா கட்டத்துக்கும் வர்ண கங்கா கட்டத்துக்கும் இடையில் 64 கட்டங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவற்றுள் (1) அசி கங்கா கட்டம் (2) தசாச்வமேத கட்டம் (3) மணிகர்ணிகா கட்டம் (4) பஞ்ச கங்கா கட்டம் (5) வர்ணகங்கா கட்டம் ஆகிய ஐந்துமே மிகவும் முக்கியமானவை.

காசியென்றுரைக்க, காசியைக்காண
காசியை நினைக்கவே முத்தி,
காசியில் வசிக்கக் காசியில் சூழக்
காசியைக் கேட்கவே முத்தி
காசியென் றுருவா நேற் றிடின்முத்தி
கருத்துடன் மனமது திருத்திக்
காசியில் வசித்தோர் தம்மையே கண்டு
கழலது போற்றிடின் முத்தி”

என்று சர்வ ஹிந்துக்களும் ஒருமுகமாக நம்புவதினால், பிரதிதினமும் இந்தியா முழுமையிலுமுள்ள பல்லாயிர ஜனங்கள், காசியில் வந்து, கங்கா ஸ்நானம் செய்து, விசுவேசுவரனைத் தரிசித்துச் செல்லுகின்றனர்.

புத்தர் மதோபதேசம் செய்த சாரநாத் காசிக்கு 7 மைல் வடக்கே இருக்கிறது. அசோக மன்னரால் கட்டப்பட்ட ஒரு விகாரமும் 70 அடி உயரமுள்ள ஒரு ஸ்தூபியும் முஸ்லீம்கள் இந்தியாவுக்கு வரும்வரை அங்கே அமைந்திருந்தன. முகமதியரின் அட்டூழியங்களால் அவை பாழாயின. பூமிக்குள் புதைந்து கிடந்த புத்த மடாலயம், ஸ்தூபி இவற்றின் பகுதிகளை பிரிட்டிஷ் சர்க்கார், அந்த ஸ்தலத்தில் கட்டிய ஒரு கண்காட்சி சாலையில் பந்தோபஸ்தாக வைத்திருக்கிறார்கள்.

காசி பண்டைக் காலந் தொட்டே கைத்தொழில் வர்த்தகம் முதலியவற்றிலும் சிறப்புற்றே விளங்கி வருகிறது. காசியின் புராதன வர்த்தக கைத்தொழிற் சிறப்பைப் பற்றி லார்டு மக்காலே கூறியிருப்பதாவது;—“பண்டு கங்கா ஸ்நானம் செய்யப் பிரதி தினமும் நாலு பக்கங்களிலும் இருந்து யாத்திரிகர்கள் காசிக்குச் சென்றது போலவே. வர்த்தகர்களும் வியாபாரம் நிமித்தமாக காசிக்குச் சென்று கொண்டுதானிருந்தார்கள். புனிதத் தன்மை வாய்ந்த கங்கையிலே, சரக்கேற்ற வந்த கப்பல்கள் ஏராளமாகக் கிடந்து வந்தன. காசிமா நகரக் கைத்தறியாளர் செய்த அழகிய மெல்லிய பட்டாடைகள், ஆங்கில, பிரஞ்சு அரண்மனை அந்தப்புர மாதர்களை அழகு செய்துவந்தன. ஐரோப்பிய வியாபார ஸ்தலங்களி லெல்லாம் டாக்கா மஸ்லினும், அயோத்தி வாட்களும், கோல்கண்டா இரத்தினாபரணங்களும், காஷ்மீர் சால்வைகளும் ஏராளமாக விற்பனையாயின!”

பட்டுத் தினுசுகளுக்கும் பித்தளைப் பாத்திரங்களுக்கும் இப்பொழுதும் காசி பேர் போன நகரமாகவே விளங்கி வருகிறது. இந்தியா சுயராஜ்யம் பெறும் போது காசி முன்னினும் பன்மடங்கு பெருமை பெற்று விளங்குவதாக!

காசி அல்லது **புண்ணிய பூமி.**

க்ஷேத்திரயாத்திரை போவார்க்கு உற்ற துணை போன்றது.

அச்சிலிருக்கிறது.

விலை ரூ. **1—4—0.**

முத்தையா புக் டிப்போ, தபால் பெட்டி 99, **சென்னை.**

பத்திராசிரியர் குறிப்புகள்

மெச்சுகிறோம்:—சென்னைக் காங்கிரஸ் கட்சியார், இப்பொழுது கமிஷன் பகிஷ்காரத்தை அதி தீவிரமாக நடத்தும்படி உறுதி செய்திருப்பதை யறிந்து அவர்களை மெச்சுகிறோம். பூரண சுயேச்சை வாதிகள் இவ்வண்ணம் முடிவு செய்திரா விட்டால் உலகம் அவர்களை நோக்கி எள்ளி நகையாடியிருக்கும். அன்றியும், சைமன் கமிஷன் அடுத்த பிப்ருவரியில் இவ்விடம் வரும்போது, திரு. ஸ்ரீநிவாஸய்யங்கார் டெல்லி சட்ட சபைக்குப் போகாது, இவ்விடமிருந்து சைமன் பகிஷ்காரத்தை, முன்னின்று நடத்த நிச்சயித்திருப்பதும் போற்றத் தக்கது. சென்ற முறை கமிஷன் இவ்விடம் வந்த பொழுது, திரு. அய்யங்காரவர்களைப் போன்ற பொறுப்புடைய தலைவர்கள் பகிஷ்கார ஏற்பாட்டில் பொறுப்பு வகிக்கத் தவறியதினாலேயே, வீண் கலவரங்களும் உயிர்ச்சேதங்களும் உண்டாயின. காலாடிகள் எக்காலத்தும் எவ்விடத்தும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை யடக்கியாளும் திறமை தலைவர்களுக்கு இருக்க வேண்டும். திரு, ஸ்ரீநிவாஸய்யங்கார் அத்தகைய திறமையுடையவர் அல்லவா ? அவரது பகிஷ்காரப்போர் எவ்வாறு முடிகிறதென்று பார்ப்போம்.

*   *   *

தஞ்சை வைதீகர் மகாநாடு:—தஞ்சைப் பிராமணர் மகாநாடு என்னும் பொதுப் பெயரால் கூடிய தஞ்சை வைதீகர் மகா நாடும் கூடி முடிந்து விட்டது. மகா நாட்டு நடபடிக்கைகளைப் பார்க்கும் போது கிணற்றுத் தவளைகள் ஞாபகமே நமக்கு வருகின்றது. இந்த மகா நாட்டில் பங்கு கொண்ட பிராமணத் தலைவர்கள் உலகப் போக்கையும் சுற்றச் சார்புகளையும் கவனியாது, தம் மனம் போனபடி ஆகாயக் கோட்டை கட்டத் தொடங்கி யிருப்பது பிராமண சமூகத்துக்கே பெரும் தீங்கு விளைக்கக் கூடியதா யிருக்கிறது. மக்கள் முன்னேற்றத்துக்காக மக்களால் மதம் தோற்றுவிக்கப் பட்டதே யன்றி மதத்துக்காக மனிதன் தோன்ற வில்லை. உலக மதங்களி லெல்லாம் மிகப் புராதனமான நமது ஹிந்து மதம், இந்த உண்மையை உணர்ந்து, அவ்வப்போது தோன்றும் கால நிலைக்கு ஏற்றவாறு, தன்னைத் திருத்திக் கொண்டு வந்திருப்பதினாலேயே, இன்னும் இளமை குன்றாமல் நிலை பெற்றிருக்கிறது. எனவே தஞ்சை வைதீகர்கள் "மீண்டும் வேத காலத்துக்குச் செல்வோம்" என்று பிராமணர்களை அழைப்பது வெகு விநோதமாக இருக்கிறது.

உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமாந், என் கிருஷ்ணசுவாமி அய்யங்காரும், மகா நாட்டுத் தலைவர் ஸ்ரீமாந் T. R. இராமச் சந்திர அய்யரும் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கவனிக்கும் போது, ஆங்கிலக் கல்வியால் பிராமணத்துவம் அழிந்து விட்டதென்றும், பழைய கால வழக்கப்படி வேதாத்தியயனம்செய்து வைதீக வாழ்க்கையை மேற்கொள்வதே பிராமணர்களின் கடமை யென்றும், அவர்களுக்குப் பலமான அபிப்பிராய மிருப்பதாகத் தோன்றுகிறது. ஒவ்வொருவருக்கும் அபிப்பிராய சுதந்தரமுண்டு. ஆகவே மேலே சுட்டிக் காட்டிய கனவான்களை, அவர்களுடைய அபிப்பிராயத்துக்காக நாம் கண்டிக்கவில்லை. ஆனால் அவர்கள் தம் அபிப்பிராயங்களை தம் வாழ்க்கையில் பொருத்திக் காட்டுகிறார்களா என்பது தான் கேள்வி. உபசரணைக்கமிட்டித் தலைவர் ஸ்ரீமாந், கிருஷ்ணசுவாமி அய்யங்காரைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. மகா நாட்டுத் தலைவர் திவான் பகதூர் T. R. ராமச்சந்திர அய்யர் பெயர் பெற்ற ஹைக்கோர்ட்டு வக்கீல். ஆங்கிலக் கல்வி கற்றதின் பயனாய் திரண்ட செல்வம் திரட்டியவர். பெற்றோர் நிர்ப்பந்தத்தினால், இளமையில் வேதாத்தியயனம் செய்யாமல் ஆங்கிலம் கற்கும் துர்ப்பாக்கியம் அவருக்கு வாய்த்திருக்கலாம்.

ஆங்கிலங் கற்றதினாலுண்டான கேடும் வேதாத்தியயனம் செய்வதினால் உண்டாகும் நலனும் பிற்காலத்தில் அவருக்குத் தோன்றி யிருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் தமக்குண்டான இந்த அறிவை தம் மக்கள் பேரப் பிள்ளைகள் விஷயத்தில் அவர் பயன் படுத்தி யுள்ளாரா என்று நாம் அவரை வணக்கமாகக் கேட்கிறோம். தம் மக்களையும் பேரப் பிள்ளைகளையும் ஆங்கிலக் கல்விச் சாலைக்கு அனுப்பிக் கெடுக்காது, வேதாத்தியயனம் செய்வித்திருந்தால், தமது அபிப்பிராயப்படி நடக்கும் அவரது பெருங் குணத்தை நாம் மிகவும் பாராட்டுகிறோம். இன்றேல் அவரது வாய்ப்பிரசங்கத்தால் பிராமண சமூகத்துக்கே பேராபத்து விளையுமென்று எச்சரிக்கை செய்கிறோம்.

பிராமணர்கள் ஆங்கிலக் கல்வி கற்று, சர்க்கார் தாசராகிக் கெட்டுப் போகக்கூடாதென்று எச்சரிக்கை செய்திருக்கும் இந்த வைதீகமகாநாட்டார் "கவர்ன்மெண்டு உத்தியோகங்கள் அளிப்பதில் வகுப்புவாரி முறையை அநுஷ்டிக்கக்கூடாதென்று" ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதின் இரகசியம் என்னவென்று நமக்கு விளங்கவில்லை. பிராமணர்கள் சர்க்கார் சேவை செய்யக் கூடா தென்பது அவர்களது அபிப்பிராயமா யிருந்தால் சர்க்கார் உத்தியோகதான விஷயத்தில் எம்முறையைக் கையாண்டாலும் அவர்களுக்கு என்ன நஷ்டம்?

மேலும், உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யங்கார், தமது பிரசங்கத்தில் ஒரு இடத்தில் "மகமதியர்கள், தங்கள் மதத்தையாவது மத சம்பந்தமான ஆசாரங்களை யாவது பாதிக்கக் கூடியதாக ஏதேனும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப் பட்டால் அவைகளை மகமதியர்கள் ஒற்றுமையுடன் எதிர்க்கிறார்கள். ஹிந்துக்களாகிய நம்மவர்களைப் பற்றியோ அவ்விதம் சொல்லக் கூடாமல் இருப்பது வருந்தத்தக்கது" என்று கூறிக் கண்ணீர் விடுகிறார். ஐயோ! என் செய்வது! ஹிந்து மதத்தையும் வேதோபநிஷதங்களையும் தமக்கே சொந்தமென்று வைதீகர்கள் "காபிரைட்டு", செய்து வைத்துக் கொண்டிருக்கும் போது ஏனையோர் வைதீகர்களுடன் எவ்வாறு ஒத்துழைப்பார்கள்?

சமய, சமூக சம்பந்தமான சட்டங்கள் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரமில்லை யென்று இந்த வைதீக மகாநாட்டார் கூச்சல் போடுகிறார்கள். இந்தக் கூச்சலை எல்லா பிராமணர்களும் ஆதரிக்கிறார்கள் என்று நாம் நம்பவில்லை. முற்போக்கு விருப்பமுடைய பிராமணர்கள் தனியாக ஒரு சங்கங்கண்டு பிராமண சமூகத்துக்குத் தேவையான சீர்திருத்தங்களைப்பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்யாவிட்டால், பிராமண சமூகத்தின் பிற்கால நிலை பெரிதும் பாதிக்கப்படுமென்று நாம் பிரமாணத்தலைவர்களிடம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

தேசீய ஆசாரச்சீர்திருத்த மகாநாடு:—இந்திய தேசிய ஆசாரச் சீர்திருத்த மகாநாட்டின் 44-வது கூட்டம் கல்கத்தாவில் இம்மாதம் 25உ ஸ்ரீமான், எம். ஆர். ஜெயகர் தலைமையில்

வெகு சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீமான் ஜெயகர் தமது தலைமைப் பிரசங்கத்தில் 'பிராமணரல்லாதார் கிளர்ச்சியும் தீண்டாமை ஒழிய வேண்டுமென்ற இயக்கமும் ஹிந்து சமூகத்தின் அமைப்பை அசைத்து, பொதுவான சமூக சமதர்ம உதயத்திற்கு வழி கோலி இருக்கின்றன" என்று கூறியிருப்பதைத் தென்னாட்டுத்

தேசியவாதிகள் ஊன்றிக்கவனிக்குமாறு வேண்டுகிறோம். தென்னாட்டில் சமூக ஒற்றுமை உண்டாகவேண்டுமானால், பிராமணர்—பிராமணரல்லாதார் இயக்கத்தைப்பற்றி ஸ்ரீமாந் ஜெயகர் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை தென்னாட்டுத் தேசிய வாதிகளெல்லாம் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும். "வகுப்பு வாதம் ஒழிய வேண்டும். வகுப்பு வாதத்துக்குச் சாவு மணி" என்று தொண்டை கிழியக் கூச்சலிடுவதினால், வகுப்புவாதம் ஒழியவும் மாட்டாது; நாட்டில் ஒற்றுமை உண்டாகவும் மாட்டாது. அவ்வாறு கூச்சலிடுவோரின் தேசியத்துக்கும் மாத்துக்கூடி விடாது.

* * *

இந்திய இளைஞர் மகா நாடு:—இது ஸ்ரீமாந். கே. எம். நரிமான் தலைமையில் கூடியது. ஸ்ரீமாந், சுபாஷ் சந்திர போஸ் வரவேற்புக் கழகத் தலைவரா யிருந்தார். ஸ்ரீமாந் போஸ் தமது பிரசங்கத்தில் "தற்காலப் போக்கை அனுசரித்து நடப்பது தீமை யென்றும், உற்பத்தி யதிகரித்தல் கூடாதென்றும், தேவையை அதிகரிக்கக் கூடா தென்றும், வாழ்க்கை நிலையை உயர்த்தவே கூடாதென்றும், மாட்டு வண்டியிலே போய்க்கொண்டிருந்த காலத்திற்கு நாம் திரும்பப் போய் விடுவதற்காக நம்மாலியன்றமுயற்சிகளை யெல்லாம் செய்யவேண்டும்" என்றும் கூறும் மகாத்மா காந்தி போதனைகளையும் "அமைதியாக உட்கார்ந்து கொண்டு கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதை விட மேலானது, உலகத்தில் வேறு எதுவுமில்லை" யென்று கூறும் அரவிந்தர் போதனைகளையும் நான் பலமாகக் கண்டிக்கிறேன் என்று தைரியமாகக் கூறியிருக்கிறார் தென்னாட்டு வைதீகர்களும், கடவுள் நெறி அழிந்துபோகிறதே யென்று கண்ணீர் விடும் சமயக்கிறுக்குக் கொண்ட தேசிய வாதிகளும் ஸ்ரீ. சுபாஷ் போசின் பொன்மொழிகளைக் கவனிப்பார்களாக!

* * *

சர்வ கட்சி மகாநாட்டின் தவறு:—மத்திய சட்டசபையில் முஸ்லீம்களுக்கு மூன்றிலொரு பகுதி ஸ்தானம் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்று ஸ்ரீ. ஜின்னா கொண்டு வந்த தீர்மானத்தை சர்வகட்சி மகா நாட்டார் நிராகரித்து விட்டது மிகவும் வருந்தத் தக்கது. அந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய ஜெயகர் "பரஸ்பர நம்பிக்கையோடு யாவரும் ஒத்துழைத்து அதனால்வரும் இடையூறுகளையும் தாங்கத் தைரிய முள்ளவர்களாக இருக்கவேண்டு" மென்று உபதேசம் செய்கிறார். தேச முன்னேற்றத்தைக் கருதி விட்டுக் கொடுக்க வேண்டிய விஷயங்களில் விட்டுக் கொடுத்துத்தா னாகவேண்டுமென்று மற்றத் தலைவர்களும் வேதாந்தம் பேசுகிறார்கள். ஆனால் அவ்வாறு உபதேசம் செய்கிறவர்களும் வேதாந்தம் பேசுகிறவர்களும் அநுஷ்டானத்தில் அவைகளைத் தாமே கையாளத் தயாரா யில்லா திருப்பது இந்தியாவின் துரதிர்ஷ்ட மென்றே கூறுகிறோம். ஸ்ரீ. ஜின்னா காங்கிரசில் மிகவும் பற்றுக் கொண்ட ஒரு பிரபல முஸ்லீம் தலைவர். அவர் காங்கிரஸ்காரரோடு ஒத்துழைப்பதினால் மதப்பற்றுடைய முஸ்லீம் தலைவர்களும் பத்திரிகைகளும் அவரை மதத்துரோகி என்றும் சமூகத் துரோகி என்றும் தூற்றுவதை பத்திரிகை வாசிப்போர் நன்கறிவர். இந்தியாவிலுள்ள 7கோடி முஸ்லீம்களும் மூன்று நான்கு கட்சிகளாய்ப் பிரிந்து நிற்கையில், ஒருகட்சியாரை காங்கிரஸ் வழியில் கட்டுப் படுத்திவைக்க ஸ்ரீ. ஜின்னா பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதும் காங்கிரஸ் வாதிகளுக்குத் தெரியும். டெல்லியில் கூடிய சர்வ கட்சி முஸ்லீம் மகா நாட்டில் கூட ஸ்ரீ. ஜின்னா கலந்துகொள்ள வில்லை. எனவே ஸ்ரீஜின்னாவின் தீர்மானத்தை சர்வ கட்சிமகாநாட்டார் இவ்வளவு அலக்ஷியமாக நிராகரித்து விட்டது புத்திசாலித்தன மல்லவென்றே கூறுகிறோம். முஸ்லீம்களுக்கு எட்டோ பத்தோ ஸ்தானம் ஜாஸ்தியாக வழங்குவதினால் வான மண்டலம் இடிந்து விழுந்துவிடாது. வெள்ளையர் சப்பாத்துக்காலின் கீழ் நசுங்கிக் கிடந்தாலும் தம் சகோதரரான முஸ்லீம்களுக்கு எழெட்டு ஸ்தானம் ஜாஸ்தியாக வழங்க மறுப்போரின் மனப்பான்மை எத்தகை இழிவானதென்று நேயர்கள் நிதானம் செய்வார்களாக!

* * *

வாழ்த்து:—சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுகளாக நியமனம் பெற்றிருக்கும் டாக்டர் பண்டாலை, ஸ்ரீ. அநந்த கிருஷ்ணய்யர் ஆகிய இருவருக்கும், அட்வகேட்டு ஜனரலாக நியமனம் பெற்றிருக்கும் ஸ்ரீ. அல்லாடி கிருஷ்ணசுவாமி அய்யரவர்களுக்கும் ஸ்மால் காஸ் கோர்ட்டு சீப் ஜட்ஜாக நியமனம் பெற்றிருக்கும் ஸ்ரீ. தணிகாசலம் செட்டியா ரவர்களுக்கும் நாம் மனமார வாழ்த்துக் கூறுகிறோம். இந்நியமனங்களைப் போல் சர்வஜன சம்மதம் பெற்ற நியமனங்கள் இதுகாறும் உண்டாக வில்லை யென்றே சொல்ல வேண்டும்.

டாக்டர், கே. கிருஷ்ணன் பண்டாலே 1874ல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மாவேலிக் கரையில் பிறந்தார். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியிலும் சென்னை ராஜதானிக் கல்லூரியிலும் கல்வி கற்று, பி. எல். பட்டம் பெற்ற பிறகு, சிலகாலம் கொல்லத்தில் வக்கீலாக இருந்தார். வக்கீலாக இருந்த பொழுது திருவனந்தபுரம் ஸ்ரீ மூலம் பிரஜா சபைக்கும் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, தேசத் தொண்டு புரிந்தார். அவரது புத்தி நுட்பத்தையும் சட்டபாண்டித்தியத்தையும் நன்குணர்ந்த அக்காலத்திய அரசர் ஸ்ரீ. மூலந்திருநாள் அவரை திருவிதாங்கூர் ஹைக்கோர்ட்டு ஆக்டிங் ஜட்ஜியாக நியமனம் செய்தார். 1913-முதல் 17 வரை அவ்வுத்தியோகத்தை அவர் மிகசாமர்த்தியமாகநடத்தினராயினும், ரஜாவிலிருந்த ஸ்திரம் ஜட்ஜ் மீண்டும் வந்ததினால் அவர் உத்தியோகம்விடும்படியாயிற்று. அப்பால் அவர் சென்னைக்கு வந்து வக்கீல் தொழிலில் அமர்ந்தார். 1913-ல் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜ் ஆனார். மலையாளத்தில் ரஸாயன சாஸ்திர சம்மந்தமான பலபாடப் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ. ஸி. வி. அனந்தகிருஷ்ணய்யர் 1874-ல் பிறந்தார். சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையிலும், லா காலேஜிலும் கல்வி கற்று 1898-ல் ஹைகோர்ட்டு வக்கீலானார். 1921 முதல் 1923 வரை எலக்ஷன் கமிஷனராயிருந்தார். 1926-ல் சர்க்கார் வக்கீல் உத்தியோகம் பெற்றார். வக்கீல் தொழிலில் நல்ல பெயரெடுத்து சென்னை வக்கீல் மண்டலத்தில் முதலணியில் இடம் பெற்றதினால் சென்ற மார்ச்சு மாதத்தில் அட்வக்கேட்டு ஜெனரலானார். சைமன் கமிஷன் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று முடிவுசெய்த சென்னைச் சட்டசபையில், சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்க ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று மீண்டும் சர்கார் சார்பாக ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்ட பொழுது அது சட்ட விரோதமானதென்று எதிர் கட்சியார் எதிர்த்தனர். அக்காலத்தில் ஸ்ரீ. அனந்தகிருஷ்ணய்யர், எதிர் கட்சியார் வாதங்களை மிகச் சமர்த்தாகக் கண்டித்து சர்க்கார் கட்சியை நிலை நிறுத்தினர்.

ஸ்ரீ. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் 1885-ல் பிறந்தார். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயின்று 1904-ல் பி. ஏ. பட்டம் பெற்றார். 1906-ல் பி. எல். பட்டமும் பெற்று 1907-ல் சென்னை ஹைகோர்ட்டு வக்கீலாகி ஜஸ்டிஸ் பி. ஆர். சுந்தர மய்யரவர்களிடம் அப்பரிண்டிசாக இருந்தார். சொற்ப காலத்தில் வக்கீல் மண்டலத்தில் முதன்மை ஸ்தானம் பெற்றதினால் அவரது கியாதி தென்னாடு முழுதும் பரந்தது. ஹைகோர்ட்டு காஸ் லிஸ்டில் வாரந்தோறும் அவரது பெயர் 25-30 முறை அச்சிடப்படுவது சர்வ சாதாரண விஷய மென்றால், வக்கீல் தொழிலில் அல்லாடிக்குள்ள திறமையை நாம் விரித்துக் கூறத் தேவையில்லை. ஆயிரக்கணக்காக சம்பாதிப்பது போல் ஆயிரக்கணக்காக நல் விஷயங்களுக்கு உதவி புரியும் கொடையாளி. சென்னை சர்வகலா சங்கத்தில் ஆறு வருஷம் தொடர்ச்சியாக அங்கத்தினரா யிருந்தார். செனட்டிலும் சிண்டிகேட்டிலும் இப்பொழுதும் மெம்பராக விருந்து வருகிறார். அநேக பொது ஸ்தாபனங்களிலும் அங்கத்தினராக இருக்கிறார்.

ஸ்ரீ. தணிகாசலம் செட்டியார் 1874-ல் டிசம்பர் மாதத்தில் பிறந்தார். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் லா காலேஜிலும் கல்வி பயின்று ஹைகோர்ட்டு வக்கீலானார். ஆறு வருஷம் சட்ட சபை அங்கத்தினராகவும் ஒரு வருஷம் கார்ப்பரேஷன் தலைவராகவும் இருந்தார். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒரு முக்கியஸ்தர். வக்கீல் தொழிலிலும் நல்ல பெயரெடுத்தவர். கார்ப்பரேஷன் அங்கத்தினரா யிருந்து சென்னை நகரத்துக்கு அரிய தொண்டாற்றியவர். முனிசிபல் நிர்வாக விஷயங்களில் நிபுணர் எனப் பெயர் படைத்தவர். ஜஸ்டிஸ் கட்சியில் தலைவர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் அவர் சர்க்கார் உத்தியோகத்தில் புகுந்தது ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு பெரிய நஷ்ட மென்றே சொல்ல வேண்டும். பென்ஷன் பெற்ற பிறகாவது அவரைத் தலைவராய்ப்பெறும் பாக்கியம் அக்கட்சிக்கு உண்டாவதாக!

கல்கத்தா காங்கிரஸ்:—இந்திய தேசீய மகா நாட்டின் 43-வது கூட்டம் பண்டித மதிலால் நேரு தலைமையில் மிக விமரிசையாகக் கூடி முடிந்து விட்டது. உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. ஜெ. எம் சென்குப்தாவும், தலைவர் பண்டித மதிலால் நேருவும் நிகழ்த்திய சொற்பொழிவுகள் இந்தியர்களின் நித்திய பாராயணத்துக் குரிய முக்கியத் தன்மை வாய்ந்தனவாகும். அவ்வரிய பிரசங்கங்களை இச்சிறு பத்திரிகையில் வெளியிடுவது அசாத்திய மாகலின் சாரத்தை மட்டும் சுருக்கமாக இங்கே கூறுகிறோம்.

உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. சென்குப்தா, தமது பிரசங்கத்தில், நேரு யதாஸ்தின் நிலை, அதை இந்திய மக்கள் ஆதரிக்க வேண்டியதற்குள்ள காரணங்கள், அது பிற்காலத்தில் கையாளப்படும் விதம், நாம் இதுகாறும் பிரிட்டிஷாரோடு ஒத்துழைத்ததின் பலன், ஒத்துழையாமையே சுயராஜ்யத்துக்கு இன்றியமையாத வழி என்பதற்குள்ள காரணங்கள், இந்தியச் செல்வம் கொள்ளை போகும் வழி, முதலிய வற்றை யெல்லாம் மிகத் தெளிவாகவும் சாதுரிய மாகவும் விளக்கிக் காட்டி யிருக்கிறார்.



பண்டிட் ஜி

தலைவர் மதிலால் நேரு, தமது பிரசங்கத்தை (1) நமது தற்கால நிலை (2) நமது லக்ஷ்யம் (3) அதை அடையும் வகை என மூன்று பிரிவாக வகுத்துக் கொண்டு ஒவ்வொரு பிரிவையும் ஒரு பள்ளிப் பையனும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு விரித்துக் கூறி யிருக்கிறார். பண்டிதரவர்களது பிரசங்கத்தில், ஒரு இளைஞனது வீரமும், ஒரு வயோதிகரின் விவேகமும், ஒரு தத்துவ ஞானியின் ஆதர்சப் பாங்கும், ஒரு கவியின் கற்பனா சக்தியும், ஒரு பழுத்த அனுபவஸ்தரின் உலக ஞானமும் ஒருங்கே பொருந்தி யிருக்கின்றன. இந்திய மக்கள் 33 கோடிப் பேரின் தலை விதியைப் பொறுத்த அவரது திட்டமும், மகாத்மா செய்த திருத்தப்படி காங்கிரசில் நிறைவேறி விட்டது. இம்மட்டும் யாவும் மங்களகரமாக முடிந்ததைப் பற்றி நாம் மிக மகிழ்ச்சி யடைகிறோம்.

* * *

ஒற்றுமை யெங்கே? ஆனால் நம்மவர்கள் எதிர் பார்த்த ஒற்றுமை யெங்கே? நேரு யதாஸ்தை யாதரிப்பதற்காக ஒத்துழைத்த சர்வ கட்சியாரின் தற்கால நிலை யென்ன? இவ்விஷயங்களை ஆலோசிக்கும்போது சஞ்சலம் ஏற்படுகின்றது. மகாத்மாவின் திருத்தத்துக்குச் சாதகமாக 1350 ஓட்டுகளும், ஸ்ரீ. சுபாஷ் சந்திர போசின் திருத்தத்துக்குச் சாதகமாக 973 ஓட்டுகளும் கிடைத்ததை நேயர்கள் ஊன்றிக்கவனிக்குமாறு வேண்டுகிறோம். 377 ஓட்டுமிகுதியினால் மட்டுமே மகாத்மாவின் திருத்தம் நிறைவேறி யிருக்கிறது. முஸ்லீம் லீக், நேருயாதாஸ்தை ஒப்புக் கொள்ளும் விஷயத்தை ஒத்தி வைத்ததினாலும், சீக்கிய டெலிகேட்டுகள் சர்வகட்சி மகாநாட்டிலிருந்தும் உட்கால் டெலிகேட்டுகள் காங்கிரசிலிருந்தும் வெளியேறி விட்டதினாலும் மட்டிலுமே மகாத்மாவின் திருத்தம் நிறைவேறியதென்றும், மேலே கூறிய வெளி யேற்றங்களும் ஒத்திவைப்பும் நிகழா திருந்திருந்தால், ஸ்ரீ. சுபாஷ் பாபுவின் தீர்மானமே நிறைவேறி யிருக்குமென்று ஸ்ரீமாந், ஸ்ரீநிவாசய்யங்கர் ஒரு பத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. குடியேற்ற நாட்டு அந்தஸ்தை பிரிட்டிஷார் 1929-டிசம்பருக்குள்ளோ அதற்கு முன்னோ வழங்கா விட்டால் மீண்டும் ஒத்துழையாமை தொடங்கி வரிமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப் படுமென்று மகாத்மாவின் திருத்தத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதைப் பார்த்தவுடன் நேரு யாதாஸ்துக்கு வாழ்த்துக்கூறிய மிதவாதிகளெல்லாம் கிடுகிடுத்துப் போயிருக்கி

றார்கள். மிதவாதத் தலைவர்களில் ஒருவரான ஸர்.ஸி. பி. ராமசாமி அய்யர் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தைப் பார்த்தால், மிதவாதிகள் இனிமேல் காங்கிரஸ்காரர்களைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அஞ்சுவார்கள் என்றே தோற்றுகிறது. "1929 டிசம்பருக்குள் நேரு திட்டம் ஒப்புக்கொள்ளப்படாவிடில் வரிகொடா இயக்கம் தொடங்குவோம்" என்ற வீண் மிரட்டு எதற்கு என்கிறார் ஸர். ஸி. பி. ஆர். அய்யர். ஆனால் மிதவாதிகள் மிரட்டவில்லையா? "இந்திய நிலைமையை உள்ளபடி உணர்ந்து பிரிட்டிஷார் தம் மனப்போக்கை மாற்றிக்கொள்ளவில்லையானால் பின் என்ன நடக்குமென்பதை கடவுள் தான் அறிவார்!" என்று லிபரல் மகாநாட்டுத் தலைவர் சர். சிம்மன்லால் செதால்வட்டும் ஒரு சிறு மிரட்டு மிரட்டித்தானிருக்கிறார். ஆனால் மிரட்டுப் பலிக்காவிட்டால் செயலில் இறங்கத் தயாராயிருக்கும் காங்கிரஸ் காரரின் மிரட்டுக்கு விலை யுண்டா? "கடவுளே! நீதான் துணை" என்று வேதாந்தம் பேசும் மிதவாதிகள் மிரட்டுக்கு விலை யுண்டா? என்பதை ஸர். ஸி. பி. ஆர். சிந்தித்துப்பார்ப்பாராக!

முஸ்லீம் சர்வகக்ஷி மகாநாடு :—ஆகாகான் தலைமையில் கூடிய டெல்லி முஸ்லீம் சர்வ கட்சி மகாநாட்டுப் போக்கு ஒரு பிரத்தியேக மாதிரியாக இருக்கிறது. பூரண சுயேச்சைக் கட்சி, குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கட்சி, சீர்திருத்தமே விரும்பாத கட்சி என மூன்று கட்சிக்காரர் அந்த மகா நாட்டில் பங்கு கொண்டிருக்கிறார்கள். நேரு யாதாஸ்தை அவர்கள் ஆதரிக்கவுமில்லை. முத்திறப்பட்ட கட்சியாரையும் திருப்திப் படுத்துவதற்காக "பீடரல் அரசாங்கம்" தேவையென்று ஒரு சமாளிப்புத் தீர்மானம் மட்டும் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

ஸ்ரீ சென் குப்தா.

* * *

கடைசிப் பலன் :—டிசம்பர் மகா நாடுகளெல்லாம் இவ்வாறு ஒவ்வொரு திக்கை நோக்கி நிற்கையில் "ஒற்றுமை உண்டாகி விட்டது, என்று முழங்குவதற்குப் பொருளுண்டா? திருவிதம் துஷ்டலக்ஷணமென்பார்கள். ஆனால் நம்மவர்கள் நிலை சதுர் விதமாக இருப்பதால், நாட்டின் நிலை அதம லக்ஷணமென்றே நாம் முடிவு கூறுகிறோம். பிரிட்டிஷார் எந்த நிலைமையை இந்தியாவில் எதிர்பார்க்கிறார்களோ அந்த நிலைமை---சர்வ குழப்ப நிலைமை—இந்தியாவில் பரிபூரணமாகவே இருக்கிறது. இந்து தேசமே! உனக்கு ஆண்டவன்றான் துணை!

மகாத்மா காந்தி

நான் தீமையுடன் ஒத்துழைப்பதில்லை; நன்மையுடன் ஒத்துழையாதிருப்பதுமில்லை. தனிப்பட்ட நபர்களுடன் ஒத்துழையாமை மேற்கொள்வதும் எனக்கு உடன்பாடன்று. ஆனால் அவர்களது முறைகள், திட்டங்கள் முதலியவற்றோடு ஒத்துழையாமை மேற்கொள்வேன். இன்று கூட ராஜப் பிரதிநிதி, என்னை சமத்துவமான நிலையில் வரும்படி கேட்டுக் கொண்டால், நான் வெறுங் காலுடன் அவரிடம் விரைவாக நடந்து செல்வேன். அவ்வாறு சென்ற பிறகும், எனது ஒத்துழையாமை முறை சரியானதென்றும் காட்டுவேன்.

சுதேசமித்திரன் வருஷ அனுபந்தம்.

தென்னாட்டிலே தமிழ்ப் பத்திரிகைத் தொழிலில் வெற்றிக் கொடி நாட்டிய பெருமைக்குச் சுதேசமித்திரன் கம்பெனியாரே முற்றிலும் உரிமை யுடையவர். செய்வன திருந்தச் செய்வதில் அவர்களுக்கு இணையான பத்திரிகை நிருவாகஸ்தர்கள் இந்தியாவிலேயே இல்லையென்று சொல்லலாம். அவர்களது தொழில் வெற்றிக்கு இந்தச் சீரிய குணமே முக்கிய காரணம். அவர்களது ஆதர்ச உயர்ச்சியும், தொழிற்றேர்ச்சியும், நிர்வாகத் திறமையும் நம் முன்னிருக்கும் 1928-வது வருஷத்திய அனுபந்தத்தில் ஒருங்கே மிளிர்கின்றன. அதில் வெளிவந்திருக்கும், தமிழ் மொழி வளர்ச்சி, (திருகூடசுந்தரம் பிள்ளை) விவசாயத்தின் விருத்தி (ராவ்பகதூர் ஜெ. செல்வரங்க ராஜு) இந்திய வைரங்களும் வைரக் கனிகளும் (P.S. பார்த்தசாரதி ஐயங்கார் B.A., B.L.,) நான் நாடகம் எழுத ஆரம்பித்த கதை (ராவ் பகதூர் சம்பந்த முதலியார்) மருமகளின் துயரம் (எஸ். ஜி. ராமானுஜலு நாயுடு) பெத்த பெருமாள் பெரிய கங்காணியான கதை முதலிய கட்டுரைகளும், கதைகளும், மிக மனோகரமாக இருக்கின்றன. முகப்பில் விளங்கும் இந்திய மாதாவின் பலவர்ணப் படம் கண்ணைக் கவரும் பெற்றியதா யிருக்கிறது. டபிள் க்ரௌன் 116-பக்கம் கொண்ட இவ்வழகிய புத்தகத்தின் விலை ரூபா ஒன்றோ இரண்டோ என்று நேயர்கள் ஏக்கமுற வேண்டாம். விலை அணா நான்கு மட்டுமே. நமது மதிப்புரையால் சுதேசமித்திரன் கம்பெனியாருக்கு விசேஷ லாபம் எதுவும் உண்டாகப் போவதில்லை யென்பதை நாமறிவோம். ஏனென்றால் அவர்கள் அச்சிட்ட பிரதிகளெல்லாம் இதற்குள் செலவா யிருக்கக் கூடும். அநுபந்தம் வாசிக்காதவர்கள் அதிர்ஷ்டத்தினால் ஏதாவது பிரதிகள் மீதமிருந்தால், வேண்டுவோர் வாங்கிப் படித்து இன்புறுவார்களாக!

ஸ்வராஜ்யா வருஷ அநுபந்தம் :—(இங்கிலீஷ்)
முன் வருஷங்களைவிட இவ்வருஷ ஸ்வராஜ்யா அநுபந்தம் பலவழியில் மிகவும் சிறப்பு வாய்ந்திருக்கிறது. டாக்டர் ஜெ. டி. சண்டர்லந்து, சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் சுதீந்திரபோஸ், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, டாக்டர் குஞ்சிக்கண்ணன், புரொபசர் கே. சுந்தரராமய்யர், ஜஸ்டிஸ் ராமேசம், திவான் பகதூர் T. R. ராமச்சந்திரய்யர், ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயர், டாக்டர் பி. என். தாமஸ், கமலாதேவி சட்டோபாத்தியாயர், முதலிய பிரபல எழுத்தாளர்கள் எழுதிய 29 கட்டுரைகள் இதில் அடங்கியிருக்கின்றன.

சித்தார்த்தர் துறவு, அச்வமேதயாகம் (மூன்று வர்ணம்) இவ்வருஷ காங்கிரஸ் தலைவர், 1885 முதல் 1927 வரையுள்ள காங்கிரஸ் தலைவர்கள். பைக்காரா, பாபநாசம், குற்றாலம் அருவிகள், கிராம வாழ்க்கை, (மூன்று வர்ணம்) பெயர்பெற்ற தென்னாட்டுப் பாகவதர்கள், புத்தர். (மூன்று வர்ணம்) தென்னிந்திய ஆலயங்கள், ஹாம்பி நகரத்துப் பாழ் மண்டபங்கள், சிவசமுத்திரம் அருவி, முதலிய 14 அழகிய படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. விஷயங்களின் பெருமையையும், படங்களின் அழகையும் கவனிக்கும் போது அதற்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் விலை அணா 8-ம் மிகச் சொற்பமென்றே சொல்ல வேண்டும். தபாற் செலவு வேறு. வேண்டுவோர் மானேஜர், ஸ்வராஜ்யா, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதவும்.

குமரன்.

காரைக் குடியினின்றும் வெளிவரும் ஒரு வாரப் பத்திரிகை. எளிய இனிய, தெள்ளிய தமிழ் நடை கற்க விரும்புவோர்க்கு "குமரன்" தலையங்கங்கள் மிகவும் உதவி புரியத் தக்கன. அழகிய படங்களும் சிறந்த கட்டுரைகளும் தாங்கி டெமி 16 பக்கங்களுடன் வெளிவரும் குமரனுக்கு வருஷசந்தா ரூபா ஐந்தே.

கல்கத்தாவில் இம்மாதம் 27உ கூடிய அகில இந்திய மாதர் ஆசாரச் சீர்திருத்த மகா நாட்டில் தலைமை வகித்த திருவிதாங்கூர் இளைய ராணி மாட்சிமை தங்கிய ராஜ ராஜேச்வரி சேது பார்வதி பாய் தேவி நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.

என்னை இம் மகா நாட்டின் தலைவியாகத் தேர்ந்தெடுத்தது, என் சமஸ்தானத்துக்கு நீங்கள் செய்த கௌரவமென்றே எண்ணுகிறேன். திருவிதாங்கூர் சமஸ்தானம் பெண் கல்வி விஷயத்திலும் பொது வாழ்விலும் மிகவும் உன்னத நிலையடைந்திருக்கிறது. இவ்விஷயங்களில் திருவிதாங்கூருக்கு சமமான இந்திய சமஸ்தானங்கள் இல்லை யென்றுங் கூடச் சொல்லலாம். மேனாட்டு மாதர்கள் எவ்வள்வோ போராடிய பிறகே தமது உரிமைகளைப் பெற்றார்கள். மேட்டுக் குடிப் பெண்களுக்கும் சீமான்கள் பெண்களுக்கும் எப்பொழுதும் உயர்தரக் கல்வி போதிக்கப் பட்டதெனினும், சர்வகலா சாலைகளில் புருஷர்கள் கூட கல்வி பயிலும் உரிமை அவ்வளவாக அளிக்கப்படவில்லை. சாஸ்திரீய ஆராய்ச்சிக்கும் இலக்கியப் பயிற்சிக்கும் பெண்கள் லாயக்குடையவர்கள் அல்லவென்ற தப்பெண்ணத்தைப் போக்குவதற்கு, காரியோ என்னும் மாதரசி எவ்வளவோ பாடுபட்டும் முடியவில்லை. மகா யுத்தத்தின் மூலம் உண்டான பொருளாதாரச் சீர்கேட்டிற்குப் பிறகே பெண்கள் பூரண விடுதலை பெற்றார்கள் என்று சொல்லலாம். மகா யுத்த காலத்தில் புருஷர்கள் எல்லாம் போர் முனைக்குச் செல்லவே, அவர்கள் ஸ்தானத்தில் பெண்கள் மிகத் தைரியமாகப் பிரவேசித்து, திறமையுடன் கடனாற்றி எத்தனையோ பொறுப்புடைய வேலைகள் செய்யவும் பெண்கள் திராணியுடையவர்கள் என்று பிரத்தியட்சமாக நிரூபித்துக் காட்டினார்கள்.

திருவாங்கூர் மகா ராணி.

இந்திய மாதர் இயக்க வரலாறோ அத்தகையதன்று. வேதகாலத்தில் மாதர்கள் சமூக வாழ்வில் முக்கிய ஸ்தானம் பெற்றிருந்தார்கள். மாதர்கள் வேதம் பாடியதுடன் நில்லாமல் சட்டமும் இயற்றி வந்தனர். கணிதத்திலும் அவர்கள் நிபுணர்களாயிருந்தார்கள். புருஷர்களுக்கு சமமான சொத்துரிமையும் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வேத காலச் சட்ட திட்டங்களை அறியாத, புருஷ நீதிபதிகள் இப்பொழுது பெண்களுக்குச் சொத்துரிமை யளிக்க மறுக்கிறார்கள். அத்தகையோர் காலப்போக்குக்கு ஏற்றவாறு சட்டம் செய்யவும், இயற்கைக்குப் பொருத்தமான முறையில் சமூகம் முன்னேற்ற

மடையச் செய்யவும் டின மில்லாதவர்களா யிருக்கிறார்கள்.

கேரளத்திலோ, மாதர்களே குடும்ப நாயகிகளாயிருக்கிறார்கள். கேரளப் பெண்கள் ஏராளமான உரிமை பெற்றிருக்கிறார்கள். சமூக சச்சரவுகளும் ராஜீய கலகங்களும் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் கோஷா முறை அவசியமானதாக இருந்திருக்கலாம். இப்பொழுது அந்தக் கோஷா முறைக்குத் தேவையில்லை. தற்கால மாதர் முன்னேற்றத்துக்கு அது பெரும் தடையாக இருக்கிறது. கணவன், சகோதரன், குமாரன் முதலியோருடைய பாதுகாப்புக்கு ஆளாகாமல், கோஷாவாக அந்தப்புரத்தில் அடைபட்டுக் கிடந்து, உலக ஞானமே பெற முடியாது போன மாதர்கள், பிற்காலத்தில் குடும்ப நிர்வாகம் நடத்த ஆற்றலற்றவராய் விடுகிறார்கள். சாதாரணக்குடும்ப நிலைமையே இப்படியானால், ஜெமீன்தாரிகளின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமா? குழந்தைகளின் நடக்கைக்கும் குணங்களுக்கும் தந்தையைவிடத் தாயே முக்கிய காரணமாக இருக்கிறாள். உலகப் பெரியாரெல்லாம் தமது முன்னேற்றத்துக்குத் தம் தாய்மாரே காரணமென்று சொல்லியிருக்கிறார்கள். குழந்தைகளை நற்குண முடையவராக உருப்படுத்தும் பொருட்டே, இந்தியமாதர்கள் தம் நிலைமையைத் தாமே புனருத்தாரணம் செய்துகொள்ள வேண்டுமென்று நான் கூறுகிறேன். நான் பள்ளிக் கூடப் படிப்பை அதிகமாக வற்புறுத்தவில்லை. வெளி உலகத்தாருடன் பெண்கள் மிகத் தாராளமாகப் பழகி உலகஞானம் பெற வேண்டுமென்று மட்டுமே நான் வற்புறுத்துகிறேன். உலக விவகாரங்களை நாம் அவ்வப்போது செவ்வையாக உணர்ந்து கொள்ள வேண்டும். உலக விஷயங்களைக் கவனியாது பெண்கள் வீட்டுக்குள் அடைபட்டிருப்பது பெண்ணின் முன்னேற்றத்துக்குப் பெரும் தடையாக இருக்கிறது. மருமக்கத் தாய முறை கேரளத்தில் அமலி லிருப்பதினால் எழுதப் படிக்கத் தெரியாக் குறை அங்கே இல்லை. அம்மட்டோ! இந்தியாவிலேயே பெண் கல்வி விஷயத்தில் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானங்கள் முன்னணியில் நிற்கின்றன.

இந்தியாவில் விதவைகள் அதிகமா யிருப்பதற்கு பாலிய விவாகமே முக்கிய காரணமாயிருக்கிறது. தம்பதிகள் வயதில் பெருத்த ஏற்றத் தாழ்வு இருந்து வருவதும் வேறொரு காரண மென்று தோன்றுகிறது. 1 முதல் 15 வயது வரையுள்ள பால்ய விதவைகள் மிக அதிகமாயிருப்பது கவலைக்கிடமான தல்லவா? ஆகவே நமது விவாக முறையில் ஏதோ தவறு இருக்கிற தென்பது மட்டும் உண்மை. படித்த ஹிந்துக்களும் முஸ்லீம்களும் விதவா விவாகத்துக்கு அனுகூலமாயிருப்பது மிகவும மகிழ்ச்சிக் குரியதாகும். ஜனத் தலைவர்கள் தம் மனச்சாட்சிப்படி நடக்க தைரியமாக முன் வராததினால் தான், இவ்விஷயமாக அதிக முன்றேற்றம் உண்டாக வில்லை. ஆசாரச்சீர் திருத்தக்காரர்கள் மேடைமீது உக்கிரமாகப் பேசுகிறார்கள். வீட்டுக்குள் புகும் போது அவர்களுடைய வீராவேச மெல்லாம் தணிந்து விடுகிறது. மேடைப் பேச்சுக்கிணங்க ஏன் நடக்கவில்லையென்று அவர்களைக் கேட்டால், தம் பாட்டிமாரையும், மனைவிமாரையும், சகோதரிகளையும் சுட்டிக்காட்டிப் பெருமூச்சு விடுகிறார்கள். ஸ்திரீகளாகிய நாமே நமது முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கிறோமென்று புருஷர்கள் குறை கூறாதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பெண் கல்வி மிகவும் தேவை. மாதர்கள் எல்லாம் கல்வி கற்றல்லாமல் பெண்ணுலகம் முன்னேற்ற மடையாது. சமூகத் துறையிலும் ராஜீயத் துறையிலும் பெண்கள் ஈடுபட்டு உழைக்கும்படி சௌகரியம் செய்ய வேண்டும். இலக்கியத் துறையிலும் சமூகத்துறையிலும் பெண்கள் இறங்கி உழைக்க வேண்டும். இந்தியாவின் புனருத்தாரணம் முக்கியமாக ஒரு பொருளாதாரப் பிரச்சினையே. மாமூல் ஒழிய வேண்டும். மூட பழக்க வழக்கங்கள் தொலைய வேண்டும். பெண்கள் எல்லாம சுயேச்சையாக வாழ முன் வரவேண்டும். புருஷர்களை விடப் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் பெண்கள் மனதையும் புருஷர்கள் மனதையும் விட்டொழிய வேண்டும்.



தாங்கனிக்கா இந்தியர் நிலைமை.

கிழக்காப்பிரிக்காவிலுள்ள தாங்கனிக்கா ஒரு பிரிட்டிஷ் குடியேற்ற நாடு. அந்நாட்டுக்குடிகளில், தென்னிந்தியா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து குடியேறியிருக்கும் ஆசியாக்காரர்களே மிகுதி. தம் வயிற்றுப் பிழைப்புக்காகவே இந்த இந்தியர்களெல்லாம் வெகு தூரத்திலுள்ள தாங்கனிக்காவுக்குச் சென்றிருக்கிறார்கள். காசிக்குச் சென்றும் கருமம் தொலையவில்லை யென்றபடி அங்கும் இந்தியர்கள் துன்பம் ஒழியவில்லை. நிறத்திமிர் தாங்கனிக்காவில் வெறிகொண்டு தாண்டவமாடுகிறது. அதனால் இந்தியர்கள் தலை நிமிர்க்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். கேனியா தேசத்தார் இந்தியர்களுக்கு இழைத்து வரும் துன்பங்களைப்பற்றிச் சென்ற மாதப் பத்திரிகையில் விஸ்தாரமாகக் கூறியுள்ளோம். தாங்கனிக்காவும், கேனியாவுக்கு சமீபத்திலே இருப்பதால் கேனியாக் காற்று தாங்கனிக்காவிலும் வீசத் தொடங்கியிருக்கிறது. வாஸ்தவத்தில் கெனியா இந்தியர் துன்பங்களைவிட தாங்கனிக்கா இந்தியர் துன்பம் மிகக்கொடியதாக விருக்கிறது. சர்க்கார் உத்தியோகங்களெல்லாம் வெள்ளையர்களுக்கே கொடுக்கப்படுகின்றன. உயர்தரப் பட்டம் பெற்ற இந்தியர்களுக்கும் அங்கு ஸர்க்கார் உத்தியோகம் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறது.

அபூர்வமாக ஸர்க்கார் உத்தியோகம் பெற்ற ஆசியாக்காரர்களும், வெள்ளை உத்தியோகஸ்தரால் துன்புறுத்தப்பட்டு, உத்தியோகத்திலிருந்து நீக்கப் படுகிறார்கள். ஒரே உத்தியோகத்துக்கு வெள்ளையனுக்கு உயர்ந்த சம்பளமும் ஆசியாக்காரனுக்குக் குறைந்த சம்பளமும் கொடுக்கப் படுகிறது. வெள்ளையர் களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கிற லீவ், அலவன்ஸ் முதலிய சௌகரியங்களும் ஆசியாக்காரர்களுக்கு அனுமதிக்கப் பட வில்லை.

எத்தகைய உயர்தரப்பட்டம் பெற்றவனாயிருந்தாலும் சரி, இந்தியனுக்கு முதன் முதல் குமஸ்தா உத்தியோகந்தான் கொடுக்கப்படுகிறது. கிடைத்தது பாக்கியம் என்று திருப்திப்படவேண்டியது தான் இந்தியன் விதி. இந்தக் குமஸ்தா உத்தியோகத்திலும் பல பிரிவுகள் இருக்கின்றன. குமஸ்தாவுக்கு ஆரம்ப சம்பளம் 7 பவுன் 10 ஷில்லிங்—அதாவது 98 ரூபா. தாங்கனிக்கா போன்ற தூரதேசத்தில் இந்தச் சொற்ப சம்பளத்தில் காலந் தள்ளுவது மிகவும் கஷ்டமான வேலை. தாங்கனிக்காவில் வீட்டு வாடகை மாதம் 4 பவுன். எனவே மீதமுள்ள $3\frac{1}{2}$ பவுனைக்கொண்டு தூர தேசமான தாங்கனிக்காவில் எவ்வாறு உயிர் வாழ முடியும். அன்றியும் டாங்கா, மேஷா, டோடுமா, மவுன்ஸா முதலிய இடங்களில் வீட்டு வாடகை இன்னமும் அதிகம். பெரிய தொகை வாடகை கொடுக்க முடியாதவர்களுக்கு மேற்கூறிய இடங்களில் ஒரு சிறு குடிசை கூடக் கிடையாது. இத்தகைய கஷ்டங்களால் இந்தியர்கள் கடனாளியாகும்படி நேருகிறது.

இனி வெள்ளை உத்தியோகஸ்தர்கள் நிலைமையைப்பற்றிக் கவனிப்போம். வெள்ளை உத்தியோகஸ்தர்களுக்குத் தக்க சம்பளமும், ஏராளமான வீட்டுத்தட்டு முட்டுகளும், சௌகரியமான வீடும் கொடுக்கப்படுகின்றன. அம்மட்டோ! அவர்களுடைய தேவைகளைக் கவனிக்க சர்க்கார் சதா காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கஷ்ட மனுபவிக்கும் வெள்ளையர்களை டாங்கானிக்காவில் காண்பதரிது. வீடு கிடையாமல் படும் கஷ்டங்கள் இல்லவே

இல்லை. ஆசியாக்காரர் வாழும் இடங்கள் சுகாதார சௌகரியங்கள் இல்லாதவைகளாயிருக்கின்றன. அதற்குக் காரணம் ஆசியாக்காரரின் வறுமையே. வறுமையின் கொடுமையால் சுகாதார சௌகரியங்கள் இல்லாத இடத்தில் ஆசியாக்காரர் குடியிருக்கும்படி நேர்ந்திருக்கிறது. வறுமையின் கொடுமையால் புஷ்டியான உணவுப் பொருள்கள் வாங்கவும் அவர்கள் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். மேற்கூறிய காரணங்களால் ஆசியாக்காரர்களெல்லாம் நோயாளிகளாகவே இருந்து வருகிறார்கள். அவருக்குத் தக்க வைத்திய உதவியும் கிடைப்பதில்லை. அவர்கள் வாழுமிடங்களுக்கு வைத்திய இலாகா அதிகாரிகள் செல்வதுமில்லை. நோயாளிகள் வைத்தியர்களை நாடிச் சென்றாலும் வெள்ளை வைத்தியர்கள் அவர்களை வெறுக்கிறார்கள். ஆசியாக்காரர் கஷ்டங்கள் ஒழிய வேண்டுமானால், சுகாதார நிலைமை வாய்ந்த வீட்டு வசதிகளும் வைத்திய உதவிகளும் சர்க்கார் செய்து கொடுக்க வேண்டும். வெள்ளையர்களுக்குக் கொடுக்கப் படுவது போன்று லீவ், அலவன்ஸ் முதலிய சௌகரியங்களும் சர்க்கார் கொடுக்க வேண்டும். ஆனால் தற்கால நிலைமையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆசியாக்காரருக்கு எத்தகைய உதவியும் செய்வார்கள் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

ஆங்கில உத்தியோகஸ்தன் தேக சுகார்த்தம் லீவ் வேண்டுமென்று கேட்டால் உடனே கொடுக்கப் படுகிறது. நோயுற்றிருக்கும் நாட்களில் வெள்ளையர்களுக்கு வைத்திய உதவியும் சம்பளமும் அளிக்கப் படுகிறது. ஆசியாக்காரருக்கு அத்தகைய சௌகரியங்கள் ஒன்றும் செய்து கொடுக்கப் படுவதில்லை. வெள்ளை உத்தியோகஸ்தர்களுக்கு சட்டப்படி மாதம் 6 நாள் லீவ் கொடுக்கப் படுகிறது. சுதேசம் சென்றால் பிரயாணச் செலவும் சம்பளத்துடன் லீவும் கொடுக்கப் படுகிறது. ஆசியாக்காரர்களுக்கு இவைகள் கிடையா. ஆசியாக்காரர்களுக்குப் பம்பாய் வரையிலும் பிரயாணச் செலவு கொடுக்கப் படுகிறது.

புரோமோஷன் விஷயத்திலும் ஆசியாக்காரர் பாடு மிக மோசமாகவே இருக்கிறது. எவ்வளவு உயர்தரக் கலா சாலைப் பட்டம் பெற்ற ஆசியாக்காரனும் உத்தியோகத்தில் பிரவேசித்தது முதல் நீங்கும்வரை குமாஸ்தாவாக இருந்தே வாழ் நாளைத் தொலைக்க வேண்டும். வெள்ளையர்களுக்கு நாட்டுப் பாஷை கற்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை. ஆசியாக்காரருக்கு மட்டும் அது வற்புறுத்தப் படுகிறது. தாங்கனிக்கா நாட்டுப் பாஷையோ மிகவும் கஷ்டமான பாஷை. ஒருகால் ஆசியாக்காரன் யாராவது அதைக் கற்றுத் தேர்ச்சி யடைந்தாலும் அதற்குள்ள விருதும் அளிக்கப் படுவதில்லை.

வைத்திய இலாகாவில் உத்தியோகம் வகிப்பவர்களெல்லாம் ஆசியாக்காரர்களே. அவர்களெல்லாம் பிரிட்டிஷ் சர்வ கலாசாலைகளில் விருது பெற்றவர்களாகவுமிருக்கிறார்கள். எனினும் அவர்களுக்கு சப் அஸிஸ்டன்ட் சர்ஜன் கிரேடுக்கு மேற்பட்ட உத்தியோகம் அளிக்கப்படுவதில்லை. மாதமொன்றுக்கு 20 பவுன் முதல் 25 பவுன் வரை மட்டுமே சம்பளம் கொடுக்கப் படுகிறது. ஒரு பட்டமும் பெறாத வெள்ளையர்களுக்கு மெடிகல் ஆபீசர் என்ற உயர்தர உத்தியோகமும் 500 பவுன் முதல் 1000 பவுன் வரை சம்பளமும் கொடுக்கப் படுகிறது.

உபகாரச் சம்பள விஷயத்திலும் பல குறைபாடுகள் இருந்து வருகின்றன. வெள்ளையர்களுக்கு 15-வது வருஷத்தில், அவர்கள் அப்பொழுது வாங்கும் முழுச் சம்பளமும் உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது. ஆசியாக்காரனுக்கோ அவன் உத்தியோகம் விடும்போது பெற்றுவந்த சம்பளத்தில் மூன்றில் இரண்டுபாகமே கொடுக்கப் படுகிறது. 15 வருஷங்களுக்கிடையில் ஆசியாக்காரன் இறந்து போனால், அவனது குடும்பத்துக்கு சர்க்கார் எத்தகைய உதவியும் செய்வதில்லை. வெள்ளையன் இறந்து போனால் அவனுடைய விதவைக்கும் குழந்தைகளுக்கும் "அநாதை நிதி"யிலிருந்து உதவி யளிக்கப்படுகிறது.

நிறக் கொடுமையால் ஆசியக்காரர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் அநந்தம். இவைகள் எந்நாள் ஒழியுமோ? ஈசனே அறிவார்!

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்

இந்தியப் பத்திரிகைகள்

சென்னை சுயேச்சை வாதிகள்.—

ஸ்ரீ. சீனிவாச ஐயங்காரைத் தலைவராகக் கொண்ட சென்னை சுயேச்சை வாதிகளின் யோக்கியதை, மற்ற சுயேச்சைக்காரரை நடுத் தெருவில் விட்டு, மகாத்மா தீர்மானத்தை ஆதரிக்கப் புறப்பட்டதிலிருந்தே உலகத்திற்கு வெளிப்பட்டது. இப்பொழுது முற்றிலும் வெளிப்பட நேர்ந்தது. அதைப் பார்த்து காங்கிரஸ் கூட்டத்தில் பலரும் சிரிக்கும்படி நேரிட்டதைக் கண்டு சந்தோஷமடைகிறோம். சைமன் கமிஷனை ஒவ்வொரு ஊரிலும் பகிஷ்கரித்து, ஹார்த்தால் நடத்த வேண்டுமென்றும், அப்படி நடத்துவதைத் தடுக்கும் சர்க்கார் தடை யுத்தரவுகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், ஸ்ரீ. சாம்ப மூர்த்தி ஒரு தீர்மானம் கொண்டு வந்து பேசிய போது, சென்ற வருஷம் சென்னையில் தலைவர்கள் நடந்து கொண்டதைக் குறிப்பிட்டார். உடனே சத்திய மூர்த்திக்குக் கோபம் வந்து விட்டது. தடை யுத்தரவை மீறாததற்கு ஸ்ரீ. சாமி வெங்கடாசலம் செட்டியாரே காரணமென்றும், காங்கிரஸ் மீறும்படி சொன்னால் தாம் உடனே மீறி ஜெயிலுக்குப்போகத் தயாரென்றும் சொன்னார். ஸ்ரீ. சாமி வெங்கடாசலம் மீது போட்ட பழியைப் பற்றி அவர் கவனித்துக் கொள்வார். ஆனால் இவ்வளவு வீரமாய்ப் பேசிய ஸ்ரீ. சத்திய மூர்த்தியும், பரிபூரண சுயேச்சையை தவிர வேறெதுவும் வேண்டியதில்லையென்றும், உடனே பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு ஓடிவிட வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டம்செய்யும் ஸ்ரீ. ஐயங்காரும், வாய்ப் பேச்சால் பிரிட்டிஷாரை விரட்டும் ஸ்ரீ.ஐயங்காரும், அந்த பிரிட்டிஷ் சர்க்கார் உத்தரவைப் பொருட் படுத்தி மீறலாமா அல்லது அதை அலட்சியமாய் நினைத்து மீறாமல் இருந்து விடலாமா என்ற யோசனையில் ஆழ்ந்து விட்டபடியால்—தீர்மானத்துக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ ஓட் கொடுக்காமல் தப்பித்துக் கொண்டார். சைமன் கமிஷன் மறுபடியும் சென்னைக்கு வரும்போது தாம் சென்னையில் "இருந்தால்" ஹார்த்தால் நடத்தப் போவதாக ஆர்ப்பாட்டஞ் செய்த ஸ்ரீ. சத்திய மூர்த்தியும், ஒருவர் தவிர மற்ற சென்னை சுயேச்சை வாதிகளும் தீர்மானத்திற்கு விரோதமாக ஓட் கொடுத்தனராம். இதை விடக் கேவலம் வேறென்ன வேண்டும்? சென்னை சுயேச்சை வாதிகளின் யோக்கியதையைத் தெரிவிக்க இதை விடச் சிறந்த உதாரணம் எங்காவது அகப்படப் போகிறதா? இந்த தேசாபிமானிகள் தான் பண்டித நேருவுக்கு தேசாபிமானம் கிடையாதென்று வெட்கமில்லாமல் சொல்லுகிறார்கள். ஒரு 144 உத்தரவை மீறத் தயாரா யில்லாத இந்த வீரர்கள் தான் பிரிட்டிஷாரை உடனே இந்தியாவை விட்டுப் போய் விடவேண்டுமென்று கர்ஜிக்கிறார்கள். ஹார்த்தாலால் நேரிடும் கலகத்தை அடக்க சக்தி யில்லாத இந்த சூரர்கள் தான் இந்தியாவிற்கு உடனே பரிபூரண சுயேச்சை வேண்டுமென்று ஆர்ப்பாட்டஞ் செய்கிறார்கள். இதை விட சென்னை மாகாணத்திற்கு வேறு கேவலம் என்ன வேண்டும்? மிதவாத மகா நாட்டில் பார்த்தால், அங்கும் அதிகமாய் பேசியவர்கள் சென்னை மிதவாதிகளே என்று தெரிகிறது. காங்கிரஸைப் பார்த்தால் அங்கும் அதிக "வீரத்தன"மாய் பேசியவர்கள் சென்னை வாசிகளே என்று தெரிகிறது. ஓட் எடுப்பதைப்பார்த்தால் சென்னை சூரர்களே பகிஷ்காரம் முதலிய, செயலில் காட்டவேண்டிய தீர்மானங்களுக்கு விரோதமாய் ஓட் கொடுக்கிறார்களென்று தெரிகிறது. இந்த வாய்ப் பேச்சு வீரர்களால் சென்னைக்கு அவமானத்தைத் தவிர வேறுமான மல்ல.

—தமிழ் நாடு.

கல்கத்தா காங்கிரஸ் :—

சர்வ கட்சி மகா சபையில் முஸ்லிம்களின் சார்பாக ஜனப் ஜின்னா கிளத்திய திருத்தப் பிரரேபணைகள் ஒப்புக்கொள்ளப்படாதது பெரிதும் வருந்தற் குரியதாகும். அவை ஏற்கப் பட்டிருப்பின் எவருக்கும் பெரு நட்டம் நேர்ந்திருக்குமென்று நாம் கருதவில்லை. சிறப்பாக இந்திய சட்டசபையில் முஸ்லீம்களுக்கு மூன்றில் ஒரு பங்கு பீடங்களை ஒதுக்கி வைக்கும்

பிரேரபணை எளிதில் அங்கீகரிக்கப் பட்டிருக்கலாம். மற்றப் பிரேரபணைகளைப் பொறுத்த வரையில் இருசாராரும் இணக்கங் காட்டி ஒரு முடிவுக்கு வந்திருத்தல் கூடும். இந் நன் முடிவு ஏற்பட்டிருந்தால் முஸ்லிம் லீக் நேரு திட்டத்தை ஆதரித்திருக்கும். சர்வகட்சி மகா சபையிலிருந்த குறுகிய நோக்கங் கொண்ட சில ஹிந்துக்கள் இதற்கிடமின்றிச் செய்து விட்டது குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். முஸ்லிம்களில் ஒற்றுமையை நாடும் பகுதியினரையும் புறக்கணித்து விடுதல் நன்மை தருவதாகாது. அரியதொரு சந்தர்ப்பம் தவறிப் போய் விட்டது. இனியேனும் தலைவர்கள் முனைந்து நின்று, மீண்டும் முஸ்லிம் லீக் கூடுவதற்குள் ஓர் ஒற்றுமையான முடிவு காண முயல்வார்களாக.

பூரண சுதந்திரக் கூச்சல் கிளப்பிய நண்பர்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள்? இனியேனும் காங்கரஸ் தீர்மானத்துக்குத் தலை வணங்கி அடிகளின் வேலைத் திட்டத்தை நடத்தி வைக்கப் போகிறார்களா? அல்லது வீண் கூச்சல் போட்டு நாட்டைப் பாழ்படுத்தப் போகிறார்களா? அவர்களுடைய கூச்சலால் ஏற்கனவே ஒரு பெருந் தீமை விளைந்து விட்டது. காங்கரஸ் தலைவர்கள் வகுப்புரிமை விஷயத்தில் கவனம் செலுத்தி ஒரு முடிவுக்கு வரமுடியாமல் போயிற்று.

சுதந்திரப்போர் வீரருக்குள் கட்டுப்பாடு இன்றியமையாததாகும். சுயேச்சை வீரர்களுக்குள் இக்கட்டுப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. சுயேச்சை சங்கத் தலைவர் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் தமது துணைவர்களைக் கலந்து கொண்டு ராஜித் தீர்மானத்தை ஆதரித்திருப்பதாகக் கூறினார். சுயேச்சை வாதிகள் அவரை நட்டாற்றில் விட்டு விட்டார்கள். ஸ்ரீமான் ஐயங்காரேனும் தமது உறுதி பிறழாமல் நின்று அடிகளின் தீர்மானத்தை ஆதரித்திருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. ஸ்ரீமான்கள் சுபாஷ் சந்திர போஸ், ஜவஹரிலால் நேரு முதலியோரின் தேச பக்தியை நாம் போற்றுகிறோம். ஆனால் அவர்கள் சிறிது அடக்கமும் பணிவும் கொள்ள வேண்டுமென்பது நமது கருத்து.

சென்ற சில ஆண்டுகளாகக் காங்கரஸ் தீர்மானங்கள் பெரிதும் காகிதத் தீர்மானங்களாகவே இருந்து வருகின்றன. இத்தீர்மானமும் அத்தகைய கதியடையுமாறு பார்த்திருக்கலாகாது. தேசமக்கள் திரண்டெழுந்து அடிகளை ஆதரித்து நிற்றல் வேண்டும். ஓராண்டுக்குள் அடிகளின் நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கப் பெரு முயற்சி செய்தல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டில் சத்தியமும் அஹிம்சையும் நிலவுதல் வேண்டும். நாட்டில் அஹிம்சை குடிகொண்டிராவிடில் அடிகள் ஒத்துழையாமை உயிர்ப்பிக்கத் தயங்குதல் கூடும். காங்கரஸ் தலைவர்கள் சிலரின் பொய்புனை சுருட்டுகள் அடிகளுக்குப் பெரிதும் மனத்துயரளித்திருப்பதாகத் தெரிகிறது. தலைவர்கள் தங்கள் உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

காந்திபடிகள் தலைமை வகிக்க ஒருப்படவில்லையென்று இனி எவரும் குறை கூறுதற்கில்லை. அடுத்த ஆண்டில் ஒத்துழையாமை இயக்கம் உயிர்ப்பிக்கப்படவில்லையானால் அதற்குத் தேசமக்களும் தலைவர்களுமே பொறுப்புள்ளவர்களாவார்கள். ஒத்துழையாமை ஓங்க! மகாத்மா காந்தி வாழ்க!!

—நவசக்தி.

அந்நியர் கொடுமை.

அந்நியர் ஆதிக்கத்தில் சிக்குண்டு தவிக்கும் ஒரு நாட்டுக்கு ஏற்படும் தீங்குகள் ஒன்றிரண்டல்ல. எப்புறம் திரும்பினும் முட்கள்தாம். நம் தேச சுதந்தரத்தை நாம் இழந்த அன்றே நம் உரிமைகள் அனைத்தையும் இழந்தோம். நம் வாணிபத்திற்கும், கைத் தொழில்களுக்கும் நாசகாலம் சம்பவித்தது. இதே நிமிஷத்தில் கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வகையறியாது, தவிக்கும் பாரத மக்களின் தொகை எத்தனை லக்ஷம்? வேலையில்லாத திண்டாட்ட காரணமாக ஒரொரு சமயம், தற்கொலை செய்து கொள்ள நினைக்கும் வாலிபர்களது தொகை எத்தனை ஆயிரம்! என்ற போதிலும், நம்மை ரக்ஷிக்க வந்தவர்களெனச் சொல்லி வேஷம் போட்டுத் திரியும் அந்நியர் இந்நாட்டிலிருந்து சுரண்டிச் செல்லும் செல்வத்தின் அளவு சிறிதும் குறையவில்லை. வியாபாரம் என்ற பெயரால் இவ்வளவு சௌகரியமாக இச்செல்வத்தை வாரிப் போக இவ்வந்நியர் இந்தியக் கைத் தொழில்களைக் கோர வகையில் கொன்றழித்திருக்கிறார்கள் எனச் சொல்வதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றன.

ஒரு தேசத்திற்கு உயிர் நாடியாயிருப்பது வியாபாரம் ஆகும். இதன் வளர்ச்சிக்கு இன்றி

யமையாதவை தொழில்கள். இந்தியருக்குச் சொந்தமாயிருந்த இவ்விரண்டும் அழிந்ததால், நமக்கேற்பட்ட ஆபத்தை சமீப காலம் வரை நாம் உணராமலிருந்தோம். இவ்விரண்டையும் உயிர்ப்பிக்க, நாம் முயற்சி செய்யத் துவக்கி இன்னும் வெகு நாளாகி விடவில்லை. எனினும், தங்கள் வாயில் மண் விழுந்து விடுமோ எனப் பிரிட்டிஷ் வியாபாரிகள் அச்சங்கொண்டு இம்முயற்சியை மண்டையிலடிக்கப் பார்க்கின்றனர். லண்டனிலுள்ள பிரீபிரஸ் பிரதிநிதி, நேற்றும், அதற்கு முன் தினமும் அனுப்பியுள்ள தந்திகளிலிருந்து வியாபாரத் துறையில் இந்தியர்களை தலை தூக்க வொட்டாது அமுக்கிப் போட, அங்கு இரகசியமாகத் தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இது பிரிட்டிஷாரது பரம்பரை வேலை முறையை யொட்டிய சூழ்ச்சிதானேயன்றி புதிதல்ல. பாங்கிகள், கப்பல் வியாபாரம், இன்ஷியூரன்ஸ் இத்துறைகளில் இந்தியர்கள் இதுகாலை, பெற்றுள்ள ஆதிக்கம் மிகமிகச் சொற்பமாகும். இச்சிறிய ஆதிக்கத்தையும் அழித்துப் போட்டு அம்மூன்றையும் தங்களது சொந்த ஏகபோகத்தொழில்களாக்கிக்கொள்ளவேண்டுமென்பது பிரிட்டிஷ் வியாபாரிகளின் விருப்பம். செலாவணி, பாங்கித் தொழில் இரண்டிற்கும் இவர்களையே எஜமானர்களாக ஆக்க, ஸர் பேசில் பிளாக்கட் (மாஜி இந்திய வரவு செலவு அங்கத்தினர்) இந்தியாவின் உப்பைத் தின்றுகொண்டே 'ரிசர்வ் பாங்கி' மசோதா மூலம் ஆனவரைப் பாடு பட்டார். ஆனால் இவரது முயற்சி முளையிலேயே கிள்ளப்பட்டது. இவருக்குப் பின் அப்பதவிக்கு வந்திருக்கும் ஸர் சார்லஸ் ஷுஸ்டர் என்பவர் இந்த மசோதாவை மீண்டும் இந்தியா சட்டசபையில் கொண்டுவரப்போகிறாராம். இவர் லண்டனிலிருந்து புறப்படும் பொழுதே அங்குள்ள முதலாளிக் கோஷ்டியினர் அவருக்கு இதுபற்றி உபதேசம் செய்திருப்பரென்பதில் ஐயமில்லை. கப்பல்களைக் கொண்டு இந்தியர் நடத்தும் வியாபாரத்தை ஒழிக்க பிரிட்டிஷார் கையாளப் போகும் முறை வேறு. பிரிட்டிஷ் கப்பல்களுடன் போட்டி போடும் இந்தியக் கப்பல் கம்பெனி இப்பொழுது ஒன்றே ஒன்றுதான் உளது. என்றபோதிலும் இவ்வொன்றைக் காணக்கூட பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு மனம் சகிக்கவில்லை. கப்பல் கட்டணங்களைப் படிப்படியாகக் குறைத்துப்போட்டு அவ்விந்தியக் கம்பெனி சமாளிக்க முடியாது திண்டாடச்செய்து இறுதியில் அழியத்தக்க நிலைக்கு அதைக் கொண்டுவரவேண்டுமென பிரிட்டிஷார் உத்தேசித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் கப்பல்காரர்கள் கட்டணங்களைக் குறைப்பரேல், இந்தியக் கம்பெனியும் குறைத்தாக வேண்டும். இதனால் இதற்கு நஷ்ட மேற்படும். பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை, இதுகாறும் தங்கள் இலாபத்திலிருந்து சேர்த்து வைத்திருக்கும் சேம நிதியிலிருந்து ஈடுபடுத்திக் கொள்ளும். இந்தியக் கம்பெனி அழிந்து போன பின் தங்கள் இஷ்டம் போல் கட்டணத்தை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திக்கொள்ளலாமென்பது இவைகளது கருத்து. இந்தியக் கடற்கரையோரக் கப்பல் போக்குவரத்தை இந்தியர்களுக்கென ஒதுக்கி வைக்க வேண்டுமென இந்தியா சட்ட சபை அங்கத்தினர் ஸ்ரீ. ஹாஜி கொண்டுவந்துள்ள மசோதாவைப் பல வகைகளிலும் எதிர்த்து வீழ்த்துவதென பிரிட்டிஷ் வியாபாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். இப்பெரும் போருக்கு அவர்கள் தரப்பில் வீரராகக் கிளம்பியுள்ளவர் இஞ்ச்கேப் 'பிரபு' ஆவர். இது சம்பந்தமான பிரசாரத்திற்காக மட்டும் அவர் 5 லட்சம் பவுன் சேகரித்திருக்கிறாராம். அந்நியர் என்பதற்காகத் தங்களது வியாபாரம் கெட்டுப்போவதாயிருக்குமேல் இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகளை இந் நாட்டிற்கே கொண்டு வந்து உத்தாரணம் செய்யவும் பிரிட்டிஷார் தயாராயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்திய இன்ஷியூரன்ஸ் தொழில் முழுதையும் கைப்பற்றவும், பிரிட்டிஷ் முதலாளிகள் ஒன்று சேர்ந்து வேலை செய்யப் போவதாகத் தெரிகிறது.

இந்தியர், அந்நியரால் சிறிதும் இரக்கமற்ற வகையில் ஓட்டாண்டிகளாக ஆக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர்களது முயற்சியை நாம் இப்பொழுதே நம் முழு பலத்துடனும் எதிர்க்காது, மேலும் மௌனம் சாதித்துக்கொண்டிருப்போமாகில், நாம் மீண்டும் முன்னுக்கு வரக் கூடும் என தற்பொழுதிருந்து வரும் நம்பிக்கை கூட சீக்கிரத்தில் அழிவுறும். நாம் தொடங்க வேண்டிய இந்த எதிர்ப்பில் அரசாங்கத்தார் நமக்குச் சிறிதும் உதவி புரிவர் என நாம் கனவிலும் கருத வேண்டியதில்லை. அந்நிய அதிகார வர்க்கத்தினர் இயற்கையாக பிரிட்டிஷ் வியாபாரக் கூட்டத்தையே ஆதரிப்பர். ஆதலின், நம்

பிக்கையைத் தவிர வேறுகதி நமக்குக் கிடையாது. பிரிட்டிஷாரது சரக்கோ அல்லது வேறு அந்நியரது சரக்கோ தற்காலிகமாக சரசமாக இருககலாம். ஆனல் இவர்கள் சிறுமீன் போட்டு பெருமீன் இழுப்போராவர் என்பது இந்திய மக்களுக்கு ஞாபகமிருக்க வேண்டும். அந்நியச் சாமான்களைப் பகிஷ்கரித்து இந்தியத் தொழில்களை வளர்க்கவேண்டுமென நம்மவரிடை பிரசாரம் செய்ய இப்போது போல் எப்பொழுதும் இவ்வளவு அவசியம் ஏற்பட்டதில்லை.

ஸ்வராஜ்யா.

'லக்ஷ்மி' வரவேற்பு.

அன்பே சிவமெனு மன்னையே வருக!
ஆதியே முடிவிலா சோதியே வருக!
இதயத் தாமரைவாழ் 'இலக்குமி' யருளே
ஈன்றுதரித் தழிக்கும் இயற்கையெம் பொருளே
உலகெலாந் துதிசெயுங் கலைமக ளணியே
ஊக்கமே தருந்தமிழ் பாக்களின் மணியே.
எந்தையர் புகழ்திரு சுந்தர னுயிரே
ஏட்டின் வழிமதி காட்டியே நடந்து
ஐந்து வயதும் வெகுவிந்தை யாய்க் கழித்து
ஒப்புர வொழுகிய கற்புக் கரசியே
ஓதும் பலபல சாதியை யொழித்து
ஔவையு மதித்த அணுவுக்குள் கடலில்
அக்கரை யிக்கரை நீராடி நீ வருக!

கு. ரா. லக்ஷ்மணன்,
பெஷாவார்.

சுருட்டுக் குடியின் தீமை.

இந்தியாவைப் பாழ் படுத்திவரும் நவ நாகரிகப் பழக்க வழக்கங்களுள் புகைச் சுருட்டுக் குடி ஒன்றாகும். இவ்வழக்கம் இந்தியாவுக்கு முற்றிலும் நூதனமானது. புகையிலை அமெரிக்காவிற் பயிராகி வந்த விஷயம் சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர்த்தான் கண்டு பிடிக்கப் பட்டது. புகைச் சுருட்டு முதன் முதலாக ஐரோப்பியரால் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டு இப்பால் அவர்களுடைய இந்திய ஆதிக்யத்துடன் இந்தியாவினுள்ளும் அவர்களைப்போன்றே பலமாகக் குடிகொண்டு விட்டது. இப்பொழுது சுருட்டு வியாபாரம் ஒரு பெரிய வியாபாரமாகப் போய்ப் பல ஐரோப்பியக் கம்பெனிகள் ஏராளமான லாபமடைந்து வருகின்றன. இந்தியப் புகையிலையைக் கொண்டே இந்தியாவில் ஐரோப்பியக் கம்பெனிகளாலும் சிறிய இந்திய வியாபாரிகளாலும் தையார் செய்யப்படும் சுருட்டுக்கள் பீடிகள் போதாமல் சென்ற வருடம் வெளி நாடுகளிலிருந்து 600 கோடிக்கு மேற்பட்ட சுருட்டுக்கள் இறக்குமதி செய்யப் பட்டனவென்றால், இந்தியாவின் வறுமை நிலைமைக்கு வேறு காரணங்களும் தேடவும் வேண்டுமோ?

பழக்கமென்பது மனிதனுடைய பெரிய வைரியாகவும் அதே சமயத்தில் சிறந்த நண்பனாகவு மிருக்கின்றது. நற்பழக்கத்தால் விளையக்கூடிய நன்மைகளைக் காட்டினும் துர்ப்பழக்கத்தா லுண்டாகும் தீமைகளே அதிகமாயிருக்கின்றன. முதலில் விளையாட்டாகவும், பின் நாகரிக தோரணையாகவும் கொள்ளப்படும் பழக்கம் இறுதியில் விட்டொழிக்க முடியாத அத்தியாவசியமாய் மாறிவிடுகின்றது. மிக்க குளிர் தேசமான ஐரோப்பாவுக்குப் புகைக் குடி நன்மையைத் தருவதாயிருக்கலாம். ஆனால், அது உஷ்ணப் பிரதேசமாகிய இந்தியாவுக்கும் நன்மையைத் தரவேண்டு மென்பதில்லை. மற்றும் பல ஐரோப்பிய வைத்திய சாஸ்திரிகளே புகைச் சுருட்டுக் குடியைப் பலமாகக் கண்டனஞ் செய்வார்களானால், அக்குடி உஷ்ணப் பிரதேசத்திலுள்ள நம் மிந்தியருக்குச் சற்றுமேற்காத தென்பதிலென்ன ஐயமுளது?

புகைக் குடி மனிதனுடைய தேகாரோக்கியத்துக்குச் சற்றுமவசியமான தன்று. ஆனால், பழக்கத்தின் காரணமாக அது நாளடைவில் ஆகாரப் பொருளினும் இன்றியமையாததாக ஏற்பட்டு விடுகின்றது. திருடனும், வியபிசாரியும் கூடத் தாம் தாம் செய்யும் காரியங்களுக்குத் தகுந்த நியாயங்களும் ஆதாரங்களு மெடுத்துக் காட்டுவர். கட்குடியனைக் கேட்டால் அவன் தன் தேகக் களைப்பை ஆற்றிக் கொள்வதற்காக அக்குடி அவசியமானதெனக் கூறுகிறான். கஞ்சாக் குடியனோ தன்னுடைய கவலைகளை மறந்து ஆனந்த மனுபவித்து மனோ சாந்தி யடைவதற்காகக் குடிப்பதாகச் சொல்லுகிறான். காபிக் குடியனோ தான் மூளை வேலை அதிகமாகச் செய்ய வேண்டியிருப்பதால் அதற்காகச் சுறு சுறுப்புப் பெற வேண்டிக் காபிக் குடிப்பதாகக் கூறுகிறான். ஆனால், புகைச் சுருட்டுக் குடியனுக்கு இந்த போலிச் சமாதானங்கள் கூடக் கூறுவதற்கில்லை. சிலர் புகைக் குடி மலப் பிரவர்த்திக்கு அனுகூலமாயிருக்கின்றதென்றும் மலஜல விஸர்ஜனம் செய்யும் போதுண்டாகும் துர் நாற்றத்தை விலக்கி விடுகிறதென்றும் பரிகசிக்கத் தக்க சமாதானங்கள் கூறி விடுகின்றனர்.

ஒரு விஷயம் தீமையைத் தரக் கூடியதென நன்கறிந்திருந்தும், அதை விடாப்பிடியாக் கைக்கொளவதே பெரும்பாலான மானிடரின் இயற்கைக் குணமாக அமைந்துள்ளது. புகைக்குடியினால் விளையும் தீமைகள் பல. அது நமது சரீரத்தைச் சிறிது சிறிதாக விஷ மயமாக்கி விடுகின்றது. புகையிலையில் நிகோடைன் என்ற கொடிய விஷ வஸ்து இருக்கிறது. நிகோடைனை மிகச் சிறிய அளவில் உட்கொள்ளினும் வாந்தியும் பேதியும் மயக்கமுமுண்டாகின்றன. முதன் முதலாகச் சுருட்டுக் குடிப்போரிடமும் இவ்வித அடையாளங்களே காணப் படுகின்றன. ஒரு பவுண்டு எடையுள்ள புகையிலையில் 300 பேரைக் கொல்லக் கூடிய விஷ மிருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஒரு கிரைன் நிகோடைன் ஒரு மனிதனைக் கொல்லப் போதுமானது.

சுருட்டுப் புகை கண்ணெரிச்சலை உண்டுபண்ணுகிறது. அதன் வாசனை மிகவும் வெறுக்கத் தக்கதாயிருக்கின்றது.

அது ஹிருதயத்தைப் பலஹீனப்படுத்தி விரைவாகத் துடிக்கும்படி செய்து விடுகிறது. புகைச் சுருட்டுக் குடிப்பவர்களுக்கு வாசனை உணர்ச்சி குன்றிப் போய் விடும். இரத்த நாளங்களின் சுவர்கள் தடித்துப் போவதால் இரத்தம் எளிதாகச் சுத்தஞ் செய்யப் படாமற் போகின்றது.

அதனால் பற்கள் கெட்டுப்போய் உதடு வெடித்து வாயில் துர்க்கந்தம் வீசுகிறது.

அதன் பயனாய் ஜீரணப்பை கெட்டு அஜீரணம் சம்பவிக்கிறது. இரத்தத்தின் சிவப்புக் குறுகடங்கள் எண்ணிக்கையிலும் கனத்திலும் குறைந்து புஷ்டிக் குறைவும் வளர்ச்சிக் குறைவு மேற்படுகின்றன.

புகையிலையில் காணப்படும் நிகோடைன் விஷம் மென்மையான தேக அமைப்புள்ளவர்களுக்கு மிக்க தீமையை உண்டாக்குகிறது. சுவாசாசயத்தில் க்ஷய ரோகம் பற்றிக் கொள்ளுவது புகைக் குடியரிடமே பெரும்பாலும் காணப்படுகிறது.

நல்ல வயது வந்தவர்கள் சுருட்டுப் பிடிப்பதால் தேகாரோக்கிய மிழக்காதிருக்கின்றனரெனக் கூறப்படலாம். அவர்களும் இறுதியில் பல வியாதிகளால் பீடிக்கப் படுவதன்றி அவர்களுக்குப் பிறக்கும் சிசுக்

களும் பலஹீனமாகவே இருக்கும். சுருட்டுக்குடி பாலியர்களைத்தாம் அதிகமாகப் பாதிக்கின்றது. சிறுவர்கள் வளர்ச்சி பெற வேண்டிய காலத்தில் அவர்களுடைய சரீரம் தேவையான பிராணவாயுவைக் கிரகிப்பதற்குத் தடை உண்டாகிறதென வைத்திய சாஸ்திரிகள் பரீக்ஷைகள் செய்து நிரூபித்திருக்கின்றனர். சுருட்டுக் குடிக்கும் சிறுவரின் வளர்ச்சி முற்றிலும் தடைப்பட்டு விடுகின்றது. சில சிறுவர்கள் வளர்ச்சி யுள்ளவர்களாகக்காணப்படினும் தேகத்தின் ஏதேனுமொரு பாகமாவது வளர்ச்சி குன்றி வன்மை யிழந்தே காணப்படும்.

மூளையிலிருந்து வெளிப்படுத்தப்படும் அசுத்தங்கள் கழியவிடாமல் புகைக்குடி தடுத்துவிடுகின்றது. இதனால்தான் மூளை களைப்படைந் திருக்கும்போது புகைக் குடியினால் சுகம் தோன்றுவதாகக் காணப்படுகின்றது. சுருட்டுக் குடி மிகச் சிறுவயதிலேயே பின்பற்றப்படுவதன் காரணமாகப் பல நேத்திர ரோகங்களு முண்டாகின்றன. கண் பார்வை மங்கிப் போகின்றது; ஒரு பொருளைப் பார்த்த பின்னரும் அதன் பிம்பம் மறைந்துவிடுவதில்லை; கண்களுக்கு முன்னே பூச்சி பறப்பதுபோல ஒவ்வொரு சமயம் காணப்படுகின்றது.

புகைக் குடிப்பவர் வைத்தியர்களிடம் செல்ல நேர்ந்தாலும் சுருட்டுக் குடியைத் தவிர ஏனையவற்றையே பத்தியமாகக் கூறவேண்டுமென முன்னதாகவே கோரிக்கொள்கின்றனர். ஏன்? அவ்வழக்கம் அவர்களிடம் பசுமரத்தாணிபோல் வேருன்றி விட்டது. அவர்கள் அதன் அடிமையாய்ப் போய்விட்டார்கள். சுருட்டுக் குடிப்பவரின் உதடுகளைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். அவை மனத்தில் எவ்வளவு வெறுப்பை யுண்டாக்குகின்றன. அவர்கள் முன் பல் கறுத்தவர்களாய், சொக்கிருமல் கோழை முதலிய துன்பங்களுக் காளானவராய் இந்திரியம் தீர்த்துப் போய் மார் குவிந்தவர்களாய்ச் சிடு சிடுவென்ற குண முடையவர்களா யிருக்கின்றனர். இப்பழக்கமில்லாத மனிதரிடையே சுருட்டுப் பிடிக்கப்படும்போது அவர்கள் எவ்வளவு சொல்லொணா வேதனையை யடைகிறார்களென்பதைச் சுருட்டுக் குடிப்பவர்கள் கவனிப்பாரானால், தாம் எவ்வளவு வெறுக்கத்தக்க பழக்க முள்ளவரா யிருக்கின்றன ரென்பதை உணர்வர்.

தன் இரண்டு விரல்களுக் கிடையே மிக ஒய்யாரமாகச் சுருட்டைப்பிடித்து அதினின்றும் புகைக்குடித்துப் புகையை மிக லாயக்காகச் சுருள் சுருளாகப் போகும்படி வெளிவிட்டு ஆனந்திக்குங்கால் மனிதன் தன் உயிரையே தான் சிறுகச் சிறுகக் குடித்துக்கொண்டு வருவதை அறியாதவனா யிருக்கிறான். சுருட்டுத் தன்மட்டில் செய்யும் தீமைகள் பலவிருக்க அதன் சார்பாக உண்டாகக் கூடும் கெடுதல்களும்பல உள. புகைக் குடியினால் நெஞ்சுலர்ந்து நாவரண்டு மட்டற்ற வரட்சி ஏற்பட்டு விடுவதால் அது மதுபானத்துக்கு அடிப்படையாகவும் தூண்டுகோலாகவுமிருக்கின்றது. வேண்டப்படாத, அவசியமில்லாத, தீயதான இவ்வழக்கத்தை ஆண்களே யன்றிப்பெண்களும் கைக்கொண்டு வருவது இன்னமும் வருந்தத்தக்கதாகும். வெள்ளை ஸ்திரீகளிடம் சுருட்டுக் குடி சகஜமாகப் போய் விட்டது. இந்திய மாதருள்ளும் அவ்வழக்கம் தலைகாட்டிவருகின்றது. இந்தியச் சிறுவரைப்பற்றிக் கூற வேண்டியதில்லை. சுருட்டுக்குடிமார்க்க விரோதமானதாகக் கருதப்பட்ட மதத்தினர் கூட அவ்வழக்கத்தை மிக்க தாராளமாகக் கைக்கொண்டிருக்கின்றனர். நகரங்களிலுள்ள மாணவர் அதை ஒரு நாகரிகக் கோலமாகக் கொண்டு உயர்தர ஐரோப்பியச் சுருட்டுக்களையும் சிகரெட்டுக்களையும் உபயோகிக்கின்றனர்' கிராமாந்தரங்களிலுள்ள சிறுவர் தம் பெரியோரைப் பார்த்து இக்கொடிய வழக்கத்தை இளமையிலேயே பின் பற்றுகின்றனர். எல்லா இந்தியச் சுருட்டு, பீடிகளும் தயார் செய்யப்படு மிடங்களிலும் பத்து வயதுக்குட்பட்ட சின்னஞ்சிறு பாலியரே வேலைக் கமர்த்திக்கொள்ளப் படுகின்றனர். நாள் முழுதும் ஓயாது பீடி சுற்றிக் கொண்டிருப்பதால் அவர்களுக்குண்டாகக் கூடும் கெடுதல்கள் ஒரு புறமிருக்கப் பீடி பிடிக்கும் வழக்கமும் அவர்களுடைய வாழ்க்கையில் முதல் பாடமாக அமைந்து விடுகின்றது. பீடி சுருட்டு ஆலைகளில் பாலியரைச் சேர்த்துக் கொள்வதை அரசாங்கத்தார் தடுத்துவிடச் சட்டங்களேற்படுத்த முன்வர வேண்டும். புகைக் குடி தானாகவே இந்தியர்களிடம் பரவி வருவது போதாதெனப் பெரிய மூலதனம் படைத்த ஐரோப்பியக் கம்பெனிகள் விளம்பர யுக்தியாலும், பரிசுகள் மூலமாயும் ஏராளமான சுருட்டுக்களை விற்பனை செய்கின்றன. இந்தியாவில் பீடி வியாபாரத்தை ஒடுக்கி விகரேட்டுக்களைப் பீடியினும் விலை குறைவாக விற்கச் செய்ய மும்மர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

சுருட்டுக் குடியினாலுண்டாகும் வியாதிகளையும் அதனால் தேசத்துக்கு விளையும் நஷ்டத்தைப் பற்றியும் பிரலாபித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. நாம் தேசபக்தர்களாகச் சுருட்டைப் பஹிஷ்காரஞ் செய்ய வேண்டியதில்லை. அது சிறுவர்களின் வளர்ச்சியைத் தடுத்து வியாதிகளை உண்டாக்குவதற்காகவேனும் அந்த உயிர்க்கொல்லியை ஒழிக்க முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் அதனாலுண்டாகும் தீமைகளைப் பற்றிப் பலமாகப் போதனை செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் சங்கமொன்றேற்படுத்திச் சுருட்டுக் குடியை ஒழிக்கும் விஷயத்தில் பிரசாரம் செய்ய வேண்டும். எல்லாப் பொறுப்பும் பெரியோர்களையே சார்ந்திருக்கிறது. தம்முடைய தீய வழக்கங்கள் தம்முடைய சிறுவர்களுக்கு நிச்சயமாக ஏற்படுமென்பதைப் பெற்றோர் நன்கறிந்து அக்கொடிய வழக்கத்தை உடனே விட்டொழிப்பரென நம்புகிறேன்.

"தாருல் இஸ்லாம்"

சீனதேசத்தில் ஒற்றுமை:—மஞ்சூரியப் பிரதேசத் தலைவர்கள் சீன தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தீர்மானித்து விட்டனர்.

* * *

அமெரிக்காவில் அன்னிய நாட்டு நடிகர் ஆடக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பயனாய் 200 பிரிட்டிஷ் நடிகர் வெளியேற நேர்ந்திருக்கிறது.

* * *

பெல்ஜியத்திலுள்ள ஷெல்ட் என்ற நதியின் வெள்ளப் பெருக்கினால் சுமார் 7,000 எக்கர் பூமி ஜலத்தின் கீழிருக்கிறதாம். 10,000 பேர் வீடில்லாமல் தவிக்கின்றனர்.

* * *

மிகப் பெரிய ஆகாய விமான விடுதி:—இங்கிலாந்தில் கிராய்டனில் கட்டப்பட்டு வரும் ஆகாய விமான விடுதி உலகத்தில் மிகப் பெரியதாயிருக்குமாம். அதில் 50 விமானங்கள் ஏக காலத்தில் தங்கியிருக்கக் கூடுமாம்.

* * *

கல்கத்தாவில் சுத்தி:—கல்கத்தாவில் பண்டித மதன மோஹன மாளவ்யா தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த 250 பேரைச் சுத்திகரித்தாராம்.

* * *

இந்தியாவுக்கு 1947-ம் வருடத்தில் தான் சுயராஜ்யம் கிடைக்குமெனப் பூனா நகர ஜோதிஷ சாஸ்திரி ஒருவர் கூறுகிறார்.

* * *

நவீன க்ஷவர சாலை:—நாவிதத் தொழிலில் நிபுணரான ஒருவர் லண்டனில் ஒரு புது மாதிரியான க்ஷவர சாலை ஏற்படுத்தப் போகிறாராம். அந்தச் சாலை க்ஷவரக் கடையாகவே தோன்றாதாம். அங்கு செல்பவர் சுகமான மெத்தை நாற்காலிகளில் அமர்ந்து கொண்டதும் அவர்களிஷ்டப்படி க்ஷவரம் செய்து விடப்படுமாம். அந்தச் சாலையில் பல விதமான வாத்தியங்கள் காதுக்கினிமையாக இருக்கும்படி வாசிக்கப்படுகின்றனவாம். ஒவ்வொரு நாற்காலிக்கருகிலும் டெலிப்போன் பொருத்தப்பட்டிருக்கிறதாம். க்ஷவரம் செய்யப்படும் போதே டெலிபோனில் பேசலாமாம். அச்சமயத்தில் அவசர விஷயங்களைக் கவனிக்க வேண்டுமானால் அதற்கும் வசதியுண்டாம். க்ஷவரம் செய்து கொள்ளுபவர் கடிதம் அனுப்ப விரும்பினால் விஷயத்தைக் குறித்துக் கொண்டு டைப் அடிப்பதற்கு ஆட்களும், டைப் அடித்த கடிதத்தைக் கொண்டுபோகப் பையன்களும் தயாராய் வைக்கப் பட்டிருக்கின்றனராம்.

* * *

அல்மினியம் வியாபாரத்தில் பிரசித்தி பெற்ற சார்லெஸ் என்ற அமெரிக்கரின் சொத்து சுமார் 1 கோடி டாலர்களுள் ஒரு பாகம் இந்தியக் கல்லூரிகளுள் சிலவற்றிற்கு நன்கொடையாக அளிக்கப்படுமாம்.

* * *

பிரெஞ்சு அரசாங்கத்தாருக்குப் புகையிலையினால் சென்ற வருடம் அதிக வரும்படி கிடைத்ததாம். இந்த வரும்படி உயர்வதற்கு ஸ்திரீகள் சுருட்டுப் பிடிப்பதே காரணமாதலால் அரசாங்கத்தார் ஸ்திரீகளுக்கு வந்தனமளித்தனராம்.

* * *

இத்தாலி தேசத்தில் கிராமங்களிலுள்ள விவசாயிகள் நகருக்குள் குடியேறி வசிப்பதைத் தடுக்க ஒரு புதிய சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அப்படி வசிப்பவர்களுக்கு மூன்று மாதத் தண்டனையும் 6 மாதக் கடுங்காவலும் விதிக்கப்படுமாம். நகரங்களில் ஜன நெருக்கம் அதிகமாகிப் போகாதிருக்க இச்சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

* * *

ஜலதோஷத்தால் சாதாரணமாய்ப் பீடிக்கப் பட்டவர்கள் கழுதைக்கு மூன்று முத்தங்கள் கொடுத்தால் தீர்ந்து விடுமென இரண்டாயிரம்

[library stamp]

ஆண்டுகளுக்கு முன்னிருந்த வைத்திய சாஸ்திரி ஒருவர் எழுதி வைத்திருக்கிறாராம்.

* * *

இங்கிலாந்தும், ஐரோப்பாவிலுள்ள தேசங்களிலுமாக 572 உத்தியோகங்களில் 537 ஸ்திரீகள் வேலைசெய்து வருகின்றனராம். இதில் கொல்லர் வேலை, கருமான் வேலை, கல்லறுக்கும் தொழில் முதலியவையும் சேர்ந்தனவாம்.

* * *

சிரியா தேசத்தில், பால்பெக் என்ற இடத்தில் ரோம சக்கரவர்த்தி, அண்டோனியஸ் பையஸ் என்பவர் பண்டைக் காலத்தில் கட்டி வைத்துள்ள ஓர் கோயிலில் உலகிலே யுள்ள கற்களி லெல்லாம் மிகவும் நீளமான கற்கள் பல காணப்படுகின்றனவாம். இக்கோயில் இப்பொழுது பாழடைந்து கிடப்பதால், இவற்றின் நீளத்தைக் கண்டு பிடிக்க முடிகின்றதாம். சில கற்கள் 60 அடிக்குமேல் நீளமானதாகவும், 20 அடி சதுர அளவுள்ளனவாகவு மிருக்கின்றனவாம்.

* * *

சைனு தேசத்தில் பீகிங் நகருக் கருகே யுள்ள ஓர் கிராமத்தைச் சேர்ந்த நால்வர் ஒன்ருகச் சேர்ந்து, ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டுப் பருத்தி வாங்கினுர்கள். எலிகள் அதை அழித்து விடாம லிருப்பதற்காக அவர்கள் ஓர் பூனையை வாங்கி, அதை ஒவ்வொருவருக்குச் சொந்தமானதென வைத்துக் கொண்டனர். சில தினங்கள் கழிந்த பின்னர் பூனையின் ஓர்காலில் ஏதோ காயமேற் பட்டதால், அந்தக் காலின் சொந்தக்காரன் காயம்பட்ட இடத்தில் ஓர் எண்ணெய்த் துணியைச் சுத்திக் கட்டினுன். ஆனல் அப்பூனையோ அடுப்பண்டை சென்றதால் எண்ணெய்த் துணி தீப்பிடித்துக் கொண்டது. உடனே கிலி கொண்ட பூனை நாலா பக்கமும் ஓடி, பருத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கும் சென்றதால், பருத்தி பற்றி எரிந்து விட்டது. காயம்பட்ட காலுக்குரியவர் எண்ணெய்த் துணியைச் சுற்றியதால் தான், இவ்வளவும் ஏற்பட்டதென இதர மூன்று கால்களுக்கு முரிய மூவர் மேற்படி பேர்வழி மீது கோர்ட்டில் நஷ்ட ஈடு வழக்குத் தொடுத்தனர். ஆனல் நீதிபதி பின்வருமாறு தீர்ப்பளித்தார்:—

"காயம்பட்ட காலை பூனையால் உபயோகிக்க முடியாததால், அது இதர மூன்று கால்களிஞலேயே பருத்திபண்டை ஓடியிருக்க வேண்டும். ஆதலால் பருத்தி நாசமானதற்கு அந்த மூன்றிற்கும் சொந்தமானவர்களே பொறுப்பாளிகள். ஆதலால் அவர்களே நஷ்ட ஈடு அளிக்க வேண்டும்."

(ஸ்வராஜ்யா)

* * *

சீன தேசத்திலுள்ள சிவில் உத்தியோகஸ்தர் மாதச் சம்பள விவரம் பின்வருமாறு:—முதல் வகுப்பு 800 சீன டாலர்; இரண்டாவது வகுப்பு 450லிருந்து 675 வரையில்; மூன்ருவது வகுப்பு 350லிருந்து 400 வரையில்; ராணுவ ஜெனரல்கள் முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள்

* * *

மனிதர்கள் சுடுமூஞ்சிகளாக இருப்பதற்கு ஒரு காரணம், அவர்கள் உடம்பில் போதிய தண்ணீரில்லாம லிருத்தலாம். சாதாரணமாக உடம்பின் நிறையில் நாலில் மூன்று பங்கு தண்ணீரா யிருக்க வேண்டும். கோபம் அதிகமாக வரும் மனிதர்கள் தண்ணீர் நிரம்பக் குடித்தால் கோபந் தணிந்து விடுமாம்.

* * *

முதல் முதல் மனிதர் ஆகாய விமானங்கள் மீதேறி மேலே பறந்தது 24 வருஷங்களுக்கு முன்பாம். இந்த தினம் சமீபத்தில் லண்டனுக் கடுத்த சவுத் கென்சிங்டனில் கொண்டாடப் பட்டதாம். 1903 டிசம்பர் 17-ந் தேதி யன்று தான் வில்பர், ஆர்வைல் என்ற இரண்டு சகோதரர்களும் முதல் முதல் விமானங்களில் பறந்தார்களாம். இவர்கள் அப்பொழுது 12 வினடிகளுக்குப் பறந்தனராம்.

† * *

உலகிலேயே மிகச் சிறிய ஹோட்டல் பாரிஸ் நகரி லிருக்கின்றதாம். இதற்குப் பெட்டி ரோண்டு எனப் பெயராம். இதில் ஒரே ஒரு மேஜைதா னிருக்கிறதாம். இதில் 5 பேர்கள் உட்காருகிருர்களாம். நாளுக்கு நாள் அதிகம் பேர்கள் வந்து கொண்டிருக்கையிலும் இதன் சொந்தக்காரர் கட்டிடத்தை விஸ்தரிக்க மறுக்கிருராம்.

* * *

எல்லாவற்றையும் விட ஆங்கிலேய பாஷையில் தான் அதிக மொழிக ளிருக்கின்றனவாம். இதிலுள்ள மொழிகளின் தொகை இரண்டு லக்ஷத்து ஐம்பதாயிரமாம். சீன பாஷையில் ஆங்கிலத்தை விட எழுத்துக்கள் அதிகமாக இருந்தாலும் மொழிகள் பதினைந்தாயிரம் தா னிருக்கின்றனவாம்.

ஜெயம் ! ஜெயம் ஜெயம் !!!

ஸ்ரீ:



மஹா லக்ஷ்மி கவசம்.

உண்மையான பலனை யளிக்கத்தக்கது. இதை அணிந்து கொள்ளுவோருக்குச் செல்வம் பெருகும். அதிர்ஷ்டம் உண்டாகும். சரீர ஆரோக்கியம் ஏற்படும். எவ்விதமான வியாதியும் குணமாகும். துரதிர்ஷ்டம் தூரப்போய்விடும். நவக்கிரக பீடையைப் போக்கும். வழக்கில் ஜெயமுண்டாகும். வம்ச விர்த்தியாகும் பள்ளிப் பரீக்ஷையில் ஜெயமுண்டாகும். ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம்.

வாங்கியவர் என்ன எழுதுகிறா ரென்பதைக் கவனியுங்கள்:—

மகா லக்ஷ்மி அருளால் இவ்விடம் க்ஷேமம். தாங்கள் அனுப்பிய மூன்று கவசமும் கிடைத்தது. கவசத்தின் உண்மை இப்பொழுதுதான் தெரிந்தது. நான் நினைத்த காரியம் கை கூடி வருகிறது. மகா லக்ஷ்மி கவசத்தின் மகிமையை என்னால் சொல்ல முடியாது. அருள், அவ்விதம் என்னுடைய சிநேகிதருக்கு ஒன்று உடனே அனுப்பவும். நான் இன்னும் அநேக ஆர்டர்கள் என் மூலமாக அனுப்ப சித்தமாயிருக்கிறேன்.

என். எம். பரசுராம்,
G. P. O. சிங்கப்பூர்.

எம் மாரிமுத்து, Fortrose Estate, Gemas. 22-6-28ல் எழுதுகிறார்.

“ தாங்கள் 20-2-28ல் வி. பி. யில் அனுப்பிய கவசம் கிடைத்தது. மஹா லக்ஷ்மியின் கிருபையினால் எல்லாம் நன்மையாகவே இது வரையு மிருக்கிறது. என் சிநேகிதருக்கு ஒன்று வேண்டியிருப்பதால் இந்த லெட்டர் கண்ட க்ஷணம் கவசம் ஒன்று வி. பி. மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன் தங்கள் வி. பியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தங்கள் நம்பிக்கையுள்ள,

எம். மாரிமுத்து.

ஆயிரக் கணக்கானவர்கள் உபயோகித்து பலன் அடைகிறார்கள். பல நற்சாக்ஷி கடிதங்கள் குவிகின்றன. நீங்கள் ஏன் ஒன்று அணியக் கூடாது?

தங்கக் கவசம் ரூ. 7.

வெள்ளிக் கவசம் ரூ. 2.

ஆகையால் இன்றே எழுதுங்கள்.

மஹா லக்ஷ்மி கவசம் ஆபீஸ், : வேப்பேரி, சென்னை.

அபூர்வம்! ஆச்சரிய ஜோதியின் மஹிமை! உண்மை!!

"உங்கள் தலைவிதி"

பிர்ம்ம தேவனால் விதிக்கப்பட்டிருப்பதை உள்ளதை உள்ளபடி அறிவதற்கு தங்கள் ஜாதகம் பூரா நகலெழுதி அனுப்பினால்,

27 வித பாவ பலன்கள்

1. ரூபம், 2. சரீர தாருட்டியம், 3. தன சம்பாதனை, 4. வித்தை, 5. சகோதரம், 6. மாதா, 7. அம்மான், 8. பூமி சம்பாதனை, 9. சுகம், 10. வாகனம், 11. சந்தானம், 12. ரோகம், 13. கடன், 14. சத்துரு, 15. மனைவி, 16. மனைவி ஒற்றுமை, 17. மனைவி ரூபம், ஸ்வபாவம், ஆயுள், 18. மனைவியால் நிதிசேருதல், 19. ஜாதகரின் ஸ்வபாவம்: சிலயோகபாவம், 20. வயது, 21. பிதா, 22. பாக்கியம், 23. தொழில், ஜீவனம், 24. லாபம், 25. விரயம், 26. இருப்பிடம், மரிப்பிடம், 27. தற்கால வர்த்தமானம். இப்படியாக 27 வித பாவபலன்கள் விபரமாக எழுதி அனுப்ப தபால் ரிஜிஸ்டர் செலவோடு சார்ஜ் ரூபாய் 3-8-0. ஜாதகம் ராசி அம்சா சக்கரங்களுடன் ஆதி தசாயிருப்புடனும் நகலெழுதி அத்துடன் 1—0—0 அட்வான்ஸ் அனுப்ப வேண்டும்.

(1) சுத்த ஜாதகம் நாமே குறிப்பதானால் 1-0-0 (2) ஜனன நாழிகை சற்று முன் பின் சந்தேகமிருந்தால் லக்ன நிச்சயம் செய்து குறிக்க 1-0-0 (3) ஜாதகரீதி ஏதேனும் ஒரு பாவம் பிரமாண பூர்வமாக கவி, மேற்கோள்களுடன் தெரிவிக்க 1-0-0. (4) ஒரு ஜாதகரின் பூரா யோகபாவகம் கவி, மேற்கோள்களுடன் குறித்தனுப்ப 3-8-0. (5) தனசம்பாதனை எப்போது எந்தெந்த வழியில்? என்பதை குறித்தனுப்ப 2-0-0. (6) ஒரு மகா திசைக்கு 9 புத்தி வாரி பலன்கள் 2-0-0. (7) ஒரு புத்திக்கு 9 அந்தர்வாரி பலன்கள் 1-0-0. (8) ஒரு புத்திக்கு 9 புத்திகளுக்கும் வியாபார விடயமாக வியாபாரிகளுக்கு 2-0-0. (9) ஒரு மகாதிசையின் 9 புத்திகளுக்கும் அந்தர்வாரி பலன் 7-0-0. (10) ஒரு மகாதிசையின் 9 புத்திகளுக்கும் வியாபார சம்பந்தம் 15-0-0. (11) கஷ்ட பலன்களுக்கு கிரக சாந்தி விபரம் தெரிவிக்க 1-0-0.

"கல்யாணம்" என்பது ஆயிரம் காலத்து பயிர் போன்றது. சதி பதிகள் சந்தோஷமாக ஒற்றுமையுடன் நேசமாக வாழ்வதே பெரும் பாக்கியமாகும். ஆதலால் பொருத்த நிமித்தங்கள் பார்க்காமல்,

கல்யாணம் செய்து பின்னால் கஷ்டப்பட வேண்டாம்.

விவாகம் நடைபெறுமா? என்பதைத் தெரிந்து கொள்ளாமல், பல இடங்களுக்கு விரயத்துடன் சென்றலைந்து;

வீண் கஷ்ட நஷ்டப்பட வேண்டாம்.

(12) "விவாக விடயம்" விவாகம் நடைபெறுமா? நடைபெறும் காலம், பெண் இருப்பிடம் திக்கு, பெண்ணின் பெயரின் முதலெழுத்து, சொந்தம் அந்நிய பந்து விபரம், ரூபம், நிறம், குணம், சரீர தாருட்டியம், மனைவியால் பொருள் சேருதல், ஆயுள் இவைகளை விபரமாக தெரிவிப்பதற்கு சார்ஜ் ரூபாய் 1-8-0.

ஜாதக நகல் அனுப்பவும்.

(13) சதிபதி பொருத்தங்கள்: ஆண் பெண் ஜாதகங்களை சோதித்து 25 வித பொருத்தங்களும், அவற்றின் பலாபலன்கள் ஒவ்வொன்றுக்கும் விபரமாக தெரிவிக்க சார்ஜ் 3-8-0.

வி. பி. வேறு. ஆண் பெண் ஜாதக நகல்களோடு 1-0-0 அட்வான்ஸ் அனுப்ப வேண்டும்.

(14) முகூர்த்தக் கால நிர்ணயம் ஆண் பெண் ஜாதக ரீதிக்கு லக்னம் குறிக்க 1-0-0.

(15) பெண் ஜாதக ரீதிக்கு 27 பலாபலன்கள் 3-8-0.

நியாயமான 5 கேள்விகளுக்கு வி. பி. யில் 1—5—0. முன்பணமாக 1—1—0. ஜாதக நகல் அல்லது கடிதம் எழுதும் நேரம், பெயர் தெரிவிக்கவும்.

குறிப்பு:—இந்த விளம்பரத்தை உங்கள் நன்மைக்காக பத்திரப்படுத்தவும். ஒரு தரம் பரீக்ஷிக்க உண்மை விளங்கும். 27 வித பாவ பலன்கள் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. ரூபாய் 2-க்கு மேல் 4-க்குள்பட்ட ஆர்டருக்கு 1 ரூபாய் அட்வான்ஸும் அதற்கு மேம்பட்ட ஆர்டருக்குப் பாதி அட்வான்சும் அனுப்ப வேண்டும்.

சிங்கப்பூர், பினாங்கு, ஆப்பிரிக்கா F. M. S. முதலிய வெளிநாட்டிலுள்ளவர்கள் தபால் செலவுடன் பூரா தொகையும் முற்பணம் அல்லது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ஸ்ரீ சித்தேச்வர ஆச்ரமம்,

(வ) பள்ளி நேலியநூர் S.I.R., P. O. கன்டமங்கலம், தென் ஆற்காடு ஜில்லா.

சென்னையில்

சிறந்த சிற்றுண்டிச்சாலை!

கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு சுத்தமான பசுவின் நெய்யில் அன்றாடம் செய்யப்படும் அநேக வித பக்ஷணங்கள் ஹல்வா, பாதம் ஹல்வா, மைசூர் பாகு குலோப் ஜான், இன்னும் பல விதமான பம்பாய்—பெங்காளி மிட்டாய் தினுசுகள் ஒவ்வொருவர் சுவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ற முறையில் கிடைக்கும். நாவிற்கு ருசியும், மனதிற்கு இனிமையும் அளிக்கக் கூடிய பக்ஷணங்களில் முதன்மை பெற்றவை. - - -

இன்றே வந்து பாருங்கள்.

வெளியூர் ஆர்டர்களுக்கு வி.பி. யில் அனுப்பப்படும்.

Neo Ramakrishna Lunch Home.,

285, China Bazaar Road,

Next to Pachaiyappa's, MADRAS.

புத்துயிர்

நரம்புத்தளர்ச்சி தேக மெலிவு பலமின்மை வீரியக் குறைவு இவைகளால் நீங்கள் தளர்வடைந்திருந்தால் இன்றே ஒரு புட்டி

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்)

வாங்கி உபயோகியுங்கள் தேகத்தில் உள்ள எவ்வித வியாதிகளேயும் அறவே நீக்கி, போன பலத்தை மீட்டி புதிய ஊக்கம் காட்டி உங்களே உண்மையில் ஒரு புதிய மனிதனுக்கி விடும். இந்த அரிய ஔஷதம் கண்டு பிடிக்கப்பட்டு 30 வருஷங்களாக நல்ல பெயருடன் உலகில் நிலவி வருவதே இதற்குப் பெரியதொரு அத்தாட்சி.

விலே ரூ. 3—4—0.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

தபால் பெட்டி 287

சென்னே.

புத் துயிர் ! புதிய வாழ்வு ! ! நோயற்ற வாழ்வு ! ! !

நீங்கள் புதிய வாழ்வு, யௌவன வாழ்வு, ஆண்மை வாழ்வு, இன்ப வாழ்வு, நோயற்ற வாழ்வு அடைய விரும்புகிறீர்களா ?

“ நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ” என்பதை மறுக்க முடியுமா ?

உண்மையில் நீங்கள் நோயற்ற வாழ்வு, யௌவன வாழ்வு விரும்பினல் இன்றே,

“வீ ர சி ங் க லே ஹி ய ம்”

அனுப்பும் படி எழுதுங்கள். எவ்விதமான நோய்களும் சூரியனைக்கண்ட பனியைப் போல பறந்துவிடும்.

வீரசிங்க லேஹியம் இரத்தத்திற்குச் சுத்தியும் விருத்தியும் உண்டாக்கி நோய்களைத்தொலைத்து உடம்பை வஜ்ரம் செய்கிறது. எல்லா நோய்களையும் அகற்றவல்லது. தலைநோய், மந்தம், மயக்கம், முதலியவைகளைத் தடுக்கிறது. தாதுவிற்கு அதிசய அபார ஆச்சர்யப்படும்படியான வீரபலத்தைக் கொடுக்கிறது. மேக சம்பந்தமான சகல நோய்களையும் உடனே தொலைக்கிறது.

40 நாள் சாப்பிடக்கூடிய டப்பி **1**-க்கு ரூ. **4—8.**

பாக்கிங் தபால் செலவு இனம்.

☞ சிங்கப்பூர், பினங்கு, மலாய் ஸ்டேட் நண்பர்கள் மூன்று டப்பிகளுக்கு ஆர்டர் செய்தால், தபால் செலவு, பாக்கிங் செலவு இனம்.

மானேஜர் :—வைத்திய ஆஸ்ரமம் :: காசி.

வியாபாரி

வர்த்தக யுக்தி !

வர்த்தக தந்திரம் !!

வர்த்தக வெற்றி !!!

முதலியன

புகட்டும் ஒரு நூதனப் பத்திரிகை.

வியாபாரிகளுக்கு இதுவே உத்தம நண்பன்

வருஷ சந்தா அணா. **8.**

1929 **15**வ ஜனவரிமீ வெளிவரும். மாதிரிப் பிரதி இனம்.

மானேஜர்,

“ வியாபாரி ”

தபாற் பெட்டி 99, சென்னை.

A. S.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்ப மான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண் டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்கு பவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4. ஷை சேர் 1-க்கு ரூ. 3

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்த அணா 3.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ.1-8.

போன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாய்பு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201. மதராஸ்.

இரும்பு - - - - பெட்டிகள்

விலையில் குறைவும், உழைப்பில் சிறப்புமுள்ள இரும்பு பெட்டிக ளுக்கு, பிற இடங்களுக்குப் போகு முன்—எங்களை வந்து பாருங்கள். நீங்கள் கொடுக்கும் விலைக்கு அதி கம் மதிப்பிடக் கூடிய பெட்டிகள், எங்களிடம் கிடைக்கும்.

V. Doraisamy Mudaliar

58, Broadway, MADRAS.